## டாக்டர் ஜே. என். ராஜ ரத்தினம், பி. ஏ. எல். எம். எஸ்.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தை நெடுநாளாக உபயோகித்து வந்திருக்கின்றேன். அது மிக ஆரோக்கிய முள்ளதாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கின்றது. அதன் இனிமையான மணமும் எல்லோராலும் விரும்பத் தக்கதாயிருக்கின்றது.

உண்டாகலாம். ஆதலால் சிசுவுக்கும் உடல் சுத்தம் அவசியம் என்றறிய வேண்டும். குழந்தைகளைக் காலையில் சற்றேறக்குறைய எழு மணிக்கும், மாலையில் 5-மணிக்கும் இளவெந்நீரால் நீராட்ட வேண்டும். தண்ணீர் ஆகாது. தண்ணீரில் குழந்தைகளைக் குளிப்பாட்டினால் அவைகளின் கண்ணிற்குக் கெடுதி உண்டாகும். அதுவன்றி இயற்கையில் சிசுக்களின் உடற்சூடு பெரியவர்களுக்கு இருப்பதை விடக்குறைவு. ஆகையால் அவைகள் குளிர் தாங்க மாட்டாது. நீர்க்கோர்வை உண்டாகி அதன் மூலமாய் வியாதிக்கிடம் ஏற்படும். கைபொறுக்குஞ் சூடான இளவெந்நீரில் தான் குழந்தைகளை முழுக்காட்ட வேண்டும்.

பெண்களின் கைகள் வேலை செய்வதனால் தோல்தடித்து அதிக சூடுதாங்கக் கூடியதாயிருக்கிறது. ஆதலால் வெந்நீரின் சூட்டை அறிய வேண்டுமானால் வலக்கையை முடக்கி முழங்கையை வெந்நீரில் விட்டுப்பார்த்தால் சூட்டினளவு தெரியும். முழங்கையின் தோல் மிக மிருதுவானபடியினாலே அது தாங்கக் கூடிய சூடு சிசுவுந்தாங்கும். வெந்நீரை ஒரு பெரிய பாண்டத்தில் வார்த்துவைத்துக்கொண்டு பஞ்சையாவது மெல்லிய துணியையாவது நனைத்து, முதல் முதல் குழந்தையின் தலையிலும், பின்னர் உடம்பிலும் சிறுகச்சிறுகப்பிழிந்து விட்டு அதனாலேயே தேய்த்துக்கழுவ வேண்டும். செம்பினாலாவது, லோகணியாலாவது மொண்டு குபீரென்று வார்க்கக் கூடாது. இயன்ற வரையில் கொப்பூழ் கொடியும், அதைச்சுற்றியிருக்கும் துணியும் நனையாதபடி பதனமாகச்செய்து கொள்ள வேண்டும். கொப்பூழ் கொடி விழுந்து போன பிறகு குழந்தையை வெந்நீர் தொட்டிக்குள் கழுத்து வரை அமுக்கியேந்திக் கொண்டு முழுக்காட்டலாம். நீராட்டும் போது கைகால்களின் மடிப்புகள், காது முதலிய துவாரங்களைப் பஞ்சினாலாவது, துணியினாலாவது நன்றாய்த்தேய்த்துக் கழுவவேண்டும். செம்மையாய்க் கழுவாவிடின் அவைகளில் அழுக்குச்சேர்ந்து புண்ணுண்டாகும்.

பத்துமாதத்திற்கு முந்திப்பிறந்ததனாலாவது அல்லது மற்றெந்தக்காரணங்களினாலாவது குழந்தை அதிக மெலிவாய் அல்லது அதிக பலவீனமாயிருந்தால் ஒரு வேளை காலையில் மாத்திரம்

லாம் நன்றாய்த் துடைத்து விடுவது போதும். இருவேளையும் குழந்தைகளை உடல் முழுவதுங் கழுவ வேண்டியதில்லை. மாலையில் கழுத்துக்குக் கீழ்கழுவலாம். பனிக்காலத்திலும், மழைக்காலத்திலும் குளிர்ந்தகாற்றுப்படாமல் நீராட்ட வேண்டும். அழுக்கறத்தேய்த்துப்போதுமான வெந்நீர் விட்டுக்கழுவவேண்டும். முன்னால் தலையை நனைத்துப் பிறகு உடம்பின் மேல் வெந்நீர் விடவேண்டும். ஐந்து நிமிஷத்திற்கு மேல் குழந்தை நீரிலிருக்கவுங் கூடாது; அதற்குள்ளாக முழுக்காட்ட வேண்டும்.

கஸ்தூரி மஞ்சளாவது, பூச்சுமஞ்சளாவது தனியே தேய்த்து முழுக்காட்டக் கூடாது. அரிசி, மாவு, பயிறு மாவு, இலுப்பைப் பிண்ணாக்குப்பொடி சேர்த்துக் கொள்ளவேண்டும். குழந்தை ஆறு மாதமானபின் முழுக்காட்டும் வெந்நீரின் சூட்டை நாள்தோறும் குறைத்து வந்து, இரண்டு வயதாகுமுன் தண்ணீரில் முழுக்காட்டிப்பழக்கவேண்டும். பிறகு மழைக்காலம், பனிக்காலம் முதலிய குளிர் காலந்தவிர மற்றக்காலமெல்லாம் தண்ணீரே நலம். எப்போதுங்காலையில் குழந்தை விழித்தவுடனே நீராட்டிப் பிறகு உணவு கொடுக்கவேண்டும். உணவு ஊட்டினவுடனே முழுக்காட்டினால் செமிக்குந்தொழில் கெட்டு வியாதிவிளையும். குழந்தையை முழுக்காட்டினவுடனே ஈரம்போகவும், சூடுண்டாகவும் மெல்லிய துணியினால் உடம்பை விரைவாகத்துடைக்க வேண்டும். இதனால் தோலில் இரத்த ஓட்டம் அதிகப்பட்டுக்குழந்தைக்குச் சுகம் நல்கும். சந்துகள் மடிப்புகளில் சிறிதும் ஈரமின்றி நன்றாய்த் துடைத்துக் கண், மூக்கு, செவி, முதலிய உறுப்புகளை நன்றாய்த் துடைக்கவேண்டும். சிலர் உச்சியில் சும்மா ஊதிவிடுவது வழக்கம். அது போதாது. தலையில் மயிர் அதிகமாயிருந்தால் ஈரமின்றி நன்றாய்த் துடைக்கவேண்டும். பிறகு உடைகளைப் போட்டு, தாய் தன் மடியில் வைத்து மார் போடணைத்துப்பால் கொடுக்க வேண்டும்.

முழுக்காட்டும்போது குழந்தையைக்காலின் மேல் போட்டுப் புரட்டிப்புரட்டித்தேய்ப்பதனாலும், மூக்கை, காதைப்பிடிக்கிறதென்று, மூக்கையும் காதையும்பிடித் திழுப்பதனாலும், மிகச் சூடானவெந்நீரைப்பதைக்கப்பதைக்கக்குபீர்குபீரென்று மூச்சடங்கும் விதமாய் மேலேவார்ப்பதனாலும், குழந்தைக்கு அதிக



வருத்தமுந் திகிலு முண்டாகி, அது கூவென்று கத்தி அரை நாழிகை வரை விடாமல் அலறுகிறதை யாவரும் பார்த்திருக்கலாம். இது மிகக் கொடிய வழக்கம். குளிப்பாட்டுதல் குழந்தைக்கு மகிழ்ச்சியும் இன்பமுமாயிருக்க வேண்டியதல்லாமல் குழந்தைக்குப்பயங்கரமும் பெருந்துன்பமுமாய் மாறக்கூடாது. முழுக்காட்டத் துவங்கியவுடனே குழந்தை திகிலடைந்து கூச்சலிடுகின்ற வழக்கம் மிகக்கொடியது. இதை முற்றிலும் விட்டுவிட வேண்டும்.

மூக்கையும் காதையும் பிடித்திழுக்கும்போது வலிக்கிறதென்றாவது, மிக வெப்பமான வெந்நீரைக்குபீரென வார்க்கும் போது சூடு அதிகமென்றாவது, மூச்சடக்கக் கூடவில்லையென்றாவது குழந்தை தன் துன்பத்தைச் சொல்லிக்கொள்ளக் கூடாமையினால் அது தனது மொழியாகிய அழுகையினாலே தன் வருத்தத்தை வெளிப்படுத்துகிறது. இதையறியாமல் மேன் மேலும் அப்படிச் செய்யும் அறிவில்லாத தாய்மார்கள் இனியாவது இது கருணையற்ற மூடச்செய்கை யென்றறிந்து விட்டுவிடுவார்களாக.

குழந்தைகட்கு எண்ணெய் தேய்க்கிறதென ஆரம்பித்து. கண்ணுக்குக் கட்டுகிறதென்றும், தலையிலும், கண்களிலும், மூக்கிலும், காதுகளிலும் எண்ணெயைத்தளும்ப வார்த்துத்தலையைத் தானே நிமிர்த்திக்கொள்ளக் கழுத்தில் வலிவில்லாத சிசுவுக்கு உச்சியில் உள்ளங்கையை வைத்துத்தடதட வென்று கீரைகடையும் மத்துப்போலத் தலை நாலாபக்கமும் சுழன்று உருண்டு வரும்படி தேய்க்கிறதும், பெருவிரல்களினால் கண்களையும் மூக்கையும் அழுந்த அழுந்தத் தேய்க்கிறதும், காதுகளை உள்ளங்கைகளால் கரகரவென்று தேய்க்கிறதும் எவ்வளவு குரூரமான செய்கைகளென்பதை அறியாமற் செய்கிறார்கள்.

குழந்தை பிறந்து ஏழெட்டுமாதம்வரை தலை உச்சிக்குழியில் தோல்மாத்திரம் மூளையை மூடிக்கொண்டிருக்கும். அந்த இடத்தில் கையைவைத்து அழுந்தத் தேய்க்கும் போது மூளை கலங்கிப்போம். மூளை உயிர் நிலைக்கு முக்கியமான பொருளாதலால் அதற்கு ஒரு கெடுதி நேரிட்டால், சிசுவின் உயிருக்கே ஆபத்து நேரும். இதுவன்றி கண்ணானது உடலுக்கு மிகவும் அவ

சியமும் அருமையுமான உறுப்பாகும். அதை யிப்படி அனுவசியமாக அழுத்தி அழுத்தித் தேய்க்கும் போது விழியின் பின் புறதித்திருக்கும் கொழுப்புடன் கூடிய ஜவ்வை அது தாங்கக்கூடிய அளவுக்கு மிஞ்சி ஒரு சமயம் அழுத்தி விட்டால், உடனே கண்ணுக்கும், அதன் மூலமாய் உயிருக்கும் நஷ்டம் நேரிடும். அல்லது இப்படித் தேய்க்கும் போது கண்ணுக்கு அதிக நோயுண்டாகும். நோகிறதென குழந்தை சொல்ல மாட்டாமல் வீறிட்டழுகிறது மேலும் கண், மூக்கு, செவிகளுக்கு எண்ணெய் சுட்டுவதினால் பயனில்லை. இது வீண் வேலை. இவைகளெல்லாம் அறியாமையினால் செய்யும் செய்கைகள். இனிமேலாவது பெற்றோர் இத்தீய வழக்கங்களை விட்டு முந்திய பாகத்தில் சொல்லிய முறைப்படி குழந்தைகளை நீராட்டு விக்கல் வேண்டும்.

வெப்பம் மிகுந்த நமது நாட்டில், தோல் சற்று உலர்ந்து சுரசுரப்பாகும். ஆகையினால் முக்கியமாய் தலையிலும், சிறிது உடம்பிலும் எண்ணெய்ப்பூச விடுவது நலம். இரும்பு, யரச்சாமான்களுக்கு எண்ணெய் வருணம் பூசுவதுபோல எண்ணெயைத் தேய்ப்பது நன்றல்ல. ஏனென்றால் இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் சொல்லியபடி உடம்பிலிருந்து வியர்வை வெளியேறுங் குழாய்களினுள் எண்ணெயிறங்கி வியர்வைக்கால்களிலிருந்து வியர்வை வெளியேறாமல் அக்குழாய்களை அடைத்துவிடும். அப்போது வியர்வை உள்ளடங்கி நோய்க்கிடமாகும். சிகைக்காய், இலுப்பைப்பிண்ணாக்கு அரைப்பு முதலியவை தேய்த்துக்கழுவினாலும் மேலே யிருக்கிற எண்ணெய் போகுமேயன்றி, வியர்வைக் குழாய்களினுள்ளிருக்கும் எண்ணெய் வெளியேறமாட்டாது. ஆகையினாலே மிகுதியாக எண்ணெய் தேய்க்காமல் சற்று பதமிருக்கத்தக்க விதமாய் லேசாகத் தடவவேண்டும். அதையும்சிகைக்காய்அரைப்பு அல்லது (சோப்பு) சவர்க்காரம் தேய்த்துக்கழுவினால் எண்ணெய் கழிந்து விடுவது மன்றி, தோலும் அழுக்கறச் சுத்தமாகும். வெள்ளைக்கார குழந்தைகளுக்கு எண்ணெய் ததும்பத் தேய்க்கப்படுகிறதா? கண், மூக்கு,செவிகளில் எண்ணெய் கட்டப்படுகிறதா? மஞ்சள் குங்குமம் தேய்க்கப்படுகிறதா? இல்லை! நமது குழந்தைகளைப், அவர்களுடைய குழந்தைகள் நன்றாயிருக்கின்றனவே! அவை



களுக்கு ஒரு நோயுமில்லையே! இனிமேலாவது இதனை நினைத்துப் பாருங்கள்.

தலை முழுக்காட்டும் போது குழந்தை அழாமல் மகிழ்ச்சியாய் விளையாடும்படி செய்விக்க வேண்டும். அப்படி செய்யுந் தாய் தான் அறிவுடையவள். திடீரெனவெந்நீரை வார்க்காமல்மெள்ளத் தலையை நனைத்து அப்பால் படிப்படியே உடம்பில் நீரை அள்ளிச் சிறுகச் சிறுக விடவேண்டும்.

வைத்தியருடைய அநுமதியின்றி இலை தழைகளைப் போட்டு வேக வைத்த நீரில் முழுக்காட்டக் கூடாது.

குழந்தைகளுக்கு நீராட்டு விப்பதில் அநுசரிக்க வேண்டிய முறைகள்:—

குழந்தைகள் இரண்டு வயதாகுமட்டும் அதிகாலையில் ஆகாரங் கொடுக்குமுன் முழு உடம்பும், மாலையில் ஐந்து மணிக்கு கழுத்துக்குக் கீழ் கண்ட முழுக்குஞ் செய்விக்க வேண்டும். ஆரம்பத்தில் [illegible] வரைக்கு அதிகப்படாத இள வெந்நீரும், ஆறு மாதத்திற்கு மேல் வரவர சூட்டைத் தணித்து இரண்டு வயதாகும் பருவத்தில் குளிர்ந்த தண்ணீரும் உபயோகப்படுத்த வேண்டும். தலையை முதலில் நனைத்துப் பிறகு உடலை நனைக்க வேண்டும். சோப்பினால் சந்துக்கள் மடிப்புகளெல்லாம் நன்றாய்த் தேய்த்துக் கழுவவேண்டும். மெல்லிய துணியினாலாவது பஞ்சினாலாவது உடம்பைத் தேய்த்துச் சுத்தஞ் செய்ய வேண்டும். ஐந்தாறு நிமிஷத்திற்குள் நீராட்டி உடம்பை நன்றாய்ச் சூடாகும்படி மெல்லிய சல்லாவினால் விரைவாகத் தேய்த்து ஈரமின்றித் துடைக்க வேண்டும், உடனே தூய்மையான காய்ந்த உடுப்புகளை உடுத்த வேண்டும்.

**தகாத செய்கைகள்:—**

காலில் கிடத்திக்கொண்டு புரட்டி உருட்டித் தேய்த்து காதை மூக்கைப் பிடித்திழுக்கிறதினால் காது செவிடாகக் காரணமுண்டு. அதிகச் சூடான வெந்நீர் வார்க்கிறதனால் பலவீனமுண்டாகும் எண்ணெய் ததும்பத் தேய்க்கிறதினால் வியர்வை உள்ளடங்கி நோயுண்டாகும். நன்றாய் அரைபடாத சிகைக்காய் அரைப்பு, மஞ்சள் மாவுகள் தேய்க்கிறதினால் தோல் சுரசுரப்பாகும், காயப்படும்.

அவை கண்ணில் விழுந்தால் கண்நோவுண்டாகும். கண்ணில் கண்ட எண்ணெய்களைக் கட்டுகிறது கண்ணுக்குக் கெடுதி. குபீரென நீரை வார்க்கிறதினால் மூச்சுத் திணறிக் குழந்தைக்குத் திக்குண்டாகும். குளிர்ந்த நீர் வார்க்கிறதினால் இரத்த ஓட்டம் உள்ளடங்கி வியாதி நேரிடும். மேற் கூறிய செய்கைகளை முற்றிலும் தள்ளவேண்டும். இவைகளெல்லாம் தீமையென்றறியாமல் செய்து, சிறு குழந்தைகளை துன்புறுத்தி, நோயாளியாகச் செய்கிறார்கள்.

## 5-ம் அத்தியாயம்

**உடை:**—முந்தின அத்தியாயத்தில் சொல்லப்பட்ட தோலானது உடம்பையும், இரத்தத்தையுஞ் சுத்தி செய்யும் கருவியாயிருக்கின்றது. ஜீவாதாரமாகிய இந்தப்பெரிய வேலையை அது ஒழுங்காகச் செய்து வருவதற்காக அதைச்சுத்தமாகவும், வெப்பம் குளிர்ச்சி இவைகளால் அதன் வேலைக்கு இடையூறு நேரிடாமல் ஜதனமாகவும் காப்பாற்ற வேண்டியதவசியம். பரிசபுலனுக்கடுத்த நரம்புகளும், வியர்வைக்குழாய்களும் தத்தம் வேலைகளைச் செய்து ... தோலுக்கு மிகுதியான இரத்த ஓட்டமிருக்கிறது. குளிர்ந்த காற்று உடம்பில் தாக்கும்போது இரத்த நரம்புகள் சுருங்கி அவைகளிலுள்ள இரத்தமெல்லாம் உடலினுட்புறம் ஒடுங்குகிறது. ஆதலால் வியர்வையும், தோலினின்றும், மயிர்க்காலினின்றும் கழியும் கெட்ட காற்றும் வெளியேறாமல் நின்று போகும். இதனால் குண்டிக்காய்கள் எனும் பிருக்கம், மிகுதியான சிறு நீரையும், நுரையீரல் அதிகமான ஆவியையும் வெளியேற்றும்படி கஷ்டப்பட வேண்டியதாகும். சுவாசிப்பதும் வருத்தமாயிருக்கும். மேலும் தோலின் மேல் வெப்பக் காற்று தாக்கினால், இரத்த நரம்புகள் விரிந்து, இரத்த ஓட்டம் மிகுந்து அதிக வியர்வை உண்டாகும். அதனால் நுரையீரலுக்கும், பிருக்கத்துக்கும் வேலை சற்று எளிதாகும். ஆனால் நெடு நேரமாவது அல்லது அடிக்கடியாவது இப்படி அதிக வியர்வைக்கு இடங்கொடுத்தால் சீக்கிரம் பலவீனம் ஏற்பட்டு வியாதி நேரிடலாம். ஆகையினாலே குளிரும் வெப்பமும் சமமாயிருக்கும்படி குழந்தைகளுக்குத் தகுந்த உடுப்புகள் போட்டு வர வேண்டும். இது தெரியாமல் நம் நாட்டுப்பெண்கள் குழந்தை



மூன்றுதான். ஆகவே, நமது நண்பர்களனைவரும் இம் மருத்துவனுக்கு நல்வரவு கூறி, பண்டிட் ஆனந்தம் அவர்களை அத்துறையில் நற்பணி யாற்றுமாறு ஊக்குவார்களென்று நம்புகிறோம்.

## லோகோபகாரியின் அபிப்பிராயம்

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் பெரிதும் ஊக்கம் கொண்டுழைப்பவரும், மருத்துவ குலத் தலைவரும், செந்தமிழ் அறிஞருமான பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தரை ஆசிரியராகக்கொண்ட "மருத்துவன்" என்ற மாதப்பத்திரிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம். மக்கள் நல்வாழ்விற்கு இன்றியமையாத பல அரிய பொருள்கள் இதில் மலிந்து கிடக்கின்றன. அன்பர் ஆனந்தரின் அறிவும், திறமையும் மருத்துவன் பத்திரிகை வழி பரவவும் மக்களுக்குப் பயன்படப் போவதுபற்றி நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். மருத்துவனைப் பலவழிகளிலும் ஆதரிப்பது தமிழ் மக்கள் கடனாகும்.

## தமிழ்நாடு அபிப்பிராயம்

நம்நாட்டு சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்றபடி அனுபவத்தில் கையாளப்பட்டு வந்த நம்நாட்டு வைத்திய முறைகள், நம்நாட்டு நிலைமைக் கொவ்வாத மேனாட்டு நாகரிகமும், வைத்திய முறைகளும் இங்குப் பரவ ஆரம்பிக்கவே, க்ஷீணதிசையடைய ஆரம்பிக்கலாயிற்று. இந்நிலைமைகண்டு சகிக்காமல் தமிழ்வைத்தியத்தைப் புனருத்தாரணம் செய்யும் நோக்கத்துடன் கடந்த ஏழு ஆண்டுகட்கு முன்னர்த் தென்னிந்தியமருத்துவசங்கமென்றொன்றை ஸ்தாபித்து, அதன் ஆதரவில் இரண்டு, மூன்று மகாநாடுகள் கூட்டி அதில் தீர்மானித்தபடிக்கும், மற்றும் தமிழர்கள் பலர் வேண்டுகோளுக்கிணங்கியும் "மருத்துவன்" என்ற பெயருடன் மருத்துவகுல திலகமான பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் ஓர் பத்திரிகை ஆரம்பிக்க முன்வந்துள்ளார். நோய்க்குள்ள காரணங்களாக எண்ணப்படும் பலவித மூட நம்பிக்கைகளை யறவே யொழித்து, சிசுஜனன முதற்கொண்டு ...த்தாப்பியதிசைவரை நாம் கையாள வேண்டிய உண்மைவழிகளைப் ...ன தமிழ் சித்தர்கள் அனுபவித்துக் கூறிப்போனவற்றையெல்லாம் ...மூலம் தமிழ்மக்களுக்கு வெளிப்படுத்தி "நோயற்ற வாழ்வே ...செல்வம்" என்ற பழமொழிக் கிணங்க ஊழியம் புரிவதே இப் ...வந்த பிரதான நோக்கமாகும். நமக்குக் கிடைத்துள்ள மேற்படி ...சிறந்த' முதல் இதழில் அயத்தின் குண விசேஷ, உபயோகம் ...யின் 'பாலர் பரிபாலனம்'' என்ற தலைப்பின் கீழ் மருத்துவச்சி ...ராகச் சேப்பத்திகாலத்தில் வீட்டு மாதர்கள் பக்கத்திலிருந்து

## திராவிடன் அபிப்பிராயம்

மருத்துவன் என்னும் ஒரு மாதப்பத்திரிகை, பார்ப்பனரல்லாத
லேவர்களி லொருவராகிய பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின்
பூசிரியத் தலைமையின் கீழ் வெளிவந்துள்ளதைக் கண்டு நாம் அளவிலா
.வகை யெய்துகிறோம்.

"ஒன்று ஒன்றாக நூறு" என்று சொல்லும் பழமொழிக் கேற்ப ஒவ்
வொரு வகுப்பும் முன்னேறினால்தான் சமுகம் முன்னேறும் ; சமுகம்
முன்னேற நாடுமுன்னேறும்; நாடுமுன்னேற தேசம்முன்னேறும்; தேசம்
முன்னேறத் தன்னரசு கைகூடும். இது மலையிலக்கு. ஆகவே, பண்டை
நாளிலிருந்து மக்கள் தொகுதிக்குத் தொண்டாற்றிவரும் பழங்குடித்
தமிழ்மக்களாய மருத்துவ வகுப்பினரைக் கைதூக்கும் கருத்துடன்
வெளிவந்துள்ள இம் "மருத்துவன்" இனியுங் காலந்தாழ்த்தாது தோன்
றியது குறிப்பிடத் தக்கதாகும்.

அகத்தியரும், தேரையரும் வாழ்ந்த நாடென்றும், வாகடம் வாய்ப்
பாடமாக இருந்த நாடென்றும் போற்றிப் புகழ்ந்து கொள்ளுகிற இத்
தமிழ் நாட்டில், ஒரு காலத்தில் வீட்டிற்குரிய சிறு வைத்திய முறைகளை
யெல்லாம் அவ்வப்போது பாட்டிமார்களும், முதியோர்களும் தேர்ந்த
பண்டிதர்களின் உதவியின்றியே திறமையுடன் செய்து வந்திருந்தா
லும், திரிகடுகம், ஏலாதி என்ற பெயரோடு மருத்துவமுறையின் சிறப்
பைக் குறிப்பிப்பதுபோல் நீதிநூல்கள் எழுதி இருந்தாலும், தற்கா
லத்தில் வைத்தியத்திற்காகும் பண்டங்களின் உருவமும் பெயருங்கூடப்
பலருக்குத்தெரியாது என்று நிச்சயமாகக்கூறும் கீழ்நிலைக்கு நாம் வந்து
விட்டிருக்கிறோம். இத்தகைய ஓர் இழிநிலையில், உ[illegible]காலாகத்
தோன்றிக் கற்றோர்க்கும், மற்றோர்க்கும், முக்கியமாகப் பெண்பாலோர்க்
கும், வைத்தியத்தின் முக்கிய பகுதிகளையும், ஒவ்வொரு பொருளிலு
முள்ள மருந்திற்குரிய தகுதிகளையும் தெள்ளத்தெளிய எடுத்துப் புகட்
டவந்த மருத்துவன் இதற்கு முன்னரே வெளிவராததைப்பற்றி வருந்து
கிறோம். கருவிலே அழிவதாயும், கழிந்திடாதழிவதாயும், பரிணமித்தழிக்
தாயும், பாலனுபழிவதாயும், அரிதிற்பெற்ற குழந்தைகள் ஆயிரக்கண
க்த் தினந்தோறும் மக்கள் அறியாமை காரணமாக மடிகிற இந்நாளில்
மருத்துவன் அனைய ஒரு பத்திரிகை மேற்கொண்டு ஆற்ற
மிகவும் சீரிய தொண்டாகும் என்று அதன் கண்ணுள்ள
னம்" என்ற பகுதியைப் படிப்பார்க்குப் புலனாகும்.
வொருகுடும்பத்திற்கும் எய்ப்பினில் வைப்பாகும்.

இத்தகைய நன்மைப் பொக்கிஷமாக வெளிவந்து
[illegible] நிற்கின்ற] மருத்துவனின் சந்தா ஆண்டு

கிச்சை செய்வதற்கான வழிகளையும் எளிய நடையில் விளக்கியிருப்பதால் எல்லாப்பெண்களும் படித்து ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளலாம். நோய்வந்தபின் வைத்தியர்களைத் தேடியலைவதைவிட,வருமுன் காத்துக்கொள்வதே புத்திமான்களுக்கழகு. இப்பத்திரிகையைத் தவறாது படித்து அதன்படி அனுஷ்டித்து வருபவர்கள் மேற்கண்ட பலனையடைவதுடன், நோயற்ற சுக வாழ்க்கையை யெய்துவதும் திண்ணம். எனவே, இப்பத்திரிகை சிறப்பாக மருத்துவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஓர் அரிய பெரிய வைத்தியாது உதவியை அளித்து வருமென்பதே நமது அபிப்பிராயம். இதன் ஆசிரியர் பண்டிட். எஸ். எஸ் ஆனந்தமவர்களாகும்.

## குடிஅரசின் அபிப்பிராயம்

"மருத்துவன்," இப்பெயர்கொண்ட வைத்திய மாதப்பத்திரிகை ஒன்று வரப்பெற்றோம். இப்பத்திரிகை வைத்தியத்துறையில் பன்னெடுங் காலமாகப் பாண்டித்யம்பெற்ற பரம்பரையைச் சார்ந்தவரான திருபண்டிதர் எஸ். எஸ் ஆனந்தம் அவர்களின் தலைமையில் நடைபெறுவதாகும்; அவரே இப்பத்திரிகையின் ஆசிரியருமாவார். பண்டிதர் அவர்கள் பல்லாண்டுகளாகத் தமிழ் (சித்த) ஆயுர்வேத,யூனானி,ஆங்கில முதலியவைத்தியமுறைகளில் அனுபவம் மிகுதியும்பெற்று விளங்குபவராவர். தமிழ் நாட்டுப் பழைய வைத்தியமுறையை மீண்டும் நிலைபெறச்செய்து வரும் வகையில் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளாகப் பாடுபட்டுச் சித்த வைத்தியத்தை அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டு அதனை ஆதரிக்கும்படி செய்தவராவர். இப்பண்டிதர் "மருத்துவன்" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராகவும், அதிபதியாகவுமிருந்து நடத்த முன்வந்தமை தமிழ் வைத்தியம் இனித் தலைதூக்குமென்பதற்கு அறிகுறியாகும். "மருத்துவன்" முதல்பத்திரிகையில் அரியபெரிய விஷயங்கள் பல காணக்கிடக்கின்றன. பாலர் பரிபாலனம், உணவும் உடல் வலிவும், அயம் அல்லது இரும்பு முதலிய தலையங்கங்களோடு கூடிய விஷயங்கள் பொன்னேபோல் போற்றற் குரியனவாகும். இவற்றில் பாலர் பரிபாலனம், என்னும் விஷயத்தை முக்கியமாய் நமது நாட்டார் அனைவரும் படித்தறியவேண்டும். குழந்தைகளை ஒழுங்காகப்போற்றி வளர்த்துப் பெரியவர்களாக்க விரும்புவோர் ஒவ்வொருவரும் பாலர் பரிபாலனத்தைப் படித்தல் நலம். வைத்திய ஞானம்பெற்றுத், தங்களுக்கும் பிறருக்கும் நோயணுகாமலிருப்பதற்கும், வந்தநோயைப் போக்கிக்கொள்ள இஷ்டப்படுவோருக்கும்"மருத்துவன்" சிறந்த துணைவன் என்றே சொல்லலாம். இத்தகைய அரிய பத்திரிகையின் வருஷ சந்தா ரூபா மூன்றுதான். இப்பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர விரும்புவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவேண்டும்.

# அறுவையில்லாத அற்புத வைத்தியம்

---

ஐயா,

எனக்குத் தொண்டையில் ஓசை நரம்பு உணர்ச்சி அற்றுப் பேசுவதற்குக் கொஞ்சமும் முடியவில்லை. எவ்வளவு அருகிலிருப்பவர்கட்கும் நான் பேசுவது காதில் சிறிதும் கேட்காத நிலையில் மிக வருந்தினேன். எனக்கு ஆகாரம் விழுங்குவதற்குச் சக்தி யில்லாமலிருந்தது. இந்த நிலையில் 25-4-28 ஆம் நாள் சென்னை, ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன் அங்குள்ள டாக்டர்கள் E. N. T. டிபார்ட் மெண்டில் குளோரபாரம் கொடுத்துச் சோதனை செய்து பார்த்தார்கள். பார்த்தபின்னர் எனக்குத் தொண்டையில் ஓசை நரம்பு உணர்ச்சி அற்றுவிட்ட தென்றும் தொண்டையில் ஒரு பக்கத்தில் சதை வளர்ந்திருக்கிறதெனவும், அதற்கு ஆப்ரேஷன் செய்யவேண்டுமெனவும், சதைவளர்ச்சியை அறுத்தெடுத்தாலும், பேசுவதற்குரிய ஓசை நரம்பு ஒருபக்கம் அறுபட்டுவிடுமாதலால் பேசுவதற்கு வைத்தியம் செய்ய முடியாதென்றும் சொன்னார்கள். பின்னர் சென்னைத் தமிழ் மெடிகல்ஹால் சொந்தக்காரர், பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்பிள்ளை அவர்களிடம் காண்பித்ததில் அறுக்க வேண்டியதில்லை எனச் சொல்லி அவர் தன்னுடைய மேகநிவாரணி என்னும் மருந்தும், மற்றொரு பஸ்பமும் கொடுத்தார். அதை நான் பத்துநாள் சாப்பிட்டதில் எனது நோய் முற்றும் நீங்கி நானும், எனது வீட்டார்களும், எனது ஆபீசிலுள்ள நண்பர்களும் ஆச்சரியப்படும்படி சுகமாக பழைய குரலோசையோடு என்னால் பேசமுடிந்தது. இவ்வருமையான மருந்தை மிக மகிழ்ச்சியோடு ஜனோபகாரமாக எல்லோருக்கும் தெரிவிக்கின்றேன்.

**T. K. கணேசய்யர்,**

கிளார்க்கு

மெட்ராஸ் எலக்ட்றிக் சப்ளை கார்பரேஷன் லிமிடெட், மெட்ராஸ்.

மேகநிவாரணி மருந்து கிடைக்கும் இடம்

தமிழ் மெடிகல் ஹால்,

221 தங்கசாலைத்தெரு, சென்னை.


# மருத்துவன்

## தமிழ் வைத்தியப் பத்திரிகை

மலர் க. } 1928ளு நவம்பர்மீ { இதழ் உ.


## கீழ்நாட்டு மருத்துவமும், மேல்நாட்டு மருத்துவமும்.

மேல்நாட்டாரின் மருத்துவ முறையின்படி இங்கிலீஷ் 'டாக்டர்கள்' என்னும் ஆலோபதி மருத்துவர்கள், நோய்களைக் கண்டு பிடித்தற்கு மக்களின் இரிகம் (நெஞ்சப்பை) நெகிழ்ந்து சுருங்குவதனால் உண்டாகும் ஓசையை ஸ்டெதஸ்கோப் (Stethoscope) என்னும் ஒலிக்குழலைக் கொண்டு காதால் கேட்டுப் பழகுகிறார்கள். உடம்பின் வெப்பத்தைத் தர்மாமீட்டர் (சூடாறி கருவி) என்னும் இரசக் குழலால் ஒருவாறு அறிகின்றார்கள். அவர்கள் இக்கருவிகளையே நோய்களைக் கண்டு பிடித்தற்கு முதல் வழியாகக் கொண்டுள்ளார்கள்; மேற்கண்ட கருவிகள் இல்லா விடத்து அவர்கள் நோய்களைக் கண்டு பிடித்தற்கு இயலாதவர்களாகின்றார்கள். ஆனால், தமிழ் மருத்துவர்கள் தமக்கு வேறாக வேறொரு கருவியின் உதவியின்றித் தம் கைவிரல்களாலேயே நோயாளியின் கைநாடியின் துடிப்பைப் பார்த்தும், மற்ற குறிப்புக்களைப் பார்த்தும், வாத, பித்த, ஐயமெனும் வளி, தீ, நீராகிய முப்பொருள்களின் நிலைமையையும் உணருகின்றார்கள். நெஞ்சுப்பை, மூச்சுப்பை, ஈரல், குடல், பிருக்கம் (மூத்திரபிண்டம்) முதலிய உள்ளுறுப்புக்களின் நிலைமையையும், அவைகளைப் பற்றிவரும் நோய்களையும், காண்கின்றார்கள். இவர்கள் ஆலோபதி மருத்துவர்களைக் காட்டிலும் மேலாக நோய்களை நிச்சயிக்கின்றார்கள். இதனை நாம் இன்றும் கண்கூடாகக் காண்கின்றோம்.

ஆலோபதி மருத்துவர்கள் உடம்பிலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்தி இரத்த சோதனை செய்கின்றார்கள். தமிழ் மருத்துவர்கள் இரத்தத்தின் நிலையையும், நோய்களையும் இரத்தத்தை எடுத்துப்பார்க்

காமல் மேற்கண்ட சோதனைகளால் நிச்சயித்து நோய்களை நீக்குகின்றார்கள். ஆலோபதி மருத்துவர்கள் கால் ஒடிந்தவர்களுக்கும், கை ஒடிந்தவர்களுக்கும் ஒடிந்த பகுதியை வெட்டி எடுத்துவிடுகிறார்கள். நாட்டு மருத்துவர் ஒடிந்த எலும்புகளையும், நொறுங்கிய எலும்புகளையும் ஒன்று சேர்த்து ஒட்டும்படி. மேல் மருந்தாலும், உள்மருந்தாலும் வைத்தியம் செய்கின்றார்கள். ஆலோபதி மருத்துவர்கள் அறுத்து மருத்துவம் செய்யவேண்டுமெனக்கூறும் நோயாளர்களில் பலருக்குத், தமிழ் வைத்தியர்கள் அறுக்காமலே வைத்தியம் செய்து நோய் நீக்குகின்றார்கள். ஆதலால், ஆலோபதி வைத்தியர்கள் சித்த வைத்தியத்தையும் கற்பது இன்றியமையாததாகும். அதன்பிறகுதான் மேனாட்டுப் புதிய மருத்துவ நூலுக்கும், இந்தியப் பழைய மருத்துவ நூலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை உலகம் அறியும்.

மேல்நாட்டாருடைய மருத்துவநூல் பரு (ஸ்தூல) ப்பொருள்களைப்பற்றியே நிற்பது. ஆனால், நம் நாட்டு மருத்துவ நூல் நுண்பொருளாகிய யோகஞானத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. அறிவின்மயமாகிய சித்த மருத்துவ நூலின் பெருமையை யாரே அறிதற்கு வல்லார்! அவ்வித்தகச் சித்தர்களல்லரோ நம்மருத்துவ நூலின் பெருமையை அறியவல்லவர்? அவர்களே நாடியை முற்றும் அறிவர். இதனை, "நாடி முற்றும் அறிந்தவர் சித்தரே" என்ற பாடலாலும் நன்குணரலாம்.

"எழுபத்தீராயிர நாடியவற்றுள்
முழுபத்து நாடிமுதல்"

எனவும்,

"சொல்லிய உந்திதன்னில் சுழிந்ததோர் எழுத்தைப்பற்றி
எல்லையி லெழுந்தநாடி எழுபத்தீரா யிரத்துள்
வல்லவர் புகலுநாடி பத்ததில் ஏழுநீக்கி
நல்லதோர் நாடிமூன்றும் நலமுடன் அறிந்துபாரே"

எனவும்,

சித்தர் கூறுகிறபடி மக்கள் உடம்பில் எழுபத்தீராயிரம் நாடி நரம்புகளிருக்கின்றன; அந்நாடிகளெல்லாம் பத்து நாடிகளில் அடங்கும். அப்பத்து நாடிகளும் மூன்று நாடிகளில் அடங்கி ஒடுங்குமென்பது நம் சித்தர்கள் கண்டறிந்த உண்மையாகும். இந்நாடி, உயிர்ப்புடன் (மூச்சுடன்) கலந்து பிரியாமல் நடைபெறுகின்றன. நாளொன்றுக்கு (இரவு பகல்) மூக்கின் வழியாக நடைபெறும் மூச்சு இருபத்தோராயிரத்து அறுநூறு. அதில் ஒரு தடவை வெளிப்படும் மூச்சின் அளவு பன்னி



ரண்டு அங்குலமாகும். அதில் நான்கு அங்குலம் வெளியே கழிய எட்டங்குல மூச்சே உட்செல்லுகின்றது. இந்த நான்கு அங்குலத்தைப் பாழாக்காமல் உட்செலுத்தும் வழிகளையும், இதனால் பிணி, மூப்பு, சாக்காடு, இல்லாமல் நெடுநாளிருக்கும் வழிகளையும், நமது தமிழ் மருத்துவ நூலே செவ்விதின் உரைக்கின்றது. மக்களுக்கு எலும்புகள் ஐந்நூற்றுப் பத்தெனவும், நோய்கள் நாலாயிரமெனவும், உடம்பில் மூன்றரைக்கோடி மயிர்க்கால்களிருக்கின்றனவென்றும், அவைகளின் வழியே வாயுவின் போக்குவரவு உண்டெனவும் நமது நூல் கூறுகின்றது.

"மயிர்க்கால் வழியெல்லாம் மாய்கின்ற வாயு
உயிர்ப்பின்றி உள்ளே பதி"

எனவாயுதாரணையில் கூறப் படுகிறது

மயிர் குழலாக விருப்பதால் மயிருக்குக் குழல் என ஒரு பெயர் தமிழில் இருப்பதையும் நமது தமிழ் மருத்துவ நூல்களால் நாம் நன்கறியலாம்.

இவ்வளவு அருமையுள்ள சித்தர்களின் மருத்துவ நூல்களை நன்றாகக் கற்று அனுபவித்தறியவேண்டுமேயன்றி, சாத்திரமுறைகளை அறியாத ஒருவருக்கு இதன் பொருள் விளங்குதல் இயலாதகாரியமாகும்.

தமிழர்கள் பண்டைக்காலம் முதல் பழகி அனுபவித்துவரும் தமிழ் மருத்துவமானது தமிழ்நாடு மட்டுமே யல்லாது, அசோக சக்கரவர்த்தி காலத்தில், இந்தியா முழுவதும், இலங்கைத்தீவு முழுவதும், மேற்கில் மடகாஸ்கர், தென்னாப்பிரிக்காவரையிலும், பினாங்கு, சிங்கப்பூர் முதலிய கிழக்கு இந்தியத்தீவுகள் வரையிலும் பரவி வளர்ந்து இக்காலத்தும் உயிருடனிருந்து வருகிறது. நம்முடைய மொழியையும், நம்முடைய மருத்துவம், ஓவியம் முதலான தொழில்களையும் பாதுகாத்து வளர்க்க வேண்டியவர் அரசாங்கத்தினரே யாவர். நமது நூல்களிலுள்ள பெருமைகளை அரசினருக்கு எடுத்துச் சொல்வதும் நம்முடைய கடமையே யாகும். ஒவ்வொரு நாட்டுக்கலைகளிலும் ஒவ்வோர் உண்மையிருக்கிறதென்பதை எவரும் மறுக்கமுடியாது, கீழ்நாட்டுக் கலைகள் மேல்நாட்டுக் கலைகள் ஆகிய இவ்விரண்டும் இருநாட்டினருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவனவேயாம். ஒருவன் ஒரு கட்டடத்தின் வெளித்தோற்றங்களையே பார்த்துக்கொண்டு உள்ளே சென்று காணவேண்டியதைக் காணாமலிருக்கிறான். மற்றொருவன் உள்ளே நடைபெறும் அற்புதங்களைக்கவனித்துக் கொண்டு வெளியில் உள்ள சங்கதிகளையே மறந்துவிடுகிறான். ஆகலின், இவ்விருவரும் கலக்க வேண்டுவது அவசியமாகும்.

அதனால் உலகத்துக்கு நன்மை பெரிதும் உண்டாகும். நம்முடைய மருத்துவ நூல், யோக நூல், நீதிநூல், ஞான நூல், சமய நூல், முதலியவைகளை மேல் நாட்டார் கற்கவேண்டும். நாம் நம்முடைய நூல்களோடு நில்லாமல், இவ்வுலகவாழ்க்கைக்கு இன்றியமையாத மேல் நாட்டார்களுடைய கலைகளையும் கற்கவேண்டும். அப்போதுதான் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் முதலியன உலக முழுவதும் பரவும். நம்முடைய தமிழ் மருத்துவ நூல்கள் உலக முழுவதும் பரவுதற்கு, நாம் தாராளமாக இடங்கொடுக்கவேண்டும். நமக்குத் தெரிந்ததை மற்றவர்கள் அறியக்கூடாதென்னும் குறுகிய குணத்தை அறவே விடவேண்டும். அப்போதுதான் நம்முடைய அறிவுநூல்களின் பெருமையை உலகம் அறியும். நம்முடைய நீதி நூல், யோகநூல், முதலியவைகளின் சில பகுதியைக் கண்டறிந்த அமெரிக்க நாட்டாரும், மற்ற மேல்நாட்டாரில் பலரும் அவற்றை மகிழ்ச்சியாகக் கொண்டாடுகின்றார்கள். நீதிசாஸ்திரங்களான திருக்குறள், நாலடியார் முதலியவைகளையும், தோத்திரங்களில் திருவாசகம் முதலியவைகளையும் ஆங்கிலத்துரைமகனாகிய ரெவரெண்ட் போப் முதலானவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமது நாட்டார் எல்லோரும் அதன் அருமையை அறியும்படி செய்துள்ளார்கள். மிகச் சிக்கலானதும், விரிவானதும், நுட்பமானதுமான தமிழ் மருத்துவ நூலை மேல்நாட்டு நன்மக்கள் நன்றாக அறிந்து மகிழும்படி நாம் செய்யவேண்டும். இதனை இன்றுவரை நாம் செய்ய வியலாமலிருக்கின்றோம். ஆதலால், நமது தமிழ் மருத்துவத்துவம் உலகில் பெருமையடையவில்லை. தமிழ் மருத்துவத்தில் மணி, மந்திரம், மருந்து என மூவகைச் செய்கையையும் நோயாளிகளுக்குச் செய்யவேண்டும் எனக்கூறுகின்றது. சரநூல், ஐம்பறவை (பஞ்சபட்சி) தாதிலக்கணம், நாள்கோள் நிலை, விடமருத்துவம், மருத்துவம் முதலியவைகளை அறிந்தவனையே பண்டிதன், மருத்துவன், பரிகாரி, நாவிதன் எனக் கூறுவது மரபு. இவைகளை மேல்நாட்டார்களுடைய நூல்களில் காணவியலாது. மேல்நாட்டார் புதிதாகக் கண்டுபிடிக்கும் விஷயங்களெல்லாம் நமது வைத்திய சாஸ்திரத்திலிருக்க வேண்டுமெனில் அது எப்படி இயலும்? அரசாங்கத்தார் நமது வைத்தியத்தை வளர்ப்பது என்பதற்கு அருத்தமென்ன? நந்தமிழ் மருத்துவ நூல்களிலுள்ள நுட்பமான பொருள்களெல்லாம் கற்போரின்றி நாளுக்குநாள் மறைந்தொழிகின்றன. இப்போதுள்ள நமது நாட்டு மருத்துவர்களில் பலர் அப்பொருள்களை அறியாது வைத்தியம் செய்கின்றார்கள். அவர்கள் எப்படியாயினும் பணம் சம்பாதிப்பதற்கான முயற்சியையே மிகப்பெரிதும் செய்கின்றார்கள்.



சோதிடம் பஞ்சபட்சி துலங்கிய சர நூல்மார்க்கம்
ஓதரு உடம்பின்கூறும் கொடியதாம் நோயின்கூறும்
தீதிலாப் பொருளின்கூறும் செய்வகை மருந்தின்கூறும்
ஈதெலாம் கற்றுணர்ந்தோர் இவர்களே மருத்தராவார்.

என்று நமது மருத்துவ நூல்கள் மருத்துவ இலக்கணத்தைக் கூறுகின்றன.

நாள், கோளாகிய ஜோதிடம், ஐம்பறவை, சரம், மந்திரம் முதலியவைகள் நோயாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேண்டுவதில்லை என, மேல் நாட்டாரில் பலரும், நமது கீழ்நாட்டாரில் சிலரும் தற்போது சொல்கின்றனர். ஒருநாட்டில் ஒருகாலத்தில் மக்களின் மனோநிலைக்குத் தக்கவிதமாக அக்காலத்துப் புலவர்கள் நூல்கள் எழுதியுள்ளார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. இஃது எந்த நாட்டிற்கும் பொதுவான விஷயமாகும். காலத்துக்குக் காலம் மக்களின் கருத்து மாறுபட்டுக் கொண்டேவரும், சாத்திரங்களும் மாறும். நமது நாட்டில் மணி, மந்திரம், பஞ்சபட்சி, சரம்பார்த்தல் முதலியவைகள் பொதுமக்களின் மனதைவிட்டு நீங்கவில்லை. பெண்களைப் பேயாடவைப்பதும், கோணங்கி வைத்து உடுக்கை அடித்துக் குறி கேட்பதும். பல தேவதைகள் மக்கள் மீது ஊடுருவிப்பாய்ந்து கேட்பதற்கெல்லாம் பதில் சொல்லி மலையேறிப் போவதும் நடைபெறுகின்றன. கோழி, ஆடு முதலியவைகளைப் பலியிட்டு அத்தெய்வங்களை மகிழ்வித்தல் முதலிய இழிவான செய்கைகள் இன்றும், குறையாமல் நடைபெற்றுவரும் நம்நாட்டில் மக்களின் மனோநிலை எவ்வளவு கீழ்நிலையிலிருக்கிறதென்பதை நாம் உணரவேண்டும். மணி, மந்திரம் முதலியவைகளை நாம் ஒழிக்க முயன்றாலும் உலகம் ஒழிக்கத் தயாராயில்லை, ஆதலால் நமது நாட்டில் மக்களின் மனோபாவத்துக்குரிய பரிகார முறைகளை மோசம் போகாமல், ஜனங்கள், கல்வி அறிவுள்ளவர்கள் மூலமாக அடையும்படி செய்யவேண்டியது இன்றியமையாததாகும்.

பண்டைக்காலப் பரம்பரை மருத்துவர்களைப்போல் முறையாகக் கற்று, தக்க மருத்துவர்களிடத்தில் பழகி மருத்துவம் செய்பவர்களை இக்காலத்தில் காண்பது மிகவும் அரிதாகிவிட்டது. ஆதலால், அரசாங்கத்தார் ஏற்படுத்தியுள்ள மருத்துவப் பள்ளிக்கூடத்தில் மேல்நாட்டு நவீன சாஸ்திர முறையையே கற்றுக்கொடுக்கும் ஆங்கில மருத்துவப் பள்ளிக்கூடங்களைப்போல் நடத்தாமல், தமிழ் மருத்துவ நூல்களிலுள்ள நுண்பொருள்களையும், நோயணுகா விதிகளையும், பிராணாயாமம்

என்னும் மூச்சுப்பழக்கத்தையும், மாணவர்கட்குக் கற்பித்து உலகத்தில் இருந்துள்ள அகாலமரணம், கொள்ளைநோய்கள், மக்களுக்குப் பொதுவாக ஏற்பட்டுள்ள பலக்குறைவு முதலியவைகளை ஒழித்துத் துன்பத்தை நீக்கப்பெரிதும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பத்திராசிரியர்.

## சுகாதாரப்பகுதி

## நோயணுகாவிதி.

1. நாளோர் நான்கினில் நற்றலை மூழ்குதல்
நாளோர் எட்டினில் நன்மயிர் நீக்குதல்
நாளோர் எட்டினில் நங்கையைக் கூடுதல்
நாளோர் மூன்றினில் நல்விழி மையிடல்

2. நீரைச் சுண்டிடக் காய்ச்சி நெய்யட்டுணல்
மோரை நீரிற் பெருக்கி முயங்குதல்
கூறை மாசு கொளாமல் உடுத்திடல்
நேரு நோயினர் நீர்மல நீங்குதல்.

3. இரவி லன்றிப் பகலுறங் காமையும்
விரவி யுண்டபின் னீருணும் வேட்கையும்
பாவி யுண்டபின் பத்தடி யேகலும்
உபா தாளிரு சாம முறங்கலும்

4. () கந்த மன்றியோர் கந்தமு ணாமையும்
மூத்த மாதர் தமைமுயங் காமையும்
அந்த நாட்டயிரும் *அரம்பைக் கனி
பந்த மாகப் பருகலிலா மையும்

5. பகலின் மாதரைக் கூடுத லின்மையும்
இரவில் நற்பசி யின்றி யுணாமையும்
தகவில் வெண்ணெய் தனையருந் தாமையும்
மிகுமிள வெயின் மேனி படாமையும்

() கருணைக்கிழங்கு

* வாழை



6. இடக்கை கீழிட் டுறங்கல் முன்னுணினில்
அடுங்கறியை யுண்ணுமை முன்னுட் டயிர்
படுமமு திதெனப் பருகிடல்
கொடுநற் பேதிமதி நான்கிற் கொண்டிடல்

7. நாறு பூமுக ராமை நடுங்கி
வீறு முண்டி யறுந்தருணத் தினில்
தேறிப் பெண்களைக் கூடுத லின்மையும்
கூறி னெப்பொரு ளுண்டபின் னீருணல்.

8. எண்ணெ யிட்டுவெந் நீரினின் மூழ்கையும்
வண்ண ஆன்பால் மகிழ்ந்தினி துண்டலும்
திண்ண மாமல நீரடக் காமையும்
பண்ணு பாக மழிபத நீக்கலும்.

9. பாரில் வையில் பகரு மனையினில்
சார நித்திரை தான்புரி யாமையும்
நேர தாமிந் நியதி புரிந்தவர்
பேரைக் கூறப் பெரும்பிணி பாறுமே.

(சுந்தரானந்தர்)

## அன்னபேதி அல்லது அய உப்பு

இரும்பு மூன்றுவகையாகப் பிராண வாயுவோடு கலக்கும். இரும்பின் தூளைக் கந்தக நீரில் (சல்பியூரிக்ஆசிட்) போட்டு நெருப்பில் காய்ச்சினால் அதுபொங்கி ஆவியாக எழும்பும். அவ்விரும்பு முழுவதும் கரைந்த பின்னர் அதில் தண்ணீரைக் கலந்து காய்ச்சிக் குளிர வைத்தால், அது பச்சை நிறமும், துவர்ப்புச் சுவையும், இரும்பின் களிம்பு மணமுமுள்ள உப்புக் கட்டிகளாகும். இதைத்தான் அன்னபேதி என்று சொல்லுவது. அன்னபேதி நீரில் கரையும்; காற்றுப்பட்டால் அதன்மீது சுண்ணம் போல் பூத்து வெள்ளை நிறமான தூள் உண்டாகும். இதைத் தீயிலிட்டுச் சிவந்த தூளாக எடுத்து அதை ரோஸ்வடி பௌடர் பெயரால் கடைகளில் விற்கிறார்கள். இது பொன் நகைகள், பாத்திரங்கள், கண்ணாடிகள் முதலியவைகளை மினு மினுப்பாக்க உபயோகிக்கப்படுகின்றது. அன்னபேதியைப் பழச்சாற்றால் அரைத்துப் புடமிட்டு சிவந்த பொடியைச் (சிந்தூரத்தை) சீதபேதி முதலிய சில வியாதிகட்கும், சூலை, ஆமைக்கட்டி, பெருவயிறு முதலிய நோய்களுக்கும் கொடுக்கப் பிணியாளர்கள் குணமடைகின்றார்கள். அங்கி என்னும் இரசம், பேகாசம் முதலிய ஆறு

இரணங்கள், மூல வியாதிகளில் காணும் இரத்தப்போக்கு இவைகளுக்கு இது மிக நன்மையை உண்டாக்குகின்றது. உடம்பிலிருந்து அதிக இரத்தம் வடிந்தாவது, வேறு காரணத்தினாலாவது உண்டாகிற பாண்டுரோகத்திற்கு அன்னபேதியைக் கொடுக்கலாம். பாண்டு ரோகத்திற்கு இரத்தத்தில் தேவையான அயம் சேருகிற வரையில் அன்னபேதியை கொடுக்கலாம். அய செந்தூரத்திற்கு உள்ள குணங்கள் அன்னபேதி செந்தூரத்திற்கும் உண்டு.

கடுக்காயை நொறுக்கித் தண்ணீரில்போட்டு அன்ன பேதியையும் கூடச் சேர்த்துக் காய்ச்சுவதால் கறுப்பு மை செய்யப்படுகின்றது. இஃது எழுதுவதற்கும், துணிகளுக்குப்போடும் கறுப்புச்சாயத்திற்கும் உபயோகப்படுகின்றது.

# செப்பு அல்லது தாமிரம்.

## செம்பின் இயற்கைக் குணம்.

ஆசியாவின் வடபாகத்திலும், ஆபிரிக்காவின் கீழ்பாகத்தில் சுப்பீரியர் ஏரியிலும், வடஅமெரிக்காவில் மெக்ஸிகோவிலும் செப்புச் சுரங்கங்கள் மிகுதியாகக்கிடைக்கின்றன. இது நிலத்தில் இயற்கையாகத் தனி உலோகமாகக் கிடைப்பதுண்டு ; இது சிறு கட்டிகளாகவும் காணப்படுகின்றது. செம்பு சில இடங்களில் கந்தகம், பாஷாணம் முதலியவைகளோடு கலந்து பெருங்கட்டிகளாகவும் கிடைக்கும். இதன் நிறம் சிவப்பெனினும் அநேகமாய் பச்சை நிறமான கற்களாகத்தான் இது கிடைக்கின்றது. செம்பு கட்டியாகவும் கனமாகவும் இருக்கும், அதனைத் தேய்த்தால் ஒரு வகை கெட்ட மணமுண்டாகும். அது வெகுட்டல் சுவையுடையது. அதுமிக மெல்லிய கம்பியாக நீட்டி இழுக்கவும், தகடாகத்தட்டவும் கூடிய நயமுள்ள உலோகம்.

செம்பு 1990-பாகை (டிக்ரி) வெப்பத்திற்கு உருகும் ; இதனினும் மிகுந்த சூட்டிற்குச்சிறிது ஆவியாகப்பறக்கும். இதன் ஆவி பச்சை நிறச்சுடர் விட்டு எரியும்; செம்பில் காற்று பட்டால் மெதுவாகக் களிம்பேறும். ஆசியா கண்டத்தில் இரும்பைக் கண்டு பிடித்து மக்களுக்கு வேண்டிய ஏனங்கள், தட்டுமுட்டுத் தளவாடங்கள் முதலிய கருவிகள் செய்யுமுன் பண்டைக்காலம் முதல் செப்பு தான் எல்லாவற்றிற்கும் உபயோகப்பட்டு வந்தது. ஆகலினால், தமிழ்நாட்டில் வீடுகளில் ஆளும் பித்தளைக் குவளைகட்குச் செம்பு எனவும், பித்தளைக் குடங்கட்குச்



செப்புக்குடம் எனவும், குழந்தைகள் விளையாடும் சிறு ஏனங்கட்குச் சின்ன செப்புக்களென்றும் பெயர் வழங்கப்படுகின்றன. பண்டைய நாட்களில் சாசனங்களும் செப்பேட்டிலேயே எழுதப்பட்டு வந்தன. கோயில்களில் கடவுளுக்கு உருவங்கள், கொடி மரங்கள், கும்பங்கள் (கலசங்கள்) கோயிலின் மேற் கூரைகள் முதலியன செம்பிலேயே செய்யப் பெற்றிருக்கின்றன. பண்டம் மாற்று வாணிபத்துக்குப் பின்னர் நாணயங்களிலும் செம்பையே மிகுதியாக முற்காலத்தவர் உபயோகித்து வந்தார்கள். செம்பின் வழியாக வெப்பமும், மின் சக்தியும் மிக விரைவாகச் செல்லும். ஆதலால், பிற்காலத்தில் வீடுகளில் சமையல் செய்யும் பானைச் சட்டிகளும், வெந்நீர் காய்ச்சும் பானைகளும் செம்பினால் செய்யப்பட்டு வருகின்றன.

வெப்பம் மிகுந்த காற்றுக்குச் செம்பின் நிறம்மாறாது. ஈரமுள்ள குளிர்ந்த காற்றுக்குச் செம்பு விரைவில் கறையாகி நிறம் மாறும். செம்பில் கறை அதிகம் சேரச்சேரப் பச்சை நிறமான “ களிம்பு ” என்னும் விஷப்பொருள் ஓர் ஏடுபோல் செம்பின்மேல் உண்டாகும். அது கரிவாயு (கார்பன்) சேர்ந்த விஷ உப்பாகின்றது. இது காரமுள்ள தீ நீர் (திராவகம்) களால் நீங்கும். பொதுவாகச் செம்பு நல்ல தண்ணீரில் கறை பிடியாது. அது கடல் நீரிலாவது, உப்புகள் சேர்ந்த நீரிலாவது, சிறிது சிறிதாகக் கறை பிடிக்கும். செம்பு விரைவில் தேயக் கூடியது. கப்பலின் அடிப்பாகத்தில் பலவகை நத்தைகள், கடல் மட்டிகள் முதலியன சேர்ந்து கப்பல் ஓட்டத்திற்குத் தடைபடாதபடி, கப்பலின் அடிப்பாகத்தில் தைக்கப்படுகின்ற செப்புத்தகடு தண்ணீரில் செல்வதனால் தேய்ந்து விடுகின்றது. செம்பு பொட்டிலுப்பு தீ நீரில் (நைட்ரிக் ஆசிட்டில்) மிக விரைவில் கரையும். இரண்டு பங்கு செம்பும் ஒரு பங்கு பிராணவாயுவும் (ஆக்ஸிஜன்) சேர்ந்தால் சிந்தூரமாகும். பிராணவாயுவும், செம்பும் ஓரளவில் சமமாகச் சேர்ந்தால் கறு நிறமாகும். செம்பு தாவரங்களாலாகிய சில தீ நீர் (ஆசிட்) களாலும் கறைபிடிக்கும். அது தண்ணீர் கலந்த கெந்தகத்தீநீரிலாவது (சல்பியூரிக் ஆசிட்) பொட்டிலுப்புத்தீ நீரிலாவது அதிகக்கறை பிடியாது.

## பித்தளை.

செம்போடு கலந்த உலோகங்கள் பல வேலைகளுக்கு உபயோகப்படுகின்றன. தற்காலம் வழக்கத்திலுள்ள பித்தளையில் செம்பு 66-பங்கும், துத்தம் 34-பங்கும் சேர்ந்திருக்கின்றன. இவைகளில் அளவுகளை வித்

தியாசமாகக் கலந்து பலவிதமான பித்தளை, வெண்கலம், திரு, முழி என்னும் உலோகங்களைச் செய்யலாம். மிகுதியாகச் செம்பு 90-பங்கும், தகரம் பத்து பங்குமாகச் சேர்த்து பீரங்கிகளைச் செய்வதாகத் தெரிகின்றது. உருவங்கள் 91-பங்கு செம்பும். 6-பங்கு துத்தமும், இரண்டு பங்கு தகரமும், ஒரு பங்கு ஈயமும் கலந்து செய்கின்றார்கள். செம்பை வெடியுப்புத் தீ நீரில் (நைட்ரிக் ஆசிட்டில்) கரைத்து, நீல நிறமுள்ளதும், பூக்கக்கூடியதுமான ஒரு வகை உப்பை உண்டாக்கலாம். இது மிகக் காரமுள்ளதாகவும், இலேசில் பிடிக்கக்கூடியதாகவும் இருக்கும், செம்புச் சாமான்களின்மீது வழக்கமாகப் பிடிக்கும் பச்சை நிறமான களிம்பு, செம்பு சேர்ந்த ஒரு வகை உப்பு என்று முன்னமே சொன்னோம், செப்புத் தகடுகளில் காடியை இட்டும், எலுமிச்சை, திராட்சை முதலிய புளிப்பான பழச்சாறுகளைச் சேர்த்தும் களிம்பை உண்டாக்குகின்றார்கள். இக்களிம்பை, நிறங்களுக்கு மிகுதியாக உபயோகிக்கின்றார்கள். பொதுவாகச் செம்பின் உப்புக்களும், மிகுதியாக நீலம் அல்லது பச்சை நிறமானவைகளாகவே காணப்பட்டும் எடுக்கப்பட்டும் வருகின்றன. அவைகள் தண்ணீரில் கரையும். அவைகள் ஒருவிதமான கைப்பான உருசியை உண்டாக்கும். நெய்வகைகளில் செம்பின் களிம்பு கரையுமாதலால், நன்றாய்த் தேய்த்து மினுக்காத செப்புப் பாத்திரங்களில் சமைப்பது தீமையாகும். புளிப்புள்ள உணவுப் பொருள்களை செப்புப் பாத்திரங்களில் சமைப்பதால் களிம்பு ஆகாரத்தில் சேரும். ஆதலால், செப்பு ஏனங்களைச் சமையலுக்கு உபயோகிப்பது நல்லதல்ல செப்புத் தாம்பாளங்களில் கண்களுக்கு மை செய்வதும், அக்கண் மைகளை செப்புச் சிமிழ்களில் வைத்துக்கொள்ளுவதும் நலமெனத் தெரிகின்றது. மேல் நாட்டார் செம்பை உள்ளுக்குச் சாப்பிடும் மருந்துகளாகச் செய்வதில்லை; வேறொரு மருந்தோடுசேர்த்து உள்ளுக்குக் கொடுப்பதும் இல்லை; உணவுகளைச் செப்பேனங்களில் வைப்பது மில்லை. செம்பு உப்புகள் மேல் உபயோக மருந்துகளாக செய்யப் படுகின்றன. செப்புத்தகட்டின் மேல் வெள்ளி, இரசம் படியும்.

---

## மாதரும். மருத்துவமும்.

தேகவளர்ச்சிக்குரிய தாதுக்களைப் பலப்படுத்தி உடம்பை வளர்ப்பதற்கு இன்றியமையாத பொருள் உணவே என்றும், உணவு இன்றேல் உயிர்கள் வாழமாட்டாதென்று உறுதியென்றும் சகலரும் அறிவர்.



சிலபோது வழக்கத்திற்கு மாறுபாடான உணவுகளை ஒருவன் உண்டாலும், கெட்ட காற்றைச் சுவாசித்தாலும் நோய் உண்டாகக் காண்கின்றோம். இது பற்றியே! தமிழ் மறைத்தலைமைப் புலவரும், “மிகினுங் குறையினு நோய் செய்யும்” எனத்திருவாய் மலர்ந்தார். ஒருவனுடைய உணவும் செயலும் என்றும் ஒரு தன்மையாயிருக்குமானால், நோயுண்டாகவே மாட்டாவென்பது துணிபு.

மருத்துவ நூலாரும், வாதம், பித்தம், கபம் என மூன்று நாடிகளைப் பிரதானமானவைகளென்று கண்டு பிடித்து, இவைகளுக்கேற்ற உணவாதிக்கமே பிணியுண்டாதற்குக் காரணம் என்று விளக்கி இருக்கின்றார்கள். மேற்கூறிய மூன்று நாடிகளும் நிற்கவேண்டிய அளவு இவ்வளவென்றுங் கணக்கிட்டிருக்கின்றார்கள். ஒவ்வொருவருடைய தேகமும் இந்தமூன்றனுள் ஒன்றை ஆதிக்கமுடையதாக பெற்றிருக்கும். தேக சுபாவத்துக்குத் தக்கபடி அவை கணக்குடையனவாய் இருக்க வேண்டும். அந்தந்த தேக இயல்புக்குத் தக்கவாறு வேண்டிய அணுக்களை நிரப்புவதிலேயே அந்தந்த தேகமும் வலிவுடையதாகும். இதுபற்றியே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான ஆகாரத்தில் விருப்புண்டாவதாகக் காண்பதே காரணமாகும். உதாரணமாக சில சமயத்தில் தேகசுபாவத்துக்கு மாறுபட்ட உணவைநாம் உண்டபோது, விரைவிலே நோயுண்டாதலையும், அதனால் வாதம், பித்தாதிகள் விகற்பப்படுவதையும், அநுபவ பூர்வமாகக் காண்கின்றோமல்லவா? இதனால் மக்கள் சுகதேகிகளாய் வாழ்தற்கும், நோயில்லாமல் இருத்தற்கும் காரணம் உணவே யன்றி வேறில்லை யாதலின், உணவைத்தேக இயல்புக்குக்கேற்றவாறு சமைத்து வருதல் பெண் மக்களே யாதலின், ஆண் மக்களைப் பார்க்கிலும் பெண் மக்களே மருத்துவ சாத்திரத்தைப் பயின்றிருத்தல் இன்றியமையாத கடைமையாகும்.

ஆண் பெண் எனப்படும் இருபாலாருள் ஆண்கள் வெளியில் சென்று சம்பாதித்து வரவேண்டியதென்றும், அப்படிச் சம்பாதித்து வந்த பொருளைப்பெண்கள் வைத்துக்கொண்டு குடும்பத்தைக்காப்பாற்றி வருதல் நியதியாகலின் சம்பாதனைக்குரிய சாத்திரங்களை ஆண்கள் படித்திருப்பது போல், குடும்பத்தைச் சுகாதார நெறிப்படி பாதுகாத்து வர வேண்டிய அற நெறிகளையும் பெண்கள் படித்தவரினும் இவற்றுள் இவ்வாழ்க்கைக்கே தலைமைத் தன்மையதாக விளங்குவதும், கணவன், புதல்வர், மாமன், மாமி, முதலியோர்களையும், தங்களையும், தனது சுற்றத்தாரையும், பொதுவாக மற்றையோரையும் உணவு முதலியவற்றால்

தேக நியதிப்படி போஷித்தும், இல்லங்களைச் சுகாதார விதிப்படியமைத்தும், நோயணுகாவாறு கவனித்து, நோயுறின் தம்புத்திக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்றவாறு பரிகாரஞ்செய்து நிவர்த்தித்தும், கருக்கொள்ளல், கருவுயிர்த்தல் முதலியவைகளை யனுசரித்து நடந்து வருதற்கும் பெண்பாலார் அவசியம் மருத்துவ சாத்திரத்தைப் பயின்று வருதல் பெருங் கடமையாகக் கொள்ளல் வேண்டுமென்பதை நமது இந்திய நாட்டு ஒவ்வொரு பெண்மணிகளும் உய்த்துணர் வார்கள் என்பது திண்ணம்.

(தொடரும்)

வித்வான் முனிசாமிப்பிள்ளை.

---

## கடுக்காய்.

| | |
|---|---|
| தமிழ் | கடுக்காய் |
| மலையாளம் | கடுக்கா |
| தெலுங்கு | கரக்காய |
| கன்னடம் | அளிலக்காய |
| உருது | ஹறல்டா |
| லாட்டின் | டர்மினேலியாசிபுல |
| வடமொழி | ஹரிதகி |

## கடுக்காயின் பெருமை.

வெண்பா.

கடுக்காய் மகோதரம்போம் காமாலைபோம் சோகை
முடுக்காய் மலங்கழிய மூட்டுமே—துடுக்கான
திரிதோஷம் போக்கும் தீபனமும் உண்டாக்கும்
சொரி குன்மம் வாயு வறும் சொல்.

கடுக்காயும் தாயும் கருதில்ஒன் றென்றாலும்
கடுக்காய் அத்தாய்க்கதிகம் காண்நீ—கடுக்காய்நோய்
ஓட்டி உடல் தேற்றும் உற்றஅன்னை யோசுவைகள்
ஊட்டி உடல்தேற்றும் உவந்து.



## இதன் பொருள்.

கடுக்காயும் தாயும் ஒன்றென ஒருவாறு நினைத்தாலும் தாயைப் பார்க்கிலும் கடுக்காயே மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். ஏனெனில் கடுக்காயானது நோய்களை நீக்கி உடலை வளர்க்கும். தாய் அறுசுவை யுணவை யூட்டி உடலை வளர்ப்பாள். பிணிகளை நீக்குதலன்றி உணவு பயன்பட்டு உடல் தேறுமென்னும் வகையறியாமல் தாய் உணவை மட்டும் ஊட்டும் தன்மை உடையவளாதலால் அத்தாயினும் கடுக்காய் சிறந்ததெனக் கூறினர் நமது மருத்துவப் பெரியார்.

## கடுக்காய் வகைகள்

| | |
|---|---|
| பிரிதிவிக்கடுக்காய் | அமுதக்கடுக்காய் |
| சிவந்திக்கடுக்காய் | திரிவிருத்திக்கடுக்காய் |
| அபயன்கடுக்காய் | கருங்கடுக்காய் |
| செங்கடுக்காய் | வரிக்கடுக்காய் |
| பால்க்கடுக்காய் | அரோகிணிக்கடுக்காய். |

என மருத்துவ நூல்களில் பத்து வகை கடுக்காய் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அநுபவத்தில் சில கடுக்காய்கள் தானிருக்கிறது.

கடுக்காய்களுக்கு பொதுக் குணம் ஒன்றேயாயினும் ஒவ்வொரு கடுக்காய்க்கும் தனித்தனியே சிறப்புக் குணங்களுண்டு.

கடுக்காய் பலவகைகளா யிருந்தாலும் அவைகளின் பொதுவான குணங்கள் வயிறிளகல், பெருவயிற்றைக் கரைத்தல், புண்ணை ஆற்றல், வலை சுருங்கச்செய்தல், கெட்ட நீரைக் கழித்தல், இரத்தத்தை சுத்தம் செய்தல், உடலை வளர்த்தல், முதலிய குணங்களை உடையன.

குடலைப்பற்றிய மாசுக்களை நீக்கிக் குடலுக்கு வலிமையை உண்டாக்கும். நரையிரலிலுண்டாகும் நோய்களைக் கண்டிக்கும். இதை நெய்யில் பொறித்துச்சாப்பிட பேதியைக் கட்டும். இதை நாள்தோறும் நெடுநாள் தின்றுவந்தால் நரையை மாற்றும்.

## மலக்கட்டுள்ளவர்கட்கு சுகபேதியாக.

சூரத்துக் கடுக்கா யென்னும் சதைப்பற்றுள்ள பெரிய கடுக்காயில் மூன்று அல்லது நான்கு உடைத்து கொட்டையை நீக்கி தோலை நசுக்கி ஆழாக்கு தண்ணீரில் போட்டு மண் சட்டியில் நாலிலொன்றாகக் காய்ச்

சின கிழாயத்தை வடித்து எடுத்துக் கொள்ளவேண்டும். அக்கியாழத்தைத் தனியேயாவது, கொஞ்சம் விளக்கெண்ணெய் எனும் ஆமணக்கு நெய் கலந்தாவது காலையில் சாப்பிட மலங்கழியும், நன்றாக மலங்கழியாவிடில் மறுநாளும் அப்படியே சாப்பிடலாம், ஒருவித வருத்தமுமின்றி மலங்கழியும். பத்திய மில்லை.

## குழைந்தையின் மலக்கட்டு.

சொரி, சிரங்கு, ஊதுகணை பெருவயிறு முதலியவைகளுக்கு, ஒரு கடுக்காயை உடைத்து கொட்டையை நீக்கி அரை ஆழாக்கு தண்ணீரில் மேலே சொன்னபடி காய்ச்சி, வடித்த கியாழத்தில் ஆமணக்கெண்ணெய் சிறிது கலந்து இரண்டு மூன்றுநாள் கொடுக்கலாம்.

## சேற்றுப்புண்ணுக்கு.

தண்ணீரில் நின்று வேலை செய்யும் பெண்கள் பலருக்கும் மழை காலத்தில் சேற்றில் நடப்பவர்கட்கும் காலில் விரல்களுக்கிடையில் வெளுத்து தினவெடுத்து புண்ணாவதுண்டு, இதனைச் சேற்றுப் புண்ணென்று சொல்லுவார்கள். இப்புண்ணுக்கு இரவில் படுத்துக்கொள்ளப் போகும்போது கால்களை நன்றாக சோப்பிட்டுக் கழுவி, ஈரமில்லாமல் துடைத்து கடுக்காயைத் தண்ணீரில் அல்லது எலுமிச்சம்பழச்சாற்றில் இழைத்து புண்ணுள்ள இடங்களில் தடவிவர, புண்ணாறும்.

## கருப்பை இரணங்கட்கு.

பெண்கள் பிள்ளை பெற்று கருப்பை இரணமுள்ளவர்களும், வெட்டையினால் வெள்ளைப் போக்குள்ளவர்களும், இரத்தப் போக்குள்ளவர்களும், கடுக்காய் கியாழமிட்டு நன்றாக வடிக்கட்டி இளஞ்சூடாக ரப்பர் குழாயினால் டூஷ் கொடுத்தால் (கழுவிக்கொண்டு வருவதால்) கருப்பை வீக்கம் இரணம், வலி, வெள்ளைப்போக்கு, முதலியவைகள் நீங்கி கருப்பை சுருங்கி தன்னிலையை அடையும்.

## பெருவயிறு, கைகால் வீக்கம், காமாலை, நீர் சுரப்பு முதலியவை கட்கு.

ஏழெட்டு சூரத்து (பெரிய) கடுக்காயை உடைத்து கொட்டையை நீக்கி அதன் தோலை வெள்ளாட்டு நீராவ்து, பசுமாட்டு நீராவது விட்டு மைபோல் நன்றாக அரைத்து அந்நீரிலேயே கரைத்து ஏழுதடவை வடி



கட்டி அதில் அரை ஆழாக்கு காலை, மாலை மூன்று நாள் அல்லது ஐந்து நாள் சாப்பிட மேலே கண்ட நோய்கள் நீங்கும். பத்தியம் உப்பு, புளி, மிளகாய் சேர்க்காமல் பசும்பால் அல்லது வெள்ளாட்டுப்பால் சேர்ந்த கோதுமைக் கஞ்சி அல்லது அரிசி நொய்க்கஞ்சியில் சிறிது சர்க்கரை சேர்த்து சாப்பிடலாம்.

குழந்தைகளுக்கு இதில் பாதி அளவு கொடுக்கலாம்.

## பாண்டு, சோகை, கைகால் வீக்கம் காமாலை முதலிய நோய்களுக்கு நாள்பட சாப்பிடும் முறை.

சதைப்பற்றுள்ள பெரிய கடுக்காயை ஆட்டு நீரிலாவது பசுவின் நீரிலாவது இரவு பகல் ஊரவைத்து நிழலிலுலர்த்தி மறுபடியும் புதிய ஆட்டு நீரிலாவது பசுவின் நீரிலாவது ஊரவைத்து நிழலிலுலர்த்தி இப்படி ஏழுதடவை செய்து கொட்டைநீக்கி இடித்துப் பொடித்து வைத்துக்கொண்டு மூன்று விரற்கொண்ட (ஒருபைசா இடை) தூளைத் தேனிலாவது, சர்க்கரையிலாவது கலந்து காலை, மாலை நாற்பது நாள் சாப்பிடவும், இத்தூளை கரிப்பான் என்னும் கரிசலாங்கண்ணியின் சார், அல்லது தண்ணீர் விட்டு அரைத்துக் குளிகையாகவும் செய்து வைத்துக்கொண்டுசாப்பிடலாம் !!

கடுக்காயை காடியில் ஊரப்போட்டு பாவனக்கடுக்காயாகவும் தேனில் அல்லது சர்க்கரை பாகில் ஊரவைத்து முரபாயாகவும், பசைக் கடுக்காயில் உப்பிட்டு எலுமிச்சம்பழச் சார்விட்டு கடுக்காய் ஊறுகாயாகவும் உபயோகப் படுத்துகின்றார்கள்.

---

## யானையுண்ட விளாங்கனி.

யானையுண்ட விளாங்கனிபோல் என ஒரு பழமொழி வழங்குகிறது இது வேதாந்தநூல்களிலும் எடுத்துக் காட்டாக வருகிறது. யானை விளாங்கனியை உண்டு மலமாகக் கழிக்கும்போது அது உண்ட விளாங்கனி ஓடு உடையாமல், நிறம் மாறாமல் முழுவடிவத்தோடு அப்படியே மலத்துடன் வெளியே வருமெனவும், ஆனால் அதன் உள்ளிருக்கும் சதையும், விதையும், சிறிதும் காணப்படாமல் அது வெறும் கூடாயிருக்குமெனவும் சொல்லுகிறார்கள். இதன் உண்மையை ஆராய்வோம் யானை தான் உண்ணும் எந்தப்பொருளையும் தன் கடைவாய்ப் பற்களால் மெல்லாமல் விழுங்குவதில்லை. அது உண்ணும் கரும்பு, நாணல், மு

லியவைகளையும் நன்றாகமென்று தான் உண்ணுகிறது. அது உண்ட பொருள் இன்னதென்றறியாத நிலையில் அதனிடம் மலம் வெளிப்படுகின்றதை நாம் காண்கின்றோம். இந்த நிலையில் விளாங்கனியை மட்டும் யானை தன் பல்லால் மென்று சுவைக்காமல் விழுங்குமெனக் கூறுவது பொருந்தாது, யானையின் பல்லுக்கு விளாம்பழம் நொறுங்காதென்பது மில்லை. தேங்காயை நரநரவென்று மென்று விழுங்கும் பற்களையுடைய யானை விளாங்கனியை மட்டும் மெல்லாமல் எப்படி விழுங்கும்? ஒருக்காலும் விழுங்காது, அப்படி விழுங்கினாலும் "தோலிருக்கச் சுளை விழுங்கி" என்பதுபோல் விளாம்பழத்தின் ஓடு உடையாமல் உள்ளேயிருக்கும் பழம் முழுவதும் எப்படி வெளியாகும். அதுவும் இயலாத காரியமாகும். ஆதலால் மரங்களுக்கும் நோய்களுண்டு என்பதை நாம் அறிவோம், விளாமரத்தில் சில காய்கள் யானைநோய் என்ற ஒருவித நோயினால் பீடிக்கப்பட்டு அதனால் உள்ளே சதைப்பற்று உண்டாவதில்லை. இதேபோல் தென்னை மரத்திலும் சில தேங்காய்களுக்குள் ஓட்டைத்தவிர வேறு யாதும் இருப்பதில்லை. இதனையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இதனைச்சிலர் தேறை பட்ட தேங்காயெனச் சொல்லுவதுண்டு.

இதேபோல் குளவி புழுக்களைத் தன்னுருவாக்குகிறதென்று சொல்லுகின்றார்கள். இது கைவல்லியம் முதலான வேதாந்த நூல்களிலும். எடுத்துக் காட்டப்படுகிறது. இதனையும் ஆராய்ச்சிக்காரர் நன்கு ஆராய்ந்து இது முற்றிலும் பொய்யானதென முடிவுகட்டி யிருக்கின்றனர். இப்படிப் பலவிஷயங்களைத் தற்காலம் நமது நாட்டில் மக்கள் சரியாகக் கவனியாமல் ஒருவர்சொல்வதை அப்படியே மற்றவர்களும் நம்பிச்சொல்லுவதும், செய்வதும் அதனை நூல்களில் எழுதுவதும் வழக்கமாக யிருக்கிறது, ஆராயாமல் ஒன்றையும் தீர்மானிக்கக்கூடாது.

---

## சிறுத்தொண்டர் வரலாறு.

(21-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்தியாவென்னும் பரதகண்டத்தின் தென்திசையில், அமிழ்தினுமினிய தமிழ்மொழி வழங்கும் நாடுகளில் சோழநாடே நீர்வளம் நிலவளமுடையது. அச்சோழ வளநாட்டில், தஞ்சாவூர் ஜில்லாவில், காவேரியாற்றின் தென்கரையில், நன்னிலத்திற்கு அடுத்த திருச்செங்காட்டங்குடியென்னும் சிவஸ்தலம் ஒன்றுளது. அதில் சுமார் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன். கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்



தில், மருத்துவர் என்று வழங்கும் மாமாத்திரகுலத்தில் சிறுத்தொண்டர் என்னும் பரஞ்சோதியார் பிறந்தார். இவர் தம்குல முறைப்படி உயிர்களுக்குண்டாகும் நோய் முதலிய துன்பங்களை நீக்கி, இன்பத்தைத் தர வல்ல பெருந்தகையாளராவார்.

பரஞ்சோதியார் தமது குலத்திற்குரிய * ஆயுள்வேத மென்னும் மருத்துவநூலை துறைபோகக் கற்றுத்தேர்ந்தார். பின்னர் வேத சிவாகமங்களையும், யுத்த நூல்களையும், மற்றெல்லாக் கலைகளையும் கற்று உலகத்தில் சிறந்து விளங்கினர்.

தாய் தந்தையர் வைத்த அருமைப்பெயர் தெரியாமல் தாம்பிறந்த ஊரின் பெயரால் அழைக்கப் படுபவரும், தம் கணவனின் கருத்துக்கு மாறுபடாத வருமாகிய வெண்காட்டு நங்கை என்னும் பெண்மணியைப் பரஞ்சோதியார் மனைவியாகக் கொண்டு இல்லறம் நடாத்திவருவாராயினர்.

அவர் பலவகை அறிவு நூல்களின் ஆராய்ச்சியின் பயனால் விரிந்து தெளிந்த உள்ள முடையவரானார். நித்தியப்பொருளும், இன்பப்பிழம்புமாகிய சிவபெருமான் திருவடிகளில் பள்ளத்தில் பாயும் நீர் வீழ்ச்சி போல் இடைவிடா அன்பைச் செலுத்தும் பெருங்குணத்தையுடையவர். சிவனடியார்கட்கும் பொது ஜனங்களுக்கும் தொண்டு புரியும். பேரன்புடையவர்.

இம்மருத்துவப் பெரியார் சோழநாட்டில் அக்காலத்தில் அரசு செலுத்தி வந்த பல்லவ அரசனும் குடிகளும், பிணிகளால் மெலிந்து துன்புறாதபடி நோயணுகா நல்வழிகளைப் பொதுமக்கள் அறிந்தொழுகும்படி போதித்து வந்தார். அவர்கட்கு நோய்கள் வராமல் தடுத்து. நோயால் வருந்துவோர்களுக்கு ஆங்காங்கு மருத்துவச்சாலைகளை அமைத்தும் தக்கமருத்துவர்களைக் கொண்டு, மருந்துதவினர், அரசனின் அவைக்களத்தில், ஐம்பெருங்குழுவெனும் மந்திராலோசனை சபையில் அமர்ந்து சமூகத் தொண்டு புரிவாராயினர்.

அந்நாளில் ஆயுள்வேதியாகிய பரஞ்சோதியாரின் அறிவு நுட்பத்தையும், அன்பின் பெருக்கையும் அரசன் அறிந்து தமது உடம்பையும் உயிரையும், அவரிடம் ஒப்புவித்ததுபோல் தமது அரசாங்கத்தையும்

---

* ஆயுள்வேதக்கலையும் அலகில்வட நூற்கலையும்
தூயபடைக் கலத்தொழிலும் துறைநிரம்பப் பயின்றவற்றால்
பாயுமதக் குஞ்சரமும் பரியுமுகைக்கும் பண்பு
மேயதொழில் விஞ்சையினு மேதினியில் மேலானார்.

ஒப்புவித்து அவரைத்தமது * உயிர்த்தோழராகவும் படைத்தலைவராகவும், அமர்த்திக்கொண்டான். அன்று முதல் அரசியல் பொறுப்பு முழுவதும் பரஞ்சோதியார் ஏற்று வேற்று நாடுகளில் குடிகளைத் துன்புறுத்தி கொடுங்கோல் செலுத்தும் பகை அரசர்களையெல்லாம் போரில் வென்று புறங்கண்டு அவர்களுடைய நாடுகளைக் கைப்பற்றி குடிகளுக்குவேண்டிய நலங்களையெல்லாம் புரிந்து, பொது சனங்களாலும், அரசனாலும் நன்கு மதிக்கப்பெற்றுப் பெரும்பு கழுக்குரியவரானார்.

பின்னர் தமிழ்நாட்டிக்கு வடநாடும் இந்தியாவுக்கு நடுநாடும் நிஜாம் அரசைச் சார்ந்ததும், மகாராஷ்டிர மொழியில் பாதாமி எனவும், தமிழ் மொழியில் வாதாவி எனவும் வழங்கும் பெயர்களையுடையதுமான நாட்டைத் தமக்குத் தலைநகரமாகக் கொண்டு அக்காலத்தில் ஆட்சிபுரிந்து வந்தவன் இரண்டாம்புலி கேசன் என்பவன். அவன் தமிழ் நாட்டைக் கவரும் கருத்துடன் பல்லவ அரசனிடம் பகைகொண்டிருந்தான். அதை உணர்ந்து பரஞ்சோதியார் அரசனிடம் விடைபெற்று வடநாட்டிலுள்ள அவ்வாதாபி என்ற நகரத்தின்மீது படை எடுத்துச்சென்று அவ்வரசனை தோல்வியுறச்செய்து, அவ்வரசனிடம் பெருநிதிகளையும், மணிக்குவியல்களையும் கப்பமாகப் பெற்றுப் பெருவெற்றியுடன் திரும்பினார். 0

இவைகளைக்கண்ட பல்லவ அரசன் பரஞ்சோதியாரிடம் அளவு கடந்த மரியாதையுடையவனாகி அவரைப் பெருமையோடு வரவேற்றுக் கொலு மண்டபத்தில் ஒருபேரவைகூட்டி பரஞ்சோதியாரின் வீரச்செய்கையை அச்சபையில் வியந்து பலவாறு புகழ்ந்து கூறினான். அதுகாலை ஆங்குள்ள அமைச்சர்களும், ஜனப்பிரதிநிதிகளும் பரஞ்சோதியாரின் சிவபக்தியையும் அடியார் பக்தியையும், அவருக்கு உயிர்களிடத்துள்ள இரக்கத்தையும், அவருடைய உபகாரச்செயல்கள் முதலிய தொண்டுகளையும் அரசனுக்குச் செவ்வையாக எடுத்து விளக்கிக்கூறி. அவர் சிவ

---

* ஈசனடியார்க்கென்றும் இயல்பான பணிசெய்தே
ஆசில்புகழ் மன்னவன்பால் அணுக்கரா யவர்க்காகப்
பூசல்முனைக்க ளிறுகைத்துப் போர்வென்று பொருமரசர்
தேசங்கள்பல கொண்டு தேர்வேந்தன் பால்சிறந்தார்.

0 மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தே யிகலரசன் முன்கொணர்ந்தார்.



அடியாராதலால் அவரைவெல்ல எவராலும் இயலாதெனவும், அவரால் இயலாத காரியம் ஒன்றுமில்லை என்றும் கூறினார்கள். அதனைக்கேட்ட அரசன் அஞ்சி நடுங்கி அந்தோ! இவர் மிகப்பெரியார் என அறியாமல் இவரைப்போர் முனைக்கு அனுப்பின பெரும்பிழையை நான் செய்தேன்" என்று சொல்லிப் பரஞ்சோதியாரின் அடிகளை வணங்கி, அவரைநோக்கி ஐயனே! என் பிழையைப் பொறுத்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தான். பரஞ்சோதியாரும் அரசனை வணங்கி "அரசரேறே! நான் எனது நாட்டுக்குச் செய்யவேண்டிய தொண்டைச் செய்தேன், அது தங்கள் குற்றமாகாது, என அரசனைத் தேற்றினார். பின்னர்ப் பெரியோர்களிடத்தில் அன்பு மிகுந்த அரசன் பரஞ்சோதியாருக்கு அளவற்ற செல்வங்களைக்கொடுத்து, இதுவரையில் தாங்கள் செய்துவரும் தொண்டை நான் அறியாதவனாயினேன். தாங்கள் இயற்றும் பெரும்பணியை இனி யாதொரு தடையுமின்றி நடத்திக்கொண்டிருங்கள்" எனவேண்டினான். அவ்வண்ணமே பரஞ்சோதியார் அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு, தாம் வதியும் திருச்செங்காட்டாங் குடியில் வெண்காட்டு நங்கையெனும் தமது காதலியோடு கணபதீச்சுரமெனும் சிவாலயத்தில் சிவவழிபாடு செய்வதையும் சிவனடியார்களுக்கும் "காணார் கேளார் கான்முடப்பட்டார் பேணுநரில்லார் பிணி நடுக்குற்றார்" எனும், குருடர், செவிடர், கூனர், முடவர், பிணியாளர், ஆதரவில்லாத சிறு குழந்தைகள், கிழவர் முதலியவர்கட்கும் உடற்பிணியறிந்து ஏற்றமருந் துதவுதல், முதலிய தொண்டியற்றுதலையும் மேற்கொண்டிருந்ததோடு மக்களின் பசிநோய்க்கு அவரவர் விரும்பியபடி நாள்தோறும் உணவளித்து அவர்கள் பசிநோய் நீங்கி மகிழ்ச்சி யடையக்கண்ட பின்னரே தாம் உண்பதெனும் கொள்கையையும் கடைப்பிடித் தொழுகுவாராயினர்.

(தொடரும்)

---

## தமிழ் மொழி.

ஆங்கிலநூல் கற்றாரும் ஆரியநூல் கற்றாரும்
பாங்குபடப் பிறநாட்டிற் பயிலுமொழி கற்றாரும்
தேங்குசுவைச் செந்தமிழைச் சிறிதளவு சுவைப்பாரேல்
ஈங்கதற்கு நிகரொன்று மில்லையெனப் புகழ்வாரே.

அன்பைவளர்க்குந் தலைவனிடம் அருளைவளர்க்கும் உயிர்களிடம்
இன்பம்வளர்க்கும் உளத்திடையே இசையை வளர்க்குந் திசையெல்லாம்
துன்பமொழிக்கும் பகையொழிக்கும் சுவையார் தமிழைக் கல்லாமல்
என்செய்கின்றீர் தமிழர்களே இதன்மேல் மொழியுங் கண்டீரோ.

இறையையுணர்த்தும் நூல்பலவாம் எண்ணையுணர்த்தும் நூல்பலவாம்
மறையையுணர்த்தும் நூல்பலவாம் மருந்தையுணர்த்தும் நூல்பலவாம்
முறையையுணர்த்தும் நூல்பலவாம் மூவாநெறிசொல் நூல்பலவாம்
குறையொன்றில்லாத்தமிழ்க்கிணையாய்க் கூறத்தகுமோர்மொழியுண்டே

கண்ணுக்கினிக்கும் வாய்க்கினிக்கும் கருத்துக்கினிக்கும் செவிக்கினிக்கும்
பண்ணுக்கினிக்குந் தண்டமிழைப் படியாதந்தோ வீணாக
மண்ணுக்குழைப்பீர் நிலையில்லா வாழ்க்கைக் குழைப்பீர் கள்ளமன
எண்ணுக்குழைப்பீர் இவைகளினா லெய்தும்பேறென் புகல்வீரே.

உள்ளங்கனிய மயிர்ச்சிலிர்க்க ஊற்றெடுத்துக் கண்களினீர்
வெள்ளம் பெருகத் தமிழ் மொழியில் மேலோர் பாக்கள்பலகோடி
தெள்ளத் தெளிந்த வமுதம்போல் சேரைம்புலனும் பரவசமே
கொள்ளவிருக்க வடமொழியிற் கூறுமறையேன் புகல்வீரே.

**கா. சி. சிவசங்கரன்.**

---

## தென் இந்திய மருத்துவர் சங்கத்தில் ஒரு இரங்கற்கூட்டம்.

19-11-28. ஆம் நாள் தென் இந்திய மருத்துவர் சங்கத்தின் ஆதரவில், லாலாலஜபதிராய் காலமானதைப்பற்றி பண்டிட் ஆனந்தம் அவர்கள் தலைமையில் ஒரு இரங்கற் கூட்டம் கூடினார்கள். பண்டிட் ஆனந்தம் அவர்கள் பேசினதின் சுருக்கம். லாலாலஜபதியைப் பற்றி நான் ஒன்றும் சொல்லுவதற்கு அருகனல்ல வாயினும், இந்தியா தற்காலம் இருக்கும் நிலையில் அவர் இறந்தது பெரிய நஷ்டமாகும். லஜபதி சமீபத்தில் தென் இந்தியாவுக்கு யாத்திரையாகவந்து, இங்குள்ள சாதிவேற்றுமைகளையும், தாழ்ந்த வகுப்பினர்களுடைய நிலையையும்; தலைவிரிகோலமான மத வேற்றுமைகளையும், தெய்வ வழிபாடுகளையும், கடவுளின் பேரால் வீண்செலவுகள் நடை பெறுவதையும், ஏழைகள் பட்டினிகிடந்து வருந்துவதையும் கண்ணுற்று மனம் வருந்தினார். பிராமணர், பிராமணரல்லாதார் என்ற கட்சிப்பிளவுக்குக் காரணத்தையும் அறிந்தார். அவர் இன்னும் சிறிதுகாலம் இருந்திருப்பாரேல் கொஞ்சமாவது பொது ஜனங்களுக்கு நன்மை விளைந்திருக்கும் என்றும், இன்னும் அவருடைய பொதுஜன ஊழியத்தைப் பற்றியும் விரிவாகப்பேசினார். பின்னர், தென் இந்திய மருத்துவ சங்கத்தாரின் அனுதாபத்தை அவர் குடும்பத்தாருக்கு அறிவிப்பதாக தீர்மானம் செய்யப்பட்டது.



## இணக்கவயது கமிட்டியாரின் கேள்விகளுக்குத் தென் இந்திய மருத்துவ சங்கத்தலைவர்.

### ட். எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் கொடுத்தசாட்சி

---

**கேள்வி:**—1. இந்தியன் பினல்கோட்டிலுள்ள 375, 376, செக்ஷன்படி சம்மத வயது திட்டம் அமுலிலிருப்பதில் தங்களுக்குத் தற்காலம் ஏதாவது அதிர்ப்தி உண்டா ?

**பதில்:**—இந்தியன் பினல் கோட்டில் 375-வது செக்ஷனில் உள்ள எக்ஸெப்ஷன் கூடாது.

இந்தியன் பினல் கோட் 375-வது செக்ஷனில் கண்டுள்ள 5-விஷயங்களில் அதிர்ப்தி ஒன்றுமில்லை. ஆயினும், அந்த செக்ஷனில் எக்ஸெப்ஷனாக 13-வயதுக்கு மேற்பட்ட பெண் தனது மனைவியாயிருந்தால் அவளை அவள் கணவன் சேர்ந்தால், அது 'ரேப்' என்னும் குற்றமாகா தென அந்த செக்ஷனில் இருக்கிறது. அந்த எக்ஸப்ஷன் இருப்பது சரியல்ல. சொந்தகணவனே யாயினும், 16-வயதிற்குள்பட்ட தனது மனைவி சம்மதித்தாளாயினும் கணவன் அவளைச்சேர்ந்தால் அது ரேப் என்னும் குற்றத்தில் சேர்க்கவேண்டும்.

**காரணம்:**—இந்தியாவில் இந்துக்கள் பலவீனர்களாயிருப்பதற்கும், பெண்களுக்கு இயற்கையாயும், சாதாரணமாயும் நடைபெற வேண்டிய பிரசவம் அவர்களுக்கு மிக ஆபத்தாயிருப்பதற்கும், பால்ய விதந்துகள் மிகுதியாயிருந்து வருந்துவதற்கும், சிசு மரணத்திற்கும் காரணமாயிருப்பது, பெண், ஆண்களின் உடம்பு, முழு உடம்பு (பூரணசரீரம்) ஆவதற்குள் அவர்கள் பொருந்துவதின் கொடுமையேயாகும். கணவனுக்கு 24-வயதிற்குமேலும், பெண்களுக்கு 16-வயதுக்கு மேலும் விவாகம் செய்யவும், அதன் பின்னர் பெண் ஆண்கள் சேரவும் சட்டம் ஏற்படல் வேண்டும்.

**கேள்வி:**— 2. (a) இப்போதிருக்கும் சம்மதவயது சட்டத்தை அப்படியே வைத்துக் கொள்ளவோ?

(b) அல்லது அதில் இன்னும் திருத்தம் செய்யவோ நீங்கள் நினைப்பதற்கு என்ன காரணங்கள் உள?

**காரணம்:**— இப்போதிருக்கும் சம்மத வயது சட்டத்தைத் திருத்தவேண்டும்.

**பதில்:**— 14-வயதுடைய ஒரு பெண்ணுக்குக் கலியாணத்தால் தனக்கு உலகத்தில் ஏற்படப்போகும் பொறுப்பு இன்னதென உணர அறிவு போதாமையாலும், 16-வயதுக்குள் அவள் கருப்பெறுவது மிக அபாயத்திற் கிடமாயிருப்பதாலும், அவள் வாழ்நாள் முழுவதும் பலவீனமாயிருக்க நேருகிறபடியாலும், இப்பொழுதிருக்கும் சம்மதவயது பதினாலைப் பதினாறாக மாற்றவேண்டும்.

கேள்வி:—3. உங்கள் நாட்டில் பெண்களைக் கெட்டவழியில் திருப்புவதோ, பலாத்காரமாகக் கற்பழித்தலோ, அடிக்கடி நடக்கின்றதா? சம்மத வயதை 14-ஆக உயர்த்தி 1925-ம் ௵ திருத்திய சட்டத்தால் பெண்கள் அவர்கள் கணவர்களைத் தவிர பிறர் கற்பழித்தலோ, கெட்ட வியாபாரத்திற்காகப் பெண்கள் மனதைக் கலைப்பதோ குறைந்து வருகிறதா? இல்லா விட்டால் எப்படிச்செய்து அச்சட்டத்தை பயன் படச் செய்யலாம்?

பதில்:— ஆம். எங்கள் நாட்டில் பெண்களைக் கெட்டவழியில் திருப்புவது நடை பெறுகின்றது. 1925-௵ சம்மத வயதைப் பதினாலாக திருத்தியதால் கெட்ட வியாபாரத்திற்காகப் பெண்களின் மனதைக் கலைப்பது முதலியன குறைந்ததாகக் காணவில்லை. 16-வயதுக்குட்பட்ட பெண்களுக்குத் தனது வாழ்நாள் முழுவதும் தனது உயிர்த்துணையாய் நாடும் கணவனுக்கும் தனக்கும் உள்ள சம்பந்தம் இன்ன தென்றறிவதற்கும், கணவனின் யோக்கியதையறிந்து தனக்குத் தக்க கணவனைத் தீர்மானித்துக்காதலிப்பதற்கும் உலக அனுபவமும் அறிவும் போதாது, ஆதலால் சம்மத வயதை பதினாலாகத் திருத்தியது போதாது. பதினறாகத் திருத்தவேண்டியது தான் சரி.

கேள்வி:— 4 13 வயதிற்குள் பெண்களை அவர்கள் கணவர்களும் சேரக்கூடாதென்று 1925-ஆம் வருடம் திருத்திய சட்டத்தினல் பயனுண்டா? அப்படிப் பயனுற

1. சாந்தி முகூர்த்தத்தைத் தள்ளிவைக்க சட்டம் செய்யலாமா?

2. பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தை மாற்ற பிரசாரம் செய்யலாமா?

3. கல்யாணத்தையே பெண்களுக்கு 13-வயதிற்குமேல் தான் செய்யவேண்டுமென்று சட்டம் செய்யலாமா? இவைகளன்றி வேறு எவ்வழிகளிலாவது அச்சட்டத்தைப் பயனுறச்செய்ய என்னயோசனை சொல்லுகிறீர்கள்?

பதில்:— 1925௵ 13-வயதுக்குள் பெண்களை அவர்கள் கணவர்களும் சேரக்கூடாதென சட்டம் செய்ததால் பயனில்லை.

1. சாந்திமுகூர்த்தம் வேறு, கலியாணம் வேறு என்று இரண்டு சடங்குகளை கூடாது. கலியாணமே 16 வயதுக்குமேல் செய்யவேண்டுமெனும் சட்டம் வருவது தான் நலம். கலியாணத்தன்றே, அன்று மறுநாளோ சாந்திமுகூர்த்தமும் நடைபெற வேண்டியது தான் சரி. இப்படி பல விடங்களில் நடை பெறுகின்றது.

2. இதைப்பற்றிப் பொது ஜனங்களுடைய கருத்தை மாற்ற பிரசாரம் மிக அவசியமாகும். பாடசாலைகளிலும் ஆண் பெண்களுக்கு தேக சம்பந்தத்தினல் வரும் இன்பதுன்பங்களையும், அதற்குத்தக்க காலத்தையும் போதிக்கவேண்டும்.



3. பெண்களுக்குக் கலியாணத்தைப் பதினறுவயதுக்குமேல் தான் செய்ய வேண்டுமெனும் சட்டம் ஏற்படுத்துவது மிக அவசியமாகும். 16-வயதுக்கு மேல் பெண்களும், 24-வயதுக்குமேல் ஆண்களும் கலியாணம் செய்து கொள்ளுமுன் ஆண் பெண் இருவர்களின் தேகநிலையையும் மனதையும் டாக்டர் பார்த்துத் தகுதியானவர்களென அனுமதித்த பின்னர் மணம் செய்வதே நல்லது.

கேள்வி:— 5. உங்கள் நாட்டில் அநேகமாய் எந்தவயதில் பெண்கள் பிரவிடையாகிறர்கள்? அது ஒவ்வொருசாதிக்கும், மதத்திற்கும் வேற்றுமைப் படுகிறதா?

பதில்:— எங்கள் நாட்டில் பொதுவாக பெண்கள் அநேகமாய் பதினேருவயதுக்கு மேல் பருவமடைகிறர்கள்.

கேள்வி:— 6. பெண்கள் பருவமடையாததற்கு முன்னே, அல்லது பருவமடைந்த பின்னே? 13-வயது முடிவதற்குள்ளோ, ஆண் பெண் சேருவது உங்கள் நாட்டில் சகஜமாய் இருக்கிறதா? இப்படிப்பட்ட விஷயம் ஏதாவது கோர்ட்டுக்கு வருகிறதா?

பதில்:— எங்கள் நாட்டில் சிறு வகுப்பினராகிய பிராமணர்கள் மட்டும் பெண்கள் பருவமடைவதற்கு முன்னும், பின்னும், பதிமூன்று வயதுக்கு முன்னும் பெண்களைச் சேருவதாகத் தெரிகிறது, பிராமணரல்லாத பெரும்பகுதி மக்கள் பெண்கள் பருவமடைவதற்கு முன் ருது சாந்தி செய்வதில்லை.

கேள்வி:— 7. பாலியத்தில் பிரவிடையாவதற்கு முன்னே, ஆன உடனேயோ, பெண்களுக்கு எங்கெங்கு சாந்திமுகூர்த்தம் நடக்கிறதோ அங்கெல்லாம் மதத்தின் தூண்டுதலால் நடைபெறுகிற தென்று நீங்கள் நினைக்கின்றீர்களா? அப்படி மதத்தூண்டுதலாயிருந்தால், அது எந்த அதிகாரத்தினல் எப்படி நடை பெறுகிறது? அதைமீறி நடப்பவர்களுக்கு அவ்வதிகாரத்தினல் என்ன சிக்ஷை விதிக்கப்படுகிறது?

பதில்:— 8. தென்னிந்தியாவிலுள்ள பிராமணர்களுக்குள் அவர்கள் சாதிவழக்கத்தினல் பெண்கள் பருவமடைவதற்கு முன்னும், பருவமடைந்த உடனேயும் விவாகம் செய்வதாகத் தெரிகிறதே அன்றி மதம் அதற்குத் தூண்டுதலாயிருப்பதாகத் தெரியவில்லை.

கேள்வி:— 9. பெண்கள் பிரவிடை ஆவதே, அவர்களுடைய தேகவலிமை சாந்திமுகூர்த்தத்திற்குத் தகுதியான நிலையையடைந்து விட்டதற்கு ஒரு அறிகுறி என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? அவர்கள் பின் சந்ததி சுகமாய் வளர்ந்து வாழவும், பெண்ணுடைய தேகநிலை கெடாதிருக்கவும் அவள் பிரவிடையாகி எத்தனை காலம், அவள் தேகம் சாந்திமுகூர்த்தத்திற்கு லாயக்காக காத்திருக்க வேண்டுமென்று நினைக்கின்றீர்கள்?

பதில்:— பெண்கள் பருவமடைந்ததனால் மட்டும், அவர்கள் உடம்பு கணவன் சேர்க்கைக்குத் தகுதியான குறியாகாது. பெண்களின் தேக நிலை கெடாதிருக்கவும், 'அவர்கள் சந்ததி சுகமாய்வளர்ந்து வாழவும், பெண்கள் ருதுவாகி நாலுவருஷம் வரை சாந்தி முகூர்த்தம் செய்யாமல் இருத்தல் வேண்டும்.

கேள்வி:— 10. தன் பொறுப்பையும் பின்னால் நேரிடுவதையும் அறிந்து ஒருபெண் தன் முதிர்ந்த அறிவுடன் சாந்திமுகூர்த்தத்திற்கு இணங்க எத்தனைவயதாக வேண்டுமென்று நினைக்கின்றீர்கள்?

பதில்:— பெண்கள் 18-வயதிற்கு மேல் தான் தாங்கள் பொறுப்பாளியாக விருந்து எக்காரியமும் செய்யத்தக்கவர்களாகின்றார்களென்றும், அவ்வயதிற்குட் பட்டவர்கள் மைனர்கள் எனவும், அவர்கள் சொத்தைப் பற்றியோ இன்னும் மற்ற காரியங்களையோ தானகச்செய்தால் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்றும் சட்டமிருக்கும்போது, தங்கள் வாழ்நாள் முழுவதையும் பாதிக்கக் கூடியதும், மிக முக்கியமான துவுமான புருஷசேர்க்கைக்கு உடன் படுவதென்பதற்கு 16-வயது போதுமென்பது எப்படிப் பொருந்தும்?

ஒரு பெண்ணின் பெற்றோர்களோ, அல்லது அப்பெண்ணின் நலத்தை உண்மையில் கோரும் சுற்றத்தாரோ, தங்களிடையில் நடைபெற்று வரும் வழக்கப்படி ஒரு ஆண்மகனுக்கு அப்பெண்ணை 16 - வயதிற்குமேல் விவாகம் செய்து கொடுக்கலாம்.

ஆனால் பெண் தனது பொறுப்பையுணர்ந்து, தானே ஒரு புருஷனைத் தீர்மானித்துக் கொள்ளுவதற்கு 18-வயதுக்கு மேலாக வேண்டும். உடம்பு வளர்ச்சி போது மெனினும் அறிவு வளர வயதாக வேண்டும்.

கேள்வி:— 11. உங்களுடைய அனுபவத்திலாவது, உங்கள் தொழில் சம்பந்தமான அனுபவத்திலாவது, வேறு எப்படி இருந்தாலாவது சரி; பெண்கள் பிரவிடை ஆவதற்கு முன்னே அல்லது பிரவிடையாகி உடல் நிலை முற்றும் வலி வடைதற்கு முன்னே ஆண்களால் சேரப்படுவதால், அவர்களின் தேகநிலை கெட்டிருப்பதையாவது, அவர்கள் சந்ததி கேடு அடைந்திருப்பதையாவது பார்த்திருக்கிறீர்களா? அப்படி இருந்தால் அப்பெண்ணின் வயதையும் அவள் அடைந்த கெடுதலையும் அறிவிக்கவும்.

பதில்:— 16. வயதிற்குள் எந்த பெண்களும் பூரண உடல் நிலையையடைவதில்லை. இதைப்பற்றி மற்ற கேள்விகளுக்குச் சொல்லிய பதிலில் சொல்லப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் பெண்கள் நூற்றுக்குத்தொண்ணூறுபேர் வரையில் உடல் வலியற்றவர்களாகவும், நோயாளிகளாகவும் இருக்கின்றனர். சிசு மரணமும் மிகுதியாயிருக்கின்றது. சிசுக்கள் நூற்றுக்குத் தொண்ணூறு மிகவும் மெலிந்தும் நோயுடனும், வயதிற்குத் தக்க வளர்ச்சியற்று மிருப்பது வெளிப்படை. நானே ஒருவைத்தியனாயி



ருந்து, தரும வைத்தியசாலை வைத்து நடத்திப்பார்த்து வருவதால் இதை நிரூபிக்க என்னிடம் பலசாட்சிகள் உண்டு. பெண்களின் ஆஸ்பத்திரிகளில் இதற்கு சாட்சியம் மிகுதியாகக் கிடைக்கும். தென் இந்தியாவில் பிராமணவகுப்பினரில் கல்யாணமான எந்தப்பெண்ணும் 16-வயதிற்குள் புருஷசேர்க்கையை யடைந்து பிள்ளைப்பெற்றவர்களே ஆவர். மற்ற வகுப்பார்களிலும் நூற்றுக்கு எண்பது பெண்கள் 16-வயதிற்குள் புருஷன் சேர்க்கையை யடைந்தவர்களே யாவர். பொதுவாக நம் நாட்டிலுள்ளவர் அனைவரும் இவ்வாறு நோயுடன்கூடிய துன்பமான வாழ்க்கையை அடைந்திருப்பதற்குக் காரணம் 16-வயதிற்குள் பெண்களும் 24-வயதிற்குள் ஆண்களும் பொருந்துவதே யாம்.

கேள்வி:— 12. தாய்மார்களும், இளங்குழந்தைகளும் சாவதற்கும், ஜனங்களுடைய அறிவும், தேகவலிமையும் கெடுவதற்கும், பாலிய சாந்தி முகூர்த்தமும், இளம் பெண்கள் தாய்மார்களாவது தான் காரணமென்று நினைக்கின்றீர்களா?

பதில்:— 11. வது கேள்விக்குக் கொடுத்த பதிலே இதற்கும்

கேள்வி:— 13. 1925ஹு திருத்திய சட்டத்திற்குப்பின்னர், சம்மத வயதை அதிகப்படுத்த உங்கள் நாட்டில் ஜனங்களுக்கு எண்ணமிருக்கின்றதா? அப்படி இருந்தால் அது பொதுவாக இருக்கின்றதா? அல்லது ஒரு வகுப்பார் மாத்திரம் அவ்வெண்ணம் உடையவர்களாக இருக்கின்றார்களா?

பதில்:— இப்போது தென் இந்தியாவில் ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் வகுப்பு மகாநாடுகளில் சம்மத வயது உயர்ந்திருக்கவேண்டுமெனத் தீர்மானங்கள் செய்கிறார்கள். தென்னிய மருத்துவர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இரண்டு மூன்று கான்பரன்சுகளிலும் தற்காலம் நடைபெறும் பாலிய விவாகத்தைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்து கவர்ன்மெண்டுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. படித்த மக்கள் மகாநாடுகள் கூட்டிச் செய்த தீர்மானத்தை பாமரஜனங்கள் அனுஷ்டானத்தில் கொண்டுவருவதில்லை. அரசாங்கத்தாரால் சட்டமியற்றிவிட்டால் அது எளிதாக அனுஷ்டானத்தில் வந்துவிடும். தென் இந்தியாவிலுள்ள எல்லா சமாசாரப் பத்திரிகைகளும் பால்ய விவாகத்தைக் கண்டனம் செய்கின்றன. இது வெகு ஜன அபிப்பிராயமாகவே இருக்கின்றது. இதை எதிர்க்கும் சிறு பகுதியினர் ஜாதி வழக்கத்தைக் காரணம் காட்டுகிறார்களே தவிர உடற்கூறு உடற்றொழில், உடல் நலம் முதலிய ஆராய்ச்சியினால் சொல்லுபவர்களல்லர்.

கேள்வி— 14. உங்கள் நாட்டிலுள்ள பெண்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பால்யத்தில் சாந்தி முகூர்த்தம் நடப்பதற்கு அனுகூலமாயிருக்கின்றார்களா?

பதில்:— இந்தியாவில் பொதுவாகப் பெண்மக்களுக்குச் சுதந்திரம், கல்வியில்லாமையினாலும், மூட வழக்கத்தைவிட தைரியமில்லாததினாலும் ஆண்களுக்குக் கட்டுப்பட்டு, அடங்கி நடக்கும் குணமுடையவர்களாகையாலும் பெண்கள் பால்ய விவாகத்திற்குச் சம்மதிக்கிறார்கள். இந்தியாவில் படித்த பெண்கள் பால்ய விவாகத்தை ஒழிக்கவே பாடுபட்டு வருகின்றார்கள்.

கேள்வி:— 15. இந்தியன் பினல்கோட் 375, 376 செக்ஷன்படி ஏற்பட்டுள்ள குற்றங்களின் விசாரணையில் பெண்களின் வயதை நிர்ணயிப்பதில் ஏதாவது கஷ்டங்கள் நேர்ந்திருக்கின்றதா? இக்கஷ்டங்களை நிவர்த்தியாக்கவோ, குறைக்கவோ என்னயோசனை சொல்லுவீர்கள்?

பதில்:— பொதுவாக நீதி மன்றங்களில் பெண்களைப்பார்த்து அவர்களின் வயதை நீதிபதி நிர்ணயிப்பது கஷ்டமேயாகும். பிறந்ததும் எழுதிவைக்கும் சென்ஸஸ் கணக்கைக்கொண்டு வயதைத் தீர்மானிக்கலாம். பற்களின் வரிசையையும் எண்ணி வயதைத் தீர்மானிக்கலாம்.

கேள்வி:— 16. சம்மதவயதை 14 ஆகவோ அதற்கு மேலாகவோ உயர்த்தினால் வயதை நிர்ணயிக்கும் கஷ்டம் நீங்குமா? அல்லது குறையுமா?

பதில்:— சம்மதவயதை பதினாறாக உயர்த்தினால் நன்மையுண்டு.

கேள்வி:— 17, 18. கணவனாயிருந்து செய்யும் குற்றத்தையும், அன்னியனாயிருந்து செய்யும் குற்றத்தையும் வித்தியாசப்படுத்துவீரா? அப்படியானால் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு தண்டனைகளை எந்தவிதமாக விதிப்பீர்கள்? இவ்வகையான வழக்கு விசாரணையில் கணவனாக இருப்பவனுக்கும், மற்றவனுக்கும் வித்தியாசம் பாராட்டுவீரா? அப்படியானால் அக்குற்றவாளிகளைத் தனியே எவ்விதமாக விசாரிப்பதென்பதை சொல்லுகிறீர்கள்?

பதில்:— கணவன் செய்யும் குற்றத்தையும், கணவனல்லாத மற்றவன் செய்யும் குற்றத்தையும் வித்தியாசமாக நோக்குவதில் அர்த்தமில்லை. 16 வயதிற்குள் ஒரு பெண்ணைச் சேருபவன், அவன் கணவனாயிருப்பதால் அவ்வளவு கெடுதலில்லையென்பது சரியல்ல. மற்றவர்களைவிட கலியாணம் செய்துகொண்ட கணவர்களுக்கே இக்குற்றத்தைச் செய்ய அதிக வசதியுண்டு. ஆகையால் கல்யாணமே 16 வயதிற்குமேல்தான் நடக்கவேண்டுமென்று சட்டம் செய்து 16 வயதிற்குள் கணவன் ஏற்படாமலே செய்யவேண்டும்.

கேள்வி:— 20. கணவன் மனைவி விஷயத்தில் குறைந்த வயதை நிர்ணயித்துச் சாந்தி முகூர்த்தத்திற்குச் சட்டம் செய்யலாமா? சம்மத வயதை யுயர்த்தி அதை மீறுபவர்களைத் தண்டிக்கும்படி சட்டம் செய்யலாமா? உங்கள் நாட்டு ஜனங்கள் மேல் சொன்ன இரண்டில் எந்த விதியை ஏற்றுக்கொள்ளுவார்கள்?



பதில்:— மூன்றாவது நான்காவது கேள்விக்கு பதிலில் பார்க்கவும்.

கேள்வி:— 21. உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற தண்டனை விதிக்கும் சட்டங்களில் நம்பிக்கை வைக்கிறீர்களா? அல்லது பொது மக்களுக்கிடையில் செய்யும் பிரசாரத்தினாலும், கல்வி யறிவு விர்த்தியாவதினாலும் ஜன சமூகம் சீர்திருத்தம் அடைவதில் நம்பிக்கைக் கொள்கின்றீர்களா?

பதில்:— சட்டங்களை விதிப்பது ஒன்று மட்டும் போதாது. அதனுடன் பொதுமக்களுக்குக் கிடையில் செய்கின்ற பிரசாரத்தினாலும், கல்வி விருத்தியாலும். சீர்திருத்தம் பண்ணவேண்டும். ஆங்கில இந்தியர்களும், இந்து கிருஸ்தவர்களும் தவிர இந்து பெண்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொரு பெண்களுக்குமேல், தான் மணந்துகொள்ளப்போகும் கணவனைக் கலியாணத்திற்குமுன் கண்ணால் பார்த்திருக்கவேமாட்டார்கள். ஆண், பெண்களின் சம்மதமின்றியே அவர்கள் பெற்றோர்களும், மற்றோர்களுமே பெண் ஆண்களைத் தீர்மானித்துச் சேர்த்துக் கலியாணம் செய்துவிடுகிறார்கள். மணம் செய்துகொள்ளும் ஆண் பெண்கள் ஒவ்வொருவருடைய சம்மதத்தையும் பெற்றோர்கள் தெரிந்துதான் கலியாணம் செய்யவேண்டும். இந்தியாவில் பொய்யான சாதியையும், பணத்தையும் பார்த்தே பெற்றோர்கள் மக்களுக்கு மண முடிக்கின்றார்கள். இதனால் விளையும் தீமைகளுக்கு அளவில்லை அத்தீமைகள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சமாச்சார பத்திரிகைகளுக்கும்வராது, நீதிமன்றங்களுக்கும் வராது. வரதட்சிணை வாங்குவதை தடுத்தல் வேண்டும், கலியாணம் செய்துகொள்ளப்போகும் ஆண், பெண்களின் சம்மதமின்றி பெற்றோர்கள் வற்புறுத்தி செய்யக்கூடாது.

a. ஆண் பெண் பாடசாலைகளில் 12 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும், 18 வயது மேற்பட்ட ஆண்களுக்கும் சுகாதார போதனையோடு கலியாணம் என்பது இன்னதென்பதையும், ஆண் பெண் சேர்க்கைக்குரிய காலத்தையும், பால்ய விவாகத்தினால் வருந் தீமைகளையும் எடுத்துப் போதிக்கவேண்டும்.

b. கலியாணம் செய்துகொள்ளுகிற பெண்ணிற்கு வயது 16 ஆணுக்கு 24 க்குக்கு குறையாமல் இருக்கவேண்டும்.

c. கலியாணம் செய்துகொள்ளுமுன், கலியாணம் செய்துகொள்ளும் ஆண், ஆண்வைத்தியராலும் கலியாணப்பெண், பெண்வைத்தியராலும், நோயில்லாதவர்களா? தக்கவயதுடையவர்களா எனச் சோதித்து வைத்தியர் அனுமதிச் சீட்டு பெறவேண்டும்.

கலியாணம் செய்துகொள்ளப்போகும் ஆண் பெண், இருவரும் கலியாணத்திற்கு முன்னமே ஒருவரை ஒருவர் நேரில் கண்ணால்பார்த்து அவரவர் யோக்கியதை, கல்வி முதலியவைகளை அறிந்திருக்கவேண்டும். அவர்களைச் சார்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கவும் அவரவர் யோக்கிதைகளை அறியவும் செய்யவேண்டும்.

# மருத்துவன்

## சுதேமித்திரன், சென்னை

மருத்துவன்:—இது ஒரு வைத்திய மாதப்பத்திரிகை இதன் ஆசிரியர், பண்டிட். எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள். இம்மருத்துவனின் முதல் இதழில் இரும்பின் விவரமும், அதைச் செந்தூரம்செய்யும் விதையும், பாலர் பரிபாலனத்தில் சிசு பிறந்தது முதல் செய்யவேண்டிய காரியங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இது வைத்தியர்களுக்கும் மற்றவர்கட்கும் உபயோகமுள்ள பத்திரிகையாகும்.

---

## தாருல் இஸ்லாம், சென்னை

### மருத்துவன்

இது பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் மாதாந்தப் பத்திரிகை. தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டுவந்த பல எளியவீட்டு வைத்திய முறைகள் மறக்கப்பட்டிருக்கும் இக்காலே இப்பத்திரிகை நல்வரவேற்பதற்குறியது. தமிழ் வைத்திய முறைப்படி மருந்துகள் செய்யும் முறைகள், தேகாரோக்கிய சம்பந்தமான வியாசங்கள் முதலிய காணப்படுகின்றன. இஃது எல்லோராலும் படிக்கப்பட வேண்டிய பத்திரிகை யாகும்.

---

## உதயதாரகை (யாழ்ப்பாணம்)

மருத்துவன் சென்னையினின்றும் நவமாய் வெளிவந்துள்ள மாதாந்த வைத்திய பத்திரிகை. ஆண்,பெண் பாலார் யாவருக்கும் நோயணுகாதிகளும், மருந்தின்றி பரிகரிக்கும் முறைகளும் போதிக்கும் நோக்கத்தோடு இது தோன்றியிருக்கிறது. விசேஷமாய் பெண்பாலார்க்குண்டாகும் அசௌக்கியமும், அபாயமுமான நிலைமைகளில் அவர்கள் அநுசரிக்க வேண்டிய சுகாதார முறைகளும்,செய்யவேண்டிய சிகிச்சைகளும் பிறவும் இதில் நல்ல செந்தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. பாலர் பரிபாலன முறைகளுஞ் சால வெளிவரு மென்பது நோக்கத்துள்ளமைந்த மற்றோர் திட்டம். இதன் போக்குகளைக் கவனிக்குங்கால் இதுநம் தமிழ்நாட்டுக் குடும்பங்களுக்குத் தானே ஓர் குடும்ப வைத்தியனாய் நிலவுந் தகைமையுடையது என்பதற்கு எவரும் பின் நில்லார். ஆகலால் ஒவ்வொரு குடும்பத்தவரும் இதனைத் தம் குடும்பவைத்தியனாக மாதமொருமுறை அழைக்க முன் வருவார்களென நம்புகிறோம்.

---



[illegible]
இறைவன் எதிர் தோன்றல்.

## நாடார் குலமித்திரன்

அருப்புக்கோட்டை

"மருத்துவன்" என்னும் நாமம் புனைந்த தமிழ் வைத்திய மாதப் பத்திரிகை யொன்று எம் பார்வைக்கு வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் பரம்பரை மருத்துவகுலத்துதித்த ஸ்ரீமான் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களாவர். இவர் தமிழ் வைத்திய முறைகளை உயிர்ப்பித்து ஒளிரச்செய்யவேணுமெனும் நாட்டமிக்குளராவர். இவ்வகையில் இவர் பல ஊழியங்கள் புரிந்திருக்கிறார். இவரின் ஜனோபகாரத் தன்மையும், வைத்திய நிபுணத்துவமும் கண்டு டாக்டர். ஸர். சுப்பிரமணியம் ஐயர், ஸர். பி. தியாகராயசெட்டியார், திவான் பகதூர்-பி. ராஜரத்தினம் முதலியார்முதலிய பெரியார்கள் மெச்சியிருக்கிறார்களெனத் தெரியவருகிறோம். இவர்களே மெச்சி ஆதரவு காட்டியிருக்கிறார்களென்றால் இவ்வாசிரியரின் பெருமையை நாம் விளக்கவேண்டுவதில்லை. இத்தகைய ஒருவரை ஆசிரியராய்க்கொண்ட இம்மருத்துவனின் தோற்றத்தால் பொதுமக்களுக்கு நோயணுகா நன்மை விளையுமென்பதை யாம் ஒப்புக்கொள்கிறோம். "நோயற்றவாழ்வே குறையற்ற செல்வம்", "நோய்க்கிடங்கொடேல்", "சுவரைவைத்து சித்திரம் எழுது" எனும் பொன்மொழிகளைப் புறக்கணித்து நோய்வாய்ப்பட்டுழலும் மக்கள் நம் நாட்டில் எண்ணிறந்தவர். இன்னோரும், இன்னோர் வழிக்களாகாதிருக்குமாறு ஏனையோரும் ஈடேற்றங்கொண்டு நாடு சுகநாடாய் நனி விளங்க இத்தகைய சுகாதார முறை போதிக்கும் வைத்தியப் பத்திரிகைகள் பல பல தேவை. இத்தேவை குறித்து தம் பணியாற்ற முன்வந்த இதன் ஆசிரியரின் பெருந்தகைமை பெரிதும் பாராட்டற்பாலது. இப்பத்திரிகையில் காணும் சுகாதார விஷயங்கள் பொன்னேபோல் போற்றத் தக்கனவாகும். எல்லாம் நமக்குரிய தமிழ் முறைகள். இது ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியதாகும் என்பது மிகையாகாது. அழகிய புஸ்தக ரூபத்தில் அமைந்திருக்கிறது. வருட சந்தா ரூபா 3—0—0

---

### ஒரு விண்ணப்பம்

"மருத்துவனு" க்கு வருடசந்தா ரூபா—3—0—0 அதிகமென்று சில நண்பர்கள் கருதுவதாகத் தெரிகிறது. சந்தாத்தொகை குறைவாயிருக்க வேண்டு மென்பதே எங்கள் விருப்பமுமாகும். பொதுஜனங்களின் ஆதரவைக்கவனித்து அடுத்த வருஷத்திலிருந்து சந்தாத்தொகையைக் குறைக்கலாமென்று உத்தேசித்திருக்கிறோம்.

மானேஜர்,
மருத்துவன் காரியாலயம்,
221, தங்கசாலை வீதி, சென்னை.




# மருத்துவன்

**PHYSICIAN**

## தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் க. | 1928௵ டிசம்பர்மீ | இதழ் ரு.


## பொன்

பொன் இயற்கை உலோகம், உலோக வகைகளில் இதுமிக விலையுயர்ந்தது. இது மிக ஒளியும், மஞ்சள் நிறமும், ஈயத்தைப்போல் நயமும் (மென்மை) உடையது. மற்ற உலோகங்களைப்போல் இதில் களிம்பு சிறிதும் இல்லை. காற்றினால் பொன் மங்கலடைவதில்லை. இது மற்ற உலோகங்களைவிட மிகக் கனமானது. இது தற்காலம் இந்தியாவில் மைசூர் நாட்டைச்சேர்ந்த கோலார் முதலான விடங்களிலும், அமெரிக்கா, காலிபோர்னியா முதலிய வெளிநாடுகளிலும் மிகுதியாய்க்கிடைக்கிறது. கோலாரில் பொன்னை, நிலத்தில் ஐயாயிரம், ஆறாயிரம் அடிக்குக் கீழ் சுரங்கங்களில் கற்பாறைகளை உடைத்து எடுக்கிறார்கள். உடைத்தெடுத்த கற்களில் பொன் மெல்லிய கொடிபோலவும், சிறு சிறு மணிகளாகவும், துண்டுகளாகவும், கற்களோடுகலந்தும் மினுக்கிக்கொண்டிருக்கும். முற்காலத்தில் ஆற்றுமணலில் பொன் எடுத்துக்கொண்டிருந்தார்கள். காவிரியாற்றின் மணலில் இன்றும் பொற்றுகள் காணப்படுகின்றது. ஆதலால் அந்த ஆற்றுக்கு 'பொன்னி' எனவும் ஒருபெயர் வழங்குகிறது.

பொன் சில கற்பாறைகளில் பெரிய கட்டிகளாகவும் கிடைப்பதுண்டு. அமெரிக்காவில் இருபத்தெட்டு ராத்தல் நிறையுள்ளதும், யூரல் மலைகளில் எண்பது ராத்தல் நிறையுள்ளதுமான பொற்கட்டிகள் கிடைத்ததுண்டு.

பொன்னுள்ள கற்பாறைகளை உடைத்து,இடித்து மைபோல் பொடி பாக்கித் தண்ணீரில் களிமண் கரைப்பதுபோல் கரைத்து, கம்பளிமேல் தடவிய இரசத்தின்மீது ஓட விடுவார்கள். பொன் பொடிகளை எல்லாம் ரசம் பிடித்துக் கொள்ளும். அதனை ஒன்று சேர்த்து உருக்கிக் கட்டி பாக்குவார்கள். தனிப்பொன் உருக்கியாறும்போது சுருங்கி நெருங்குமாதலால் பொன்வார்ப்பு வேலைக்கு உதவாது. எந்தச் சூட்டுக்கும் வேறு பொருள்களின் துணையின்றி உயிர்வளி (பிராணவாயு) உடன் சேராது. சில இடங்களில் பொன், வெள்ளியோடும், செம்பு, அந்திமணி, அயசல்விரம், இரேடியம், ஒஸ்மியம், தெலூரியம் முதலிய சில உலோகங்களோடும் சிறிது கலந்திருக்கும். பொன், மற்ற உலோகங்களைவிட மெல்லிய தகடாகவும், மெல்லிய கம்பியாகவும், நீட்டக்கூடிய மிக மென்மையான உலோகம். தனிப்பொன் ஈயத்தைப் போன்றது; 2016-பாகை (டிகிரி) சூட்டுக்கு உருகும். பொன்னை நாணயங்களாகச் செய்வதற்கும், நகைகள் செய்வதற்கும் கடினமாக்கப்படவேண்டும். அதற்காக, வெள்ளியில் எப்படிச் செம்பைச்சேர்த்து நாணயம் (ரூபா) செய்கிறார்களோ, அது போலவே பொன்னுடன் செம்பாவது, வெள்ளியாவது சிறிது சேர்க்கப்படும். இப்போது வழங்கப்படும் சவரன் அல்லது பவுன் என்னும் பொற்காசில் பெரும்பாலும் சுமார் பத்தில் ஒருபங்கு செம்பு சேர்ந்திருக்கும். தனிப்பொன்னையும், கலப்புள்ள பொன்னையும் அறிய அதனை உரைகல்லில் உரைத்து நிறத்தைப்பார்த்து மாற்றுக்கணக்கில் தெரிந்து கொள்வது வழக்கம். தனிப்பொன் அல்லது பசும்பொன் பத்தரை மாற்றுத் தங்கம் என வழங்கப்படுகிறது.

பொன், வெடியுப்பு திராவில் (நைட்ரிக் ஆசிட்) கரையும். அதனை நகைகளுக்கு முலாம் (கில்ட்டு) பூசுகிறவர்களும், நிழற்படம் (போட்டோ) வேலை செய்கிறவர்களும் உபயோகப் படுத்துவார்கள்.

தங்கரேக்கு என்னும் மெல்லிய பொற்றகடுசெய்ய பொன்னை மெல்லிய தகடாக்கி எஃகு (உருக்கு) உருளைகளுக்கிடையில் திரும்பத்திரும்பச்செல்ல விட்டு, நசுக்கி மெல்லிய நாடாபோல் செய்வார்கள். பின்னர் அதனைச் சிறு சதுரத்துண்டுகளாய் வெட்டி பொன் தட்டும் மெல்லிய தோலாகிய பாடஞ் செய்தகுடற் சவ்வுகளுக்கிடையில் ஒன்றின்மேலொன்று மாற்றியடுக்கி வலிவான உறையிலிட்டு, அகலமான சுத்தி அல்லது சம்மட்டியால் அடிப்பார்கள். வேண்டிய அளவு மெல்லிய தகடாகும் வரை திரும்பத் திரும்ப எடுத்தும் அடுக்கியும் அடித்து வருவார்கள்.



பொன்னை மருந்துக்காகச் சிந்தூரம் அல்லது நீறு (பஸ்மம்) செய்ய சுத்திசெய்து புடமிட்டெடுக்க வேண்டும்.

## பொன் சுத்தி வகை

பொன் தகட்டின்மேல் செம்மண்ணைக் குழைத்துப்பூசி, கரி நெருப்பில் நெருப்பைப்போல் பழுக்கக்காய்ச்சினால் சுத்தியாகும்.

பொன்னைச் சிறிது கனமாய்த் தகடடித்துக் கரிநெருப்பில் பழுக்கக் காய்ச்சி, நல்லெண்ணெயில் தோய்க்க வேண்டும். நன்றாய்க்குளிர ஆறினபின் மறுபடியும் முன்போற் பழுக்கக்காய்ச்சி முன்போல் தோய்க்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் எண்ணெயைப் புதிதாக வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வகை ஏழுதடவைகள் காய்ச்சி நல்லெண்ணெயில் தோய்க்க பொன் சுத்தியாம். இவ்விதமே வெள்ளியையும் சுத்தி செய்து கொள்ளலாம்.

## மற்றொரு முறை

கறையான் புற்றுமண், செங்கற்பொடி, ஓட்டடை, காவிமண், ஆகியவைகளைச் சமபாகம் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் காடியையும் எலுமிச்சம் பழச்சாற்றையும் சமமாகக் கலந்து சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமமரைத்துத் தகட்டின்மீது கனமாகப் பூசிக் கரி நெருப்பில் வைத்து நன்றாக ஊதிப் பழுக்கக் காய்ச்சவேண்டும். இவ்விதம் செய்தெடுத்து ஆறவைத்து மேலுள்ளவைகளை நீக்கிச் சுத்திசெய்துகொள்ளவும். நன்றாய்ச் சுத்தியாகவில்லையெனத் தோற்றுமாயின் முன்போல மற்றொரு தடவையும் சுத்திசெய்து கொள்ளவும்.

இந்துப்பு, காட்டெருச்சாம்பல், கறையான் புற்றுமண், செங்கற்பொடி, காவிமண், புகையூறல் ஆகிய இவைகளைச் சமபாகமாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு மூன்றுநாளரைத்துப் பொற்றகட்டின்மீது பூசிக் கரிநெருப்பிற் பழுக்கக் காய்ச்சியெடுத்துக் கொள்ளச் சுத்தியாம்.

## பொன்நீறு (தங்கபற்பம்)

சுத்திசெய்த தங்கம் வராகனெடை 4-இதனை வட்டமான தகடாகச் செய்து கொள்ளவேண்டும். சுத்திசெய்த பாதரசம் வராகனெடை 4-சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் வராகனெடை 4-இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு, கச்சிலாரி யிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு நான்கு சாமமரைத்து முன் தகட்டின்மேலெங்கும் சமமாகப்பூசி உலர்த்

திக் கொண்டு மேற்படி கச்சினரிப் பட்டையை மைபோலரைத்து அதன் மேல்தடவி ஒன்றோடொன்றுவாய்மட்டமாய்ப்பொருந்தக்கூடிய இரண்டு குகைகள் செய்து, முன் சித்தப்படுத்தி யிருக்கிற கட்டை ஒருகுகைக் குள்வைத்து அதன்மேல் மறு குகையால்மூடி வாய் நன்றாய்ப் பொருந் தும்படியாகச்செய்து கொள்ளவேண்டும். பின்னர் இக்கவசம் கொள்ளும் படியான இரண்டு குகைகள், களி மண்ணாற்செய்து ஒன்றிற்குள்வைத்து மறு குகையால் மூடி, இரண்டுவாய்களும் ஒன்றாகப் பொருந்தும்படியா கச்செய்து, அதன்பிறகு குகை முழுவதும் எழுசீலை மண்செய்து, ஈரமு லர்ந்தபின் ஒருகஜ அகலம் ஒருகஜ ஆழமுள்ள ஒருகுழிதோண்டி, அதில் பாதி காட்டு எருமுட்டையை நிறைத்து, அதன்மேல் நடுவில் முன்கவ சத்தை வைத்து, அதன்மேல் காட்டு எருமுட்டைகளைக் குழிநிறையப் போட்டுப் புடமிடவும்.

இரண்டு மூன்று நாட்கள் வரையில் தீயிருக்கும். மறுநாள் நன் றாகக்குளிர ஆறவிட்டு எடுத்துக் கவசத்தை பதனமாகப்பிரித்து முன் போல் பாதரசத்தையும் கெந்தகத்தையும் முன்னளவே, முன்சாற்றால ரைத்து முன்போலவே கவசித்து முன்போலவே புடமிட்டு எடுத்துமூன் றும் தடவையும் முன்போலவே செய்து புடமிட்டெடுக்க உயர்ந்த பற்ப மாகும். இதனைக்கண்ணாடிக் குப்பியில் காற்றுப்புகாமல் பதனமாய் வைக்க வேண்டும்.

### பொன் பொடி

செய் முறை:—தங்க ரேக்கை, தேனிலாவது, ஸல்பேட் ஆவ் பொடாஷ் என்னும் உப்புடனாவது கலந்து, அரைத்து பிறகு நீர் விட்டுக் கழுவி விட்டால், தங்கம் மிக சன்னக்கறுப்புப் பொடியாய் நிற் கும். அத்தங்கப்பொடியை ¼-முதல் ஒருகிரேயின் அளவு எடுத்து, குல் கந்துடன் சேர்த்து, மாத்திரைசெய்து, மேகரோகங்கள், கண்டமாலை ரோகங்கள், நாள்பட்ட சருமரோகங்கள் இவைகளுக்கு நாள் ஒன்றுக்கு 2-3-தடவை கொடுக்கலாம். இந்தப்பொடியை பல்லிலாவது நாக்கிலாவது தேய்த்து உடம்பில் பற்றும்படிச் செய்கிறதும் உண்டு. கொருக்கு ரணத் தின்மேல் போட்டால் புண் ஆறும்.

### பொன் பொடி

வேறு முறை:—வெடியுப்புத் தீநீரில் பொன்னைக்கரைய வைத்து மெதுவாய் அந்நீர் வற்றும்படி காயவைத்தால் மஞ்சள் நிறமுள்ள பொடி களாக விளையும். இது தண்ணீரிலும், சாராயத்திலும், (ஆல்ககாலிலும்) ஈதரிலும் கரையும். இது கரைந்திருக்கும் நீரால் தோலையாவது வேறெந்த இந்திரப் பொருள்களையாவது நனைத்தால் காய்ந்தவுடன் அது செந்நீல நிறங்கொள்ளும்.

### தங்கரஸாயனம்

செய் முறை:—24-கிரெயின் தங்கப்பொடி, ஒரு அவுன்ஸ் சருக் கரைப்பாகு இவைகளைச் சேர்த்து நன்றாகக் கலந்துகொள்ளவும்.



## மதுசாரம்

### (கள், சாராயம், பிராந்தி, ஒயின் முதலிய மயக்கப் பொருள்கள்) மனிததேகத்திற்கு விஷமாகும்

(ஸ்ரீமான். ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது)

### தன்னடக்க மென்பதென்ன? What is Self-control?

(காபிரைட்)

தன்னடக்க மென்றால் தன்னையடக்கி யாளுதல், அதாவது, உடம் பின் ஒவ்வொரு பகுதியையும் தன்வசத்தில் வைத்திருப்பதாம். அது, மனிதனை மற்றெல்லாப் பிராணிகளுக்கும் மேலானபதவியில் வைக்கின் றது. அஃது, அவனுக்கு "இன்னது வேண்டும்" என்று சொல்ல விருப்ப முண்டாகும்போது "அது வேண்டாம்" என்று சொல்ல அல்லது அவன் துர்ச்செய்கையைச் செய்ய விரும்பினாலும் அதைத் தவிர்த்து நற்செய்கையைச் செய்யச்சொல்லச் சக்திகொடுக்கிறது. அஃது, அவனுடைய எண்ணங்கள், சொற்கள், குணம், பழக்க வழக்கங்கள், ஆட்டம், வேலை இவற்றை யடக்கியாளுகின்றது. அது, நற்குணத்திற்கு மூலமாயிருக்கிறது. அஃது, ஒருவனைப் பெருமானாகவும், ஒருத்தியைப் பெருமாட்டியாகவும் செய்கிறது. தன்னடக்கம் நெடுநாட் பழக்கத்தால் தான் விருத்தியடைகின்றது. குழந்தைகள் ஓடலாம், பேசலாம், ஒன் றைக் கற்றுக்கொள்ளலாம், விளையாடலாம். ஆனால், குழந்தை தரையில் விழுந்தால் அது சாதாரணமாக ஓவென்று அலறி அழுகிறது. ஒரு மனிதன் தரையில் விழுந்து காயமடைந்தாலும் அவன் குழந்தையைப் போல் அழுகிறதில்லை. அஃதேன்? அவனிடத்தில் தன்னடக்க மென் பதிருத்தலால் அவன் தானே தன்னையடக்கிக் கொள்ளுகிறான்.

நாகரிக மற்ற காட்டுச் சனங்களுக்குத் தன்னடக்க மென்பதில்லை. அவர்கள் மிக்க மன வலிமையுடையவர்கள், தேகவலுவுள்ளவர்கள்; அவர்கள், எண்ணிப்பார்க்குந்திறம் அல்லது விவேகமில்லாமையினாலேயே எதையுந் துணிகரமாகச் செய்கிறார்கள். ஆத்திரக்காரனை அல்லது திரு டனை அல்லது கொலைபாதகனை விருக்கும் ஒருமனிதனுக்குத் தன்ன டக்கங் குறைவாகவே யிருக்கின்றது. ஆகையால், தன்னடக்கமானது, குற்றமான செய்கைக்குச்செல்லும் நம்முடைய விருப்பத்தைக் குதிரை யின் வேகத்தை யடக்குங் கடிவாளத்தைப் போலவும் கடிவாளவார்போ லவு மிருந்து தடுக்கவும், நம்முடைய ஆத்திரத்தின் வேகத்தை யடக்கி நம்மைக் கண்டிப்பில் வைக்கவும் சக்தியாகிறது. அவ்வாறின்றித் தன் னடக்கமில்லாதிருப்பதற்கு நம்மிடத்திலுள்ள ஏதோ சிலகுறையே காரணமாகின்றது.

தன்னடக்கமென்பது, மூளையின் உத்தமமும் உயர்ந்ததும், அருமையானதுமான பகுதியாம்:—அதன் உண்மைகளையெல்லாம் இப்போது தெரிந்து கொள்வோம்.

மதுசாரம், மூளையின் உத்தம பகுதிகளையும், மிகுமென்மையான பகுதிகளையும், மற்ற முக்கிய பகுதிகளையும் முதலில் சேதப்படுத்துகிறது.

அப்பகுதிகள் யாவை ? தன்னடக்கம் (Self-control), நிர்ணயம் (Judgment), விவேகம் (Reason), தன்மதிப்பு (Self-respect); இவைகளேயாம்.

நல்லொழுக்கமுள்ளவன் தன்னடக்கமிழந்தமை.

இவ்விஷயம் இலண்டன் (London), நகரத்துத் தினசரி பத்திரிகை (London Daily Paper), யொன்றில் காணப்பட்டது.

ஒருவாலிபன் டாக்டர் பட்டம் பெறுவதற்கு வேண்டிய எல்லாப் பரிட்சைகளிலுந் தேறினன். வைத்தியசாலை (Hospital) யிலிருந்த எல்லா மாணக்கருள்ளும் அவன் மிகத்திறமைசாலியாயும், சாமர்த்தியமுள்ளவனாயும் விளங்கினன். அவன் வைத்தியசாலையை விட்டு விலகும் அன்றிரவு அவனைக் கௌரவிப்பதற்காக ஒரு விருந்தளிக்கப்பட்டது. அவ்விருந்தில் ஒயினும் பலவகைச்சாராயங்களும் மிகுதியாகவைக்கப்பட்டிருந்தன. விருந்துமுடிந்ததும் அவன் தன் வீடுபோய்ச்சேர ஸ்டேஷனுக்குச்சென்று டிக்கெட் வாங்கினன். அங்கே டிக்கெட் கலெக்டர் அவனை டிக்கெட்டைக் காட்டும்படி கேட்டார். அவனுடைய மூளை எதனாலேனுங் கெடாதிருந்திருக்குமாயின், அவன் யாதொரு சங்கடமுமின்றி டிக்கெட்டைக் காட்டியிருப்பான். ஆனால், அச்சமயம் டிக்கெட்டைக் காட்டமறுத்தான். டிக்கெட் கலெக்டர் அவனை டிக்கெட்டைக் காட்டும்படி யெவ்வளவுபாடுபட்டும் பயன் உண்டாகவில்லை. கோபத்தினலும் சண்டைக்கேதுவான குணத்தினலும் (தன்னடக்கம் போய்விட்டதின் குறி) டிக்கெட் கலெக்டர் தடையை மீறிக்கடந்து போவதற்கு அவன் முயற்சி செய்தான். முடிவில், கெட்டிக்காரனும், பரிட்சையில் பட்டம் பெற்றவனும், எல்லாராலும் நன்கு மதிக்கப்பெற்றவனுமான அவ்வாலிபன் தன் விரல்களை மடக்கிக் கைமுட்டி (fist) யால் டிக்கெட்கலெக்டரை யொரு குத்துக்குத்திக் கீழேதள்ளிவிட்டான். கீழேவிழுந்தவரை மிருகத்தன்மையாக உதைத்தான். பிறகு, அவன் மாஜிஸ்டிரேட்டின் முன் கொண்டுவரப் பட்டபோது மாஜிஸ்டிரேட் அவர்கள் "எனக்குத் தெரிந்திருக்கும் வரையில் இது குரூரமான மிருகச்செயலாகும்" என்று



சொல்லி அக்குற்றத்திற்காக மூன்றுமாதஞ் சிறைவாசமும் கடின வேலையுஞ் செய்யத் தீர்ப்பளித்தார். மறுநாள் செல்வாக்குள்ள பெரியோர்கள் பலர் கோர்ட்டின் முன் ஆஜராகி, அவருடைய தீர்மானத்தை மாற்றி அபராதம் விதிக்கும்படி மாஜிஸ்டிரேட் அவர்களிடம் மனுச்செய்து கொண்டனர். இவனுடன் வாசித்தமாணவருள் இவன் சிறந்தவனென்றும், விவேகசாலி யென்றும், இவ்வளவு சிறுவயதில் இவனைப் போல் டாக்டர் பட்டம் பெற்றவர் யாருமில்லை யென்றும், மனிதர்களுக்குள்ளே இவன் பேருபகாரி யென்றும், உத்தம புருஷனென்றும் விவரித்துப் பேசினர்.

மேற்சொன்ன விஷயங்களில் என்ன தவறு? கெடுதலுக்குக் காரணமாயிருந்தது அவ்வாலிபனுடைய குணமா? அல்லது அவன் விருந்தில் குடித்திருந்த மதுசாரமா ? அவன் சாந்தமுள்ளவனாயும், ஸ்திரபுத்தியுள்ளவனாயுமிருந்தான்; ஆனால், மதுசாரம் மூளைக்குள் பிரவேசித்ததால் அது முதலில் மூளையின் உத்தம பகுதிகளைத்தாக்கிச் சேதப்படுத்தியது. அஃது, அறிவிற்சிறந்த அவ்வாலிபனை விலங்குக்கு அல்லது அநாகரிகமான காட்டு மனிதனுக்குச் சமமாகத் தாழ்த்திவிட்டது.

(1.) மதுசாரம், மூளையின் உத்தம பகுதிகளாகிய தன்னடக்கம், நிர்ணயம், விவேகம் இவற்றைக் கொள்ளை கொண்டது.

(பின்னல் வருவன—முன்னே போயின)

(2.) அதனல், அவன் அறிவு போயிற்று. அவன் என்ன செய்து வருகிறனென்பதும் அவனுக்குத் தெரியவில்லை. அவன் எதையும் எண்ணிப்பாராதவனாகவும், ஆத்திரக்காரனாகவுமானதனல், தசையின் வலுவை அடக்குவதற்கு அவன்வசம் ஒன்றுமில்லையாதலால், அவன் அநாகரிகமான காட்டுமனிதனைப்போலவும், விலங்கைப் போலவுமானன்.

மூளையானது, எதற்காக ஏர்பட்டிருக்கிறதோ அதற்கு மாறாக மதுசாரம் அதனைக் கெடுக்கிறது. அதனல், பின்னல் வருவது முன்னேபோகிறது.

சிறிதளவு மதுசாரத்தில் சிறிதளவு தன்னடக்கம் போகிறது:—அம்மதுசாரத்தின் அதிகாரமிருக்குமளவும் அதன் ஆவேசத்தை அடக்கமுடியாமல் தன்னடக்கம் போய்விடுகிறது.

நியாயாதிபதி முன் ஒருகொலை பாதகனுடைய கடைசிவாக்குமூலம்: "நான் குடிப்பதற்காக மதுக்கடையுள் நுழைந்தது எனக்கு நினைவிருக்கிறது,

(தொடரும்)

## உடற்பயிற்சியும் சுகாதாரமும்

கோச்சகப்பா

அறந்தழைக்கு நிலவுலகி லாயசிறு குழவிகளும்
பிறந்தநாள் முதலாகப் பிரியமுடன் கைகாலை
உரம்பெறவே யாட்டுகின்ற வுண்மைதனை நோக்குவமேல்
சிறந்தபய னுடற்பயிற்சி செய்யுமென வறிவோமே.

இளங்கன்று பிறந்தவுட னெழுந்தோடி விளையாடி
யுளம்பெற்ற மகிழ்ச்சியுட னுடற்பயிற்சி செய்வதினால்
வளம்பெற்று நாடோறும் வளருவதைக் காண்போமேல்
விளங்குமுடற் பயிற்சிநிதம் வேண்டுமென வுணர்வோமே.

கடற்கரைசூழ் நிலவுலகிற் காணுமுயிர்க் கூட்டமெலாம்
உடற்பயிற்சி செய்வதினா லுறுப்புரனை யடைவதலால்
குடற்சூர னுமுண்டாகிக் கொண்டவுண விரத்தமதாம்
இடர்ப்பாடொன் றிலதாகு மெழிலுமிக வுளதாமே.

செப்பரிய வுடற்பயிற்சி செய்யாதார் மெய்த்தொகுதி
யுப்பிருந்த பாண்டமென வுளுத்துவிடு மல்லாமல்
வெப்பகன்ற நார்த்தசைகள் வெறும்பஞ்சை யொப்பாகி
இப்புவியி னடைப்பிணமா யின்பமென்ப தறியாரே.

கண்டீரோ நண்பர்களே கருவடைந்து பிள்ளைப்பே
றுண்டாகா திருப்பதுவு முண்டாகின் பெறமுடியாச்
சண்டாள நோயுறலுஞ் சற்றுமுடற் பயிற்சியிலாப்
பெண்டிர்க்கே பாடுபடும் பேதையர்க்குக் குறையிலையே.

பெற்றோரே யிளமையினும் பிள்ளைகளைப் பலகலைகள்
கற்றோத வைப்பதுபோற் காலையுடற் பயிற்சியையுஞ்
சொற்றோத வைப்பீரேல் சுகமான வாழ்வுறுவார்
எற்றேமற் றக்கல்வி யிளைத்தபிணி யாளருக்கே.

அறுசீர் விருத்தம்

வயிறு பருத்தே யுடற்கூனி வடிவஞ் சிறத்து வாழ்நாளிற்
றுயரம் பெறவோ விவ்வுலகிற் றோன்றி வளர்த லம்மம்மா!
வயிரம் பெற்ற வுடம்போடே மனதின் றிடமும் பெற்றோர்க்கே
உயரும் செயலுங் கைகூடும் ஒப்பில் லாத புகழாமே.



முதிர்ந்த பருவ முடையார்க்கு முக்ய மாகு முடற்பயிற்சி
அதிர வுழைத்து வருந்தாம லான வரையில் நடப்பதுவுந்
துதிகொள் கோவில் சுற்றுவதும் தோட்ட வேலை செய்வதுவும்
விதியில் வீட்டு வேலையெலாம் விரும்பிச் செயலுந் தகுந்தவையே.

தூய காற்றை நல்லுணவைச் சுத்தநீரை யுட்கொள்ளும்
நேய முடனே வுடற்பயிற்சி நித்த மியற்றிக் குளிப்பதுவும்
ஆய வுறக்கஞ் செய்வதுவும் ஆடை வெளுத்துக் கட்டுவதுந்
தீய பிணியை நீக்கியுரன் செய்யு மினிய நட்பாமே. ௯

ஐந்தை யடக்கிப் பொறுமையுட னாண்டா னடியைப் பணிவதுவும்
விந்தை யொழுக்கிப் போக்காமல் மின்னார் கலவி விரும்பாமல்
மைந்தர் பெறவோர் வாழ்விற்கே மணஞ்செய் கின்ற மாதவர்கள்
சிந்தை மகிழ நூறாண்டு சீவித் திருப்ப ருலகினிலே. ௰

கா. சி. சிவசங்கரன்

---

## தமிழர்கள்

தமிழிற் காணப்பெறும் எல்லா நூல்களும், தமிழர்களின் நூல்களே என்று கருதுவார்க்குத் தமிழரைப்பற்றிய உண்மைகிடைப்பது அருமை. ஆதலால் ஆராய்வதற்கு முன்னே தமிழ் நூல்களில் தமிழருக்கே உரிய நூல்களைத் தனியே பிரித்து ஆராய வேண்டும்.

தமிழர்களின் தமிழ் நூல்கள் அகப்பொருள், புறப்பொருள் ஆகிய இரண்டு பொருள்களையே விளக்குகின்றன.

ஆரியர்களின் தமிழ் நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு பொருள்களைக் குறிக்கின்றன.

தமிழர்களின் தமிழ் நூல்கள் இல்லறம், துறவறம் என்கிற இரண்டறங்களைப் பற்றியே கூறுகின்றன.

ஆரியர்களின் தமிழ் நூல்கள் பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்கு நிலைகளைப்பற்றி விளக்குகின்றன.

தமிழர்களின் தமிழ் நூல்கள், வேளாளர், வேடர், இடையர், வலைஞர், மறவர் என்கிற ஐவகை நிலமக்களைப் பற்றியே விளக்குகின்றன.

ஆரியர்களின் தமிழ் நூல்கள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனும் நான்கு வகுப்பினரைப் பற்றியே பேசுகின்றன.

தமிழர்களின் தமிழ் நூல்கள் களவியல், கற்பியல் என இருவகை மணங்களைப் பற்றியே யுரைக்கின்றன.

ஆரியர்களின் தமிழ் நூல்கள் பிரமம் முதலிய எண்வகை மணங்களைப்பற்றிப் பேசுகின்றன.

இவ்வேறு பாடுகளை யுணராமையினாலேயே மக்களுள் உயர்வு, தாழ்வெனும் எண்ணங்கள் பிறந்து, பிரிவையும் போரையும் உண்டாக்குகின்றன.

தமிழர்கள் நிலப்பிரிவிற்குத் தக்கவாறு தங்களை வகுத்துக்கொண்டதினால் சாதி பற்றியேனும், மதம் பற்றியேனும் தங்களுக்குள் உயர்வு தாழ்வு உண்டென நினைப்பதில்லை.

தமிழர்களுள் நயினார் என்கிற ஒருவகை வேளாளர் வகுப்பில் கொண்டார் கொடுத்தாரிருவருள் ஒருவர் சமணராகவும், மற்றவர் சைவராகவும் இருப்பதை இப்போதுங் காணலாம்.

தமிழர்களின் தமிழ்நூல்களில் ஒரு திணையின் தலைமகன் மற்றொரு திணையின் தலைமகளை மணம்புரிந்து கொண்டானென்றிருப்பதால் வாழும் நிலத்தினாலாவது, செய்யும் தொழில்களினாலாவது அவர்களுள் உயர்வு தாழ்வு இருந்ததில்லை என்பது தோன்றுகிறது. சாதி என்ற சொல்லே தமிழர்களுக்குள் இருந்தது இல்லை. தமிழர்களுள் செயற்கரிய செய்வாரைப் பெரியோரென்று போற்றி வருவது வழக்கமாயிருந்தது. உலகத்திலுள்ள மக்களைத் தீயநெறியினின்றுந் திருப்பி நல்லவராக்குவதற்காக, அறிஞர், நல்லொழுக்கத்தில் நின்று இவ்வுடம்பில் உயிருள்ள போதே இறைவன் திருவடி அடைந்து தாம் விரும்பிய நீடித்த காலவளவும் இந்நில வுலகத்திலே நிலவுவதுதான் செயற்கரிய செயல். கணக்கற்ற பொருளை அழித்துக் கோயில்கள் கட்டி, அதில் மூர்த்தியை யமைத்து வழிபடும் பக்தனைக்காட்டிலும் உடம்பாகிய கோவிலில் உயிர்க்கடவுளை வழிபடும் இச்சித்தர்கள் சிறந்தவர்கள். கோவிலுள் பல விளக்குகளை எரிக்கும் அறத்தோர்களினும் மெய்யகத்தில் உயிர்விளக்கை எரிக்கின்றோர்களாகிய பெரியோர் சிறந்தவர்கள்.

பல்வகைத் தீயோம்பும் மறையோர்களினும் உடம்பில் மூலத்தீயோம்பும் இவர்கள் பெரியார்கள்.

உடம்பிலுள்ள போதே இறைவன் திருவடியடைவது கூடாது என்பது கருதிப்போலும் பரிமேலழகியார் திருக்குறளில் "நிலமிசை நீடு வாழ்வார்" என்பதற்கு "எல்லா வுலகிற்கும் மேலாய வீட்டுலகின் கண் அழிவின்றி வாழ்வார்" என்றுபொருள் கூறியிருக்கின்றார்.



"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே."

என்கிற சொல்வேந்தர் வாக்கினால் உடம்பிலுள்ள போதே பெரியோர் இறைவன் திருவடி அடைகின்றார்கள் என்பதை யுணரவேண்டும்.

தலையில் நான்கு பொறிகட்கும் நடுவில் இரண்டு சிறு உறுப்புகளிருக்கின்றன. அவைகளுக்கு எட்டென்றும், இரண்டென்றும், காலென்றும், தலையென்றும், அகாரமென்றும், உகாரமென்றும் பெரியோர் பெயரிட்டிருக்கின்றனர். அவ்விரு உறுப்புகளையும் பொருத்தினால், ஐம்புலக்கதவு அடைந்து நாடிகளின் நடை குறைந்து போகின்றது. உள்ளம் இறைவனிற்கலந்து விடுகிறது. மூச்சு ஒடுங்குகின்றது. இவ்வரிய பழக்கமுடைய பெரியார் இந்த நிலவுலகத்திலே நெடுங்காலம் உடம்பை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

"காலுந் தலையு மறிந்து கலந்திடில்
சாலவு நல்லது தான்" என்றும்—

"பேசா வெழுத்துடன் பேசு மெழுத்துறில்
ஆசான் பரநந்தி யாம்" என்றும்—

ஔவையார் கூறியது இப்பழக்கத்தையே.

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்" என்று—

திருவள்ளுவனார் கூறியதும் இது பற்றியே.

தமிழ்ப்பெரியார் கண்டுபிடித்துப் பழகிவந்த இவ்வருஞ்செயலுடையார் எங்கிருப்பினும் அவர்களையொன்று கூட்டி இவ்வருங்கலையை அவர்கள்பாற்கற்று நோய்காணுத உரன் பெற்றமெய்யோடு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் உயிர் பெற்று வாழ்வோமானால் தளராமுயற்சியுடன் தமிழ் மக்களை ஒற்றுமையினும், ஒழுக்கத்தினும் சிறந்தோராக்கி உயர்வு பெறச் செய்யலாம். அரும்பெருந்தொழிலை மேற்கொண்டிருப்போர் இப்பழக்கத்தால் தமது உடம்பையும், உள்ளத்தையும் தூய்மையும் திடமு முள்ளவையாக்கி, உயிரை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வகையான உள்ள வுரன் பெற்ற பெரியோர் குயிற்றிய கோவில்களே பழநி முதலியன.

போகரெனும் தமிழ்ச்சித்தரின் ஆற்றல்தான் பழநியில் இன்றும் ஒளிர்கின்றது.

கா. சி. சிவசங்கரன்.

## சுகவழி

உடம்பும் மனமும் நல்ல நிலைமையிலிருப்பது சுகத்திற்கு வழியாகும். இவ்விரண்டையும் கெடுப்பது நோயேயாகும். காலமறிந்து வேண்டிய அளவு உண்ணாததும், அளவுமீறி உண்பதும், உடலுக்குப் பொருந்தாததும், செமிக்காததுமான உணவுகளை உண்பதனாலுமே மக்கள் பெரும்பாலும் நோயாளராகின்றார்கள். அளவுமீறி உண்டபொருள்கள் தீனிப்பையில் செமிக்காமல் தங்கி புளிப்பதால் இரத்தம் அசுத்தமடைகிறது. தேகமும் மனமும் நலிவடைந்து நன்மை தீமைகளைப் பகுத்தறியாத நிலைக்கு வந்து விடுகின்றன. காலராவென்னும் வாந்திபேதி, பிளேக்கு முதலிய கொள்ளை நோய்களாலேற்படும் அகாலமரணங்களும் மருத்துவநூல் முறைப்படி உடம்பைக்காத்துக் கொள்ளாததினால் பரவுகின்றன. நமது நாட்டைவிட்டு அக்கொள்ளை நோய்கள் ஒழியாமல் வளர்ச்சியடைகின்றன. தொற்று நோய்கள் கொள்ளைநோய்கள் கல்வி அறிவற்றவர்களையே மிகுதியாக பற்றுகின்றன.

நாம் உண்ட உணவு முழுவதும் ஜீரணமானால் நல்ல இரத்தம் பெருகி உடம்பு சுகநிலையிலிருக்கிறது. மிகுதியாய் உண்டால் அதிகமான சுமை ஏற்றின எருது படுத்துக் கொள்வதைப்போல் அதிக உணவை உண்டால் ஜீரணக்கருவி சுமக்க வலிவின்றி செமிக்கச்செய்ய வியலாமல் சோர்ந்து சும்மா இருந்து விடுகிறது. உண்ட உணவு புளித்து அழுகி, நஞ்சாகி, கிருமிகளுண்டாகி ஜீரண உறுப்பையும் இரத்தத்தையும் உள்ளுறக்கெடுத்து உடம்பைப் பலநோய்களுக்கு இடமாக்குகிறது.

உலகத்திலுள்ள மக்களில் சாதாரண ஏழை உணவை உண்பவர்களும், ஒருநாளைக்கு இரண்டுவேளை உண்பவர்களுமே நோயில்லாமல் நீண்டகாலம் வாழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. தற்காலம் மனிதர்கள் அதிலும் நகரங்களில் வசிக்கும் செல்வர்கள் நாவுக்கினிமையையும், மூக்குக்கு வாசனையையு மட்டும் கவனித்து அடிக்கடி உண்ணும் வழக்கத்தில் அதிகரித்து வருகிறார்கள். இதுவன்றி நகரங்களில் நாளுக்கு நாள் ஜனநெருக்கம் அதிகரிப்பதால் போதுமான நல்லகாற்று இல்லை. நகரங்களில் உள்ளவர்கள் பக்கத்துத் தெருவுக்குக் கூடநடந்து போவதில்லை. எப்போதும் வாகனாதிகளில் போவதனால் தேகத்தில் இரத்த ஓட்டம் குறைந்து கொழுப்பு மிகுதியாகப்பிடித்து உடல்பருத்து பலஹீனமடைந்து போகிறது. ஜீரணசக்தியும் குறைந்து விடுகின்றது. மேல்நாட்டு அறிவுள்ள மக்களால் உலகில் இயந்திர சக்திபட்டும் அதிகரித்து



வருகிறது. நமது நாட்டு ஜீவயந்திரங்களாகிய மனிதர்களுக்குப் பலஹீனம், நோய், அற்ப ஆயுளில் சாக்காடு முதலிய தீமைகள் அதிகரிக்கின்றன.

மரணத்துக்குப் பயப்படும் மனிதன் மரணவிதைகளையே தினம் தேகத்தில் சேர்த்துப் பயிராக்கி வருவது மிகவும் வருந்தத்தக்கது. கருப்பையில் கலந்த நோய் இருப்பினும், நடுவில் உடம்பில் நோய்சேராமல் தடுத்துக் கொள்பவருக்கு நூறுவயதுக்குள் சாவு ஏற்படாதென்பது நிச்சயம்.

தமது பசித்தீயின் அளவை அறிந்து உண்ணத்தெரியாதவர்களின் வயிற்றைப் புழுக்களால் நிரப்ப நகரங்களில் தெருக்கள்தோறும் அடுக்கொரு காப்பி ஓட்டல்களும், சிற்றுண்டிக் கடைகளும் ஏற்பட்டிருக்கின்றன. கடவுள் மக்களுக்கு உணவுப்பொருள்களைப் படைத்தார்; இயமன் காபி ஓட்டல்களைப் படைப்பித்தான் போலும். ஓட்டல்களுக்குப் போகாதிருந்தால் உடல் நலம் கெடாதிருப்பதோடு பணச்செலவுமில்லை.

தூய்மை தெய்வத் தன்மையுடையது. மனிதர்களில் பிறப்பினால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் தவறான பழக்கத்தைக்கொண்டு ஒருவர்மேலொருவர் படாதிருத்தலும், ஒரு வகுப்பினரிடத்தில் மற்றொரு வகுப்பினர் உண்ணாமலும், உறவாடாமலுமிருத்தலும், சோப்பால் உடம்பைக் கழுவுதலும், வெளுத்துச் சலவைசெய்து கஞ்சி தோய்த்த துணிகளை உடுத்தல் முதலியவைகள் மட்டும் சுத்தமல்ல. சுத்தமானது புறச்சுத்தம், அகச்சுத்தம் என இருவகைப்படும். புறச்சுத்தமாகிய உடற்சுத்தமே மனச்சுத்தத்துக்கு அஸ்திவாரமாக நிற்கிறது. தேகசுத்தத்தை மனோசுத்தத்திற்காகத்தான் மதாச்சாரியார்கள் பல நித்திய கர்மானுஷ்டான விதிகளுடன் ஏற்படுத்தினார்கள்.

மனித உடம்பு பிறந்தது முதல் வளர்ந்து முழு உடம்பாகி அழிவுறு வரையில் சுவாசித்தல், உண்ணல், உறங்கல், நினைத்தல், செய்தல் முதலிய இன்றியமையாக் காரியங்களைச் செய்கின்றன. மேற்படி காரியங்கள் எவ்வளவு ஒழுங்காக ஆரம்பமுதல் நடைபெற்று வருகின்றதோ அதற்குத்தக்கபடி மனிதன் தனக்கும் பிறருக்கும் பயனுள்ளவனாகின்றான். ஆதலால் மக்கள் உடம்பு தாயின் கருப்பையிலிருந்து வெளிப்படுமுன் தோன்றி, கடைநாள்வரை இடைவிடாது நடைபெற்று வருவதும், அவசியமானதும், முதற்றொழிலுமாகிய சுவாசித்தல் (உயிர்ப்பு) என்பதைக் குறித்துச் சிறிது கவனிப்போம். மனிதனின் உயிருக்கு ஆதாரமாகிய சுவாசிக்கும் காற்று எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்? எப்படிச் சுவாசிக்கவேண்டும்? என்பவைகளே முதலில் கவனிக்கத்தக்கவை. ஆனால்

இதற்கு நம்முடைய பிரயத்தனம் ஒன்றும் வேண்டியதில்லை என்றாலும் எத்தரோத்திலும் மிகக்கவனமா யிருக்கவேண்டியது இஃது ஒன்றில் தான்.

சுத்தமான வெளிக்காற்றை இயன்றமட்டும் வாயைத்திறவாமல் மூக்கினாலேயே நிமிர்ந்த நிலையிலிருந்து கொண்டே சுவாசிக்கவேண்டும். அவசரமாய் சுவாசிக்காமல் முடிந்தவரையில் மூச்சை மெதுவாக இழுத்து மெதுவாக விடவேண்டும். குளிர்காலத்தில் உடம்பை பருத்தி, கம்பளி முதலிய போர்வைகளால் போர்த்துக்கொள்ளவேண்டுமே யன்றித் தாணிருக்கும் அறையில் காற்றுவராமல் ஜன்னல்களை முற்றிலும் அடைத்து விடுதல் ஆகாது; படுக்கை அறைகளில் விளக்கெரியச் செய்தலும், ஒருவரிருவர் இருக்கக்கூடிய இடத்தில் பலர்கூடி இருத்தலும், படுத்துறங்கலும், தலையணையை அதிக உயரமாய் வைத்துக்கொள்ளுதலும் கூடாது. உயிருக்காதாரமாக கடவுள் அருளிய நல்லகாற்றை நஞ்சாக்கித் தனக்கும் பிறருக்கும் கேட்டை விளைவிக்கும் சுருட்டு, சிகரெட்டு, பீடி முதலிய புகை சூழ்ந்துள்ள இடத்தில் இருத்தலும் கூடாது. இரவு முழுதும் ஒரேபடுக்கையில் இருவர் உறங்குவதும், குழந்தைகளை தாய்மார்கள் இரவு முழுதும் மார்போடணைத்து உறங்கவைப்பதும் ஆகாது. மனிதர்களுடன் பேசும்போது ஒன்றரை கஜதூரத்துக்கும் குறைவாக (நகத்தடி.தூரம்) நெருங்கிப்பேசுவதும் சுகக்கெடுதியானகாரியமாகும். அநேகர் வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொண்டாலும், வீட்டின் வெளிப்புறத்தை மிகவும் அசுத்தமாக வைத்திருக்கிறார்கள். நாம் வீட்டிற்குள் சுவாசிக்கும் காற்று வீட்டிற்கு வெளியிலிருந்து வரும் காற்றாகையினால், வீட்டிற்கு வெளிப்புறம் சுத்தமாக இருந்தாலன்றி வீட்டிற்குள் நல்லகாற்று வருவதற்கு வழியில்லை. வானிலிருந்து பொழியும் புனிதமான மழைநீர் அது வீழ்ந்த நிலத்தின் தன்மையை அடைவதுபோல் காற்றும் நமது வீட்டைச்சுற்றிலு முள்ளபொருள்களின் குணத்தை அடைகிறது. பரிமளவர்க்கங்களை முகர்ந்து இன்பமடைகிறவர்கள் தாம் வசிக்கும் இடங்களில் கெட்டகாற்றை உண்டாக்கக் கூடிய காரணங்களைக் கண்டு நீக்குவார்களானால் பெரிய நன்மைசெய்தவராவார்கள். கெட்டகாற்று நிறைந்துள்ள இடத்தில் (ஓர்செனட்) வாசனைத்திரவியத்தை கைத்துணியில் தடவி முகர்வதனாலும் தசாங்கப்பொடி வாசனைவத்திகளை தீக்கொளுத்துவதினாலும் அங்குள்ளகெட்ட காற்றைத் தடுத்ததாக சிலர் எண்ணுவது தவறு. பரிமளத்தைவிட நல்ல காற்றே தேகாரோக்கியத்துக்கு முக்கியமானது.

(தொடரும்)

மருத்துவப் பெரியார்

## சிறுத்தொண்டர் வரலாறு

(47-ஆம் பக்கத்தொடர்ச்சி)

மேலும் பரஞ்சோதியார் தமது வாழ்க்கைத் துணைவியாருடன் திருச்செங்காட்டங் குடியிலிருந்து பொது மக்களுக்கு உடலைப்பற்றி வரும் நோய்களையும், அடியார்களின் பசிநோயையும் போக்கிவந்தார். இவர் பெரிய ஆயுள்வேதியராதலால் ஏழைமக்களுக்கும், துறவிகளாகிய சிவனடியார்கட்கும் உடற்பிணிகள் பெரும்பாலும் உணவினாலேயே வருகிறதெனக் கண்டு தேர்வாராயினர். மேற்கண்ட மக்கள் காலமறிந்து தம் தம் உடலுக்குப் பொருந்தும் உணவை அருந்த வியலாதிருப்பதனையறிந்து, அவரவர் நோய், வயது, காலம், உடல் வன்மை, அவர் நாட்டு வழக்கம், அவரவர் விருப்பம் முதலியவைகளுக்கேற்பவும், தவயோகிகளுக்குத் தக்கபடியும் உணவளித்து வந்தார். இவர், மக்களுக்கு நாள் தோறும் பல்வகையில் ஆற்றிவரும் பெருந்தொண்டின் பெருமை உலக முழுவதும் பரவியது. பரஞ்சோதியாரின் அறச்சாலையில் வந்து அவர் அன்புடன் செய்யும் அரியவுதவியைப்பெற்றுப் போகிறவர்களும், அவரிடம் புதிதாக வருகிறவர்களும் அவரைப்புகழ்ந்து போற்றுவார்கள். பரஞ்சோதியார் தம்மைப்பிறர் புகழுங்காலத்தெல்லாம் தம்மை ஒரு சிறிய தொண்டர் என்று சொல்லிக்கொள்ளுவது வழக்கமாதலாலும், எவ்வளவு ஏழைகளிடத்திலும் மிக அன்போடும், அடக்கத்தோடும் நடந்து கொண்டமையினாலும் பரஞ்சோதியாரை எல்லோரும் சிறுத்தொண்டர் என்று அழைத்து வந்தனர். ஆதலால் நமது பரஞ்சோதியார் சிறுத்தொண்டர் என்ற பெயருக்குரியவரானார்.

இக்காலத்தில் சிறுத்தொண்டரின் மனைவியாராகிய வெண்காட்டு நங்கைக்கு ஓர் ஆண்குழந்தைபிறந்தது; அக்குழந்தையிடம் தெய்வத்தன்மைவிளங்கியதால் அக்குழவிக்குச் சீராளதேவனென்று திருநாமமிட்டார்கள். வெண்காட்டு நங்கையும், சந்தன நங்கையும், கல்வி அறிவோடு மருத்துவஞான முடையவராதலால் அக்குழந்தையைப் பாலர்பரிபாலன முறைப்படி, ஒரு நோயும் அணுகாமல் மிக அருமையாக வளர்த்து வந்தார்கள்; சீராளனுக்கு ஐந்து வயது நிரம்பியதும் கல்விபயில பள்ளியில் அமர்த்தினர்கள்.

அதுகாலை திருஞான சம்பந்தர் சிவத்தலங்கள் தோறும் சென்று பதிகம்பாடி வந்தார். அவர் சிறுத்தொண்டரின் பெருமையைச் செவி யுற்று அவரைக்காண விரும்பித் திருச்செங்காட்டங்குடிக்கு வந்தார். திருஞானசம்பந்தரின் வருகையை முன்னரே யறிந்த சிறுத்தொண்டர் எதிர்சென்று திருஞான சம்பந்தரையும், அவருடன்வந்த திருக்கூட் டத்தினரையும் அழைத்து வந்து, தமதில்லத்தமர்த்தி உபசரித்து * உணவளித்தார். திருச்செங்காட்டங் குடியில் சிறுத்தொண்டரால் திரு ப்பணி செய்யப்பட்டதும், அவர் ஆதீனத்துள்ளதும், எல்லோரும் சென்று அங்குள்ள கடவுளின் உருவத்தைத்தொட்டு $ அர்ச்சித்து வணங்கக்கூடியது மாயிருந்த கணபதீச்சுர மென்னும் ஆலயத்திற்குத் திருஞான சம்பந்தர் சிறுத்தொண்டரோடும் மற்ற அன்பர்களோடும் சென்று இறைவனை வணங்கித் திருப்பதிகம் பாடத்தொடங்கினர்.

---

* திருஞான சம்பந்தர் கவுணியர் என்னும் ஒருவகை அந்தணர் மரபின ரென்றும், சிறுத்தொண்டர் மருத்துவரென்னும் மாமாத்திர மரபினரென்றும், பெரியபுராணத்தில் அவர்களுடைய வரலாற்றில் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் சம்பந்தர் காலத்திலும் இவருக்குப் பின்வந்த சுந்தரர் காலத்திலும், தமிழர்களுக் குள் ஒருவர் வீட்டில் மற்றொருவர் உண்ணுதல், மணமுடித்தல் முதலியவைக ளில் ஒருவித வேற்றுமையும் இருந்ததில்லை என்பது வெளிப்படையாய்த் தெரி கிறது. பண்டைக்காலத் தமிழர்கள் தாங்கள் பிறந்து வாழும் நிலத்தின் பெய ராலும், செய்யும் தொழிலின் பெயராலும் அழைக்கப்பட்டார்களன்றி இக் காலத்துள்ள பலபோலித் தமிழ்ச்சைவர்களைப்போல் சாதிப்பித்தர் தலைக்கே றியவர்கள் அக்காலத்தில் ஒருவரும் இல்லை. அக்காலத்தமிழர்கள் அன்பைப் பெரிதாகக் கருதியவர்கள். அன்பையே கடவுளாகக் கண்டவர்கள். இக்காலத் திலும் வடநாட்டில் இந்துக்கள் எல்லோரும் அவர்கள் வீடுகளிலும், உண்டி விடுதிகளிலும் கலந்து ஒன்றாயிருந்து உண்பது சாதாரணமாயிருக்கிறது. தற் காலம் நந்தமிழ்நாட்டில் இது மிகப்பெரிய காரியமாகக் கருதப்படுகிறது.

$ திருஞானசம்பந்தர் தேவாரம்.

செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலைதெரிந்தவ ரொடு
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்யவமர்கின்ற அரனூர்

*　　*　　*　　*　　*　　*

இப்பதிகத்தால் சம்பந்தர் காலத்தில் தமிழர்களின் கோயில்களுக்குள் எத் திறப்பட்டவர்களாயினும் அன்பர்களானோர் உட்சென்று கரு இல்லத்திலுள்ள கடவுளின் திருவுருவத்தைத் தொட்டு அருச்சித்து வணங்குவது வழக்கத்திலி ருந்ததென்பது புலனாகிறது. இதனை இன்றும் வடநாட்டு சிவாலய, விஷ்ணு வாலயங்களிலுள்ள கடவுளின் வடிவங்களை எல்லா வகுணத்தினரும் தொட்டு அருச்சித்துப் பூசிக்கக்காண்கின்றோம். உண்ணும் இடங்களிலும், கடவுளை வண

திருஞானசம்பந்தர்முழுமுதற் கடவுளாகிய சிவபிரானையும், பதி கத்தின் ஈற்றில் தம்மையும் பாடுவாரல்லது, மக்களைப்புகழ்ந்து பாடுபவ ரல்லர். அத்தகைய அவர் நமது சிறுத்தொண்டப் பெருந்தகையாரை தமது அழகிய பாடலில் புகழ்ந்து பாடுவதற்கு விரும்பித் திருச்செங் காட்டங்குடி திருப்பதிகத்தில் பத்துப் பாடலிலும் சிறுத்தொண்டரின் பெருமையைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

---

## சிறுத்தொண்டரைத் திருஞான சம்பந்த மூர்த்தி

### புகழ்ந்துபாடிய தேவாரத் திருப்பதிகம்.

பண் - பஞ்சமம்.

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே. 1

பொன்னம்பூங் கழிக்கானற் புணர்துணையோ டுடன்வாழும்
அன்னங்காள் அன்றில்காள் அகன்றும்போய் வருவீர்காள்
கன்னவிரேட் சிறுத்தொண்டன் கணபதீச் சரமேய
இன்னமுதன் இணையடிக்கீழ் எனதல்ல லுரையீரே. 2

---

ங்கும் கோயில்களிலும், பிணங்களை வைத்துக்கொளுத்தும் இடங்களிலுங்கூட தென் இந்தியாவிலுள்ள உயர்ந்தசாதியாரென்போர் மற்றவர்களைக் கொடுமைப் படுத்துகின்றார்கள் என்பதை நோக்கும்போது இத்தென்னாட்டுக்கு சுயராஜ்ஜி யம் கிடைத்தால் தாழ்ந்த சாதியார் என்பவர்களின்கதி என்னவாகும் என்பதை நினைத்து நாம் வருந்தாதிருக்க முடியாது.

அக்காலத்துச் சைவர்கள் புறமதத்தினரை எல்லாம் சைவமதத்தில் சேர்த்துச் சைவத்தை வளர்த்தார்கள். இக்காலத்துச் சைவர்கள், சைவர்களாயுள்ள தமிழ்ப் பெருமக்களையெல்லாம் சாதியில் தாழ்ந்தவர்களென்று கோயிலினுள் நுழைய விடாமல் புறச்சமயங்களென்னும் இராஜாங்கசமயமாகிய பெரிய சமயங்களுக்குப் போய்ப் பிழைத்துப் பெருமையடையுங்கள் என்று அடித்து விரட்டி சைவமத த்தை அழிக்கின்றார்கள். ஆனால் சைவக்கோயில்கள் தற்காலம் கல்லாலும் பொன்னாலும் புதிப்பிக்கப்பட்டுக் கும்பாபிஷேகங்களும், திருவிழாக்களும் சிறப் பாக நடைபெறுவதைப் பார்த்து இப்போலிச்சைவர்கள் மகிழ்ச்சி அடையலாம். ஆனால் அவர்கள் இன்னும் சிறிது காலத்தில் இதன் முடிவைக்கண்டு கொள்ளு வார்கள்.

குட்டத்துங் குழிக்கரையுங் குளிர்பொய்கைத் தடத்தகத்தும்
இட்டத்தா லிரைதேரு மிருஞ்சிறகின் மடநாராய்
சிட்டன்சீர்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வட்டவார் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே. 3

கானருகும் வயலருகுங் கழியருகுங் கடலருகும்
மீனிரிய வருபுனலி லிரைதேர்வெண் மடநாராய்
தேனமர்தார்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வானமருஞ் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே. 4

ஆரலாஞ் சுறவமேய்ந் தகன்கழனிச் சிறகுலர்த்தும்
பாரல்வாய்ச் சிறுகுருகே பயிறாவி மடநாராய்
சீருலாஞ் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
நீருலாஞ் சடையார்க்கென் னிலைமைசென் றுரையீரே. 5

குறைக்கொண்டா ரிடர்தீர்த்தல் கடனன்றே குளிர்பொய்கைத்
துறைக்கெண்டை கவர்குருகே துணைபிரியா மடநாராய்
கறைக்கண்டன் பிறைச்சென்னி கணபதீச் சரமேய
சிறுத்தொண்டன் பெருமான்சீ ரருளொருநாட் பெறலாமே. 6

கருவடிய பசுங்கால்வெண் குருகேயொண் கழிநாராய்
ஒருவடியா ளிரந்தாளென் றொருநாட்சென் றுரையீரே
செருவடிதோட் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
திருவடிதன் றிருவருளே பெறலாமோ திறத்தவர்க்கே. 7

கூரார விரைதேர்ந்து குளமுலவி வயல்வாழும்
தாராவே மடநாராய் தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்ற னருளொருநாள் பெறலாமே. 8

நறபொலிபூங் கழிக்கான னவில்குருகே யுலகெல்லாம்
அறப்பலிதேர்ந் துழல்வார்க்கென் னலர்கோட லழகியதே
சிறப்புலவன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பிறப்பிலிபேர் பிதற்றிநின் றிழக்கோவெம் பெருநலமே. 9

செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணி மார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
அந்தண் பூங்கலிக்காழி யடிகளையேயடி பரவும்
சந்தங்கொள் சம்பந்தன் றமிழுரைப்போர் தக்கோரே. 10



## ஒரு அருமைத்திருமணம்

(கலப்பு விவாகமும் - விதவாவிவாகமும்)

8-12-1928-ஆம் நாள் மாலை 5-30-மணிக்கு சென்னை அண்ணாபிள்ளைத்தெரு 97-ஆம் எண்ணுள்ள தென் இந்திய பிரம்ம சமாஜமந்திரத்தில் மருத்துவ வகுப்பைச்சேர்ந்த சைவராகிய சீர்காழி வைத்தியர் S. வாசுதேவபிள்ளை அவர்கள் மகன் S. V. பாலகிருஷ்ணபிள்ளை அவர்கட்கும், தேவாங்க வகுப்பினராகிய T. முத்துச்செட்டியாரின் மகள் M. சீதாலெட்சுமி அம்மைக்கும் திருமணம் நடைபெற்றது. மேற்கண்ட மணமக்கள் இருவரும் பிரம்மசமாஜத்தைச்சேர்ந்த மருத்துவமாணவர்கள். மணமகள் M. சீதாலட்சுமி அம்மை அதிபாலியத்தில் விவாகம் நடைபெற்று கணவனை இழந்த பெண்.

இக்கலியாணம் பிரம்மசாஜத்தின் முறைப்படி சாதிவேற்றுமை அழியவும், பால்யவிதவைகளின் துன்பம் ஒழியவும், கூலிப்புரோகிதர், போலிப்புரோகிதர்களின் ஆதிக்கம் இன்றி, வீண் செலவின்றி, வீணான மூடச் சடங்குகளின்றி மிக அழகாக நடைபெற்றது. ஒற்றுமையற்ற நமது நாட்டுக்கு இது ஒருபடிப்பாக இருக்கிறது.

பாமரமக்களின் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்து, மிக வீரத்தனமாக இத்திருமணத்தை செய்து காட்டிய இம்மணமக்கள் என்றும் ஒருவருக்கொருவர் அன்பு மாறாமல் இருந்து நமது நாட்டின் விடுதலைக்கு ஒருவழிகாட்டியா யிருப்பார்களென்று நம்புகின்றோம்.

இத்திருமணத்திற்கு ஆண் பெண்கள் பெருங்கூட்டமாக வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் சர் A. P. பாத்ரோ, திவான்பகதூர் J. வெங்கட்ட நாராயணா, திவான்பகதூர், T. வரதராஜலு நாயுடு, V. சுந்தரராஜலு நாயுடு, B. A. B. L. சுவாமி பிரமானந்தா, வித்வான் மணி திருநாவுக்கரசு முதலியார், வித்வான் பா. கண்ணப்ப முதலியார், பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம், எதிராஜலு நாயுடு, இன்னும் பல கனவான்களாவார்கள்.

மணவினை முடிந்ததும் இந்திய மருத்துவமாணவர்களால் மணமக்களுக்கு கதர் மாலைகள்சூட்டி வாழ்த்துப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. மணமக்கள் கதருடை அணிந்திருந்தார்கள்.

மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களும் பண்டிட் எஸ். எஸ் ஆனந்தம் அவர்களும் அத்திருமணத்தை வந்திருந்தவர்கட்கு விளக்கி அதன் அவசியத்தையும் அதனால் விளையும் நன்மைகளையும் எடுத்துக் கூறினார்கள். வந்திருந்தோர்களுக் கெல்லாம் சந்தனம், பூ, பழம் முதலியவைகள் வழங்கப்பட்டது என்று ஒருநிருபர் எழுதுகிறார்.

## பனகால் அரசர் விண்ணுற்றார்!

பனகால் அரசரிடம் பொறாமைகொண்டிருந்தவர்களும், அவரைப் புறங்கூறினவர்களும், அவரைப் பெரும்பகைவராக நினைத்து அவர் சாவை எதிர்பார்த்தவர்களுங்கூட, பனகால் அரசர் இறந்தார் என்று கேட்டவுடனே திடுக்கிட்டு மனமுருகி வருந்தினார்கள். அவருடைய அரசியல் அறிவையும், ஆற்றலையும் அவரிடமிருந்த மற்ற சிறந்தகுணங்களையும் நினைந்து நினைந்து சொல்லிச் சொல்லி வாயாரப்புகழ்ந்தார்கள், கண்ணீர் வடித்தார்கள், என்றால் அவரைப்பற்றி நாம் சொல்லப்போவது ஒன்றுமில்லை.

உயர்ந்த படிப்பாலும், பணத்தாலுமே ஒருமனிதன் உலகில்பெரியவனாக முடியாதென்பதற்கும், மனிதனுக்கு எல்லா குணங்களும் படித்துப் பழகுவதனாலேயே வருவதல்லவென்பதற்கும் பனகால் அரசர் சாட்சியாய் விளங்கினார். வேம்புக்குக் கசப்பும், மருவுக்கு மணமும் முளையிலேயே உடன் கலந்திருப்பதுபோல் ஒவ்வொரு மனிதரிடத்திலும் பிறவிக்குணங்கள் தனியே சில காணப்படுவது இயற்கை. அதுபோல் பனகால் அரசரிடம் நாம் கண்ட அரசியல் அறிவும், ஆற்றலும் அவர் உடன்பிறந்ததே ஆகும். அது அவரோடு மறைந்து போய்விட்டது. இனி அவ்வாற்றலையும் பெருமையையும் நாம் யாரிடமும் காணப்போகிறதில்லை. அவர் செய்த வேலையை இனியார் செய்வதென்று நெடுந்தூரம் நினைத்துப் பார்த்தாலும் நமக்கு முடிவு தெரியவில்லை.

நமது பனகால் அரசர் பிராம்மணரல்லாத பெரும்பகுதி மக்களுக்குத் தலைவர்களவும், அரசியல் ஆற்றல் மிக்குள்ளவராகவும் சிறந்து விளங்கினார். "அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்" என்பதற்கிணங்க, இதனைக்கண்ட அரசாங்கத்தார் அவரைமதித்து அவருடைய சொல்லை விரும்பிக்கேட்டார்கள். அதனால் பிராமணரல்லாதார் பலருக்கு பல உத்தியோகங்களையும், பதவிகளையும் பனகால் அரசர் வழங்கினார். இன்னும் ஓராண்டாவது இருந்திருப்பாரானால் பிராமணரல்லாதார்க்கு அரசியல் சம்பந்தமாக பெரிய நன்மைகள் பல விளைந்திருக்கும்.

அவரால் செய்யப்பட்ட காரியங்களில் தென் இந்தியாவிலுள்ள கோயில்களின் சொத்துக்கள் தீயவழிகளில் செலவானதைக் குறைத்து அப்பொருள்களை நல்வழியில் செலவு செய்யும் நோக்கத்தோடு செய்து வைத்த இந்து அறநிலைய பாதுகாப்புக்கழகமும் (இந்து ரிலிஜியஸ் எண்டோவ் மெண்டு போர்டு,) ஒன்று, இந்தியநாட்டு வைத்திய பாடசாலையையும், வைத்தியசாலையையும் அரசாங்கத்தார் ஆதரித்து நடத்தி வரும்படி செய்தது இரண்டும் மிக இன்றியமையாததாகும்.

சுதேச வைத்திய ஆராய்ச்சிக்கழகத்தை (உஸ்மான் கமிட்டியை) பனகால் அரசர் ஏற்படுத்திய காலத்தில் ஆயுர்வேத யூனானிவைத்தியத்தோடு நந்தமிழ் நாட்டு சித்தமருத்துவ முறையையும் ஆதரிக்கவேண்டுமென நாம் கிளர்ச்சிசெய்தோம். அப்போது பனகால் அரசருக்கு முதலில் அது புதுமையாகவும், சிறிது வெறுப்பாகவுந்தோன்றியது எனினும், பின்னர் அதன் உண்மைகளையுணர்ந்து தமிழ் சித்த மருத்துவ முறையையும் ஆதரித்தார்.

சித்த வகுப்பில் சேர்ந்து படிக்கும் ஏழைமருத்துவ மாணவர் பலருக்கு சம்பளமில்லாமல் சேரும்படி செய்தார். இந்த உதவியைமருத்துவத்தொழிலை பரம்பரைக் குலத்தொழிலாகக்கொண்ட மருத்துவர்களும், மற்ற இந்திய மருத்துவர்களும் பனகால் அரசரை என்றும் மறவாமல் அவருக்கு நன்றிசெலுத்த கடமைப்பட்டவர்களாகின்றார்கள்.

21895

## மரணச் செய்தி

திருநெல்வேலி ஜில்லா மருத்துவர்சங்க அமைச்சர் ஸ்ரீ முத்துசாமி பண்டிதர் அவர்களின் சகோதரியும், டாக்டர் எஸ். திருவேங்கடம் பிள்ளை அவர்களின் மனைவியுமான திரு. பொன்னம்மை சிலநாள் நோயாயிருந்து காலஞ்சென்றதறிந்து மிகக் கவலைபடைகின்றோம்; அதனால் நமக்கேற்பட்டுள்ள மனவருத்தத்தை அக்குடும்பத்தினருக்கு அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

பத்திரிகாசிரியர்.

---

## "மருத்துவனு"க்கு வாழ்த்து

முந்நீர் சூழ்தரு மிந்நில வரைப்பின்
மக்கள் வாழ்க்கை மாண்புறல் கருதி
நோயிலா வுடலும் நுகர்ச்சிப் பெருக்கமும்

ச. உடையவராத லுணர்ந்த நன்னறிவோர்
நோய்வாராதிருக்கவு நோய்வரிற் றடுக்கவும்
இருவழி கோலிப் பெருமுறை மருந்துஞ்
செய்முறை வழியுந் தெரித்தனர் நமக்கே

௮. மருத்துவநூலும் மருத்துவ வழியும்
பெருகிய யிந்நாட் பெற்றியே தென்னின்
தமிழர் தந்நாட்டுத் தட்ப வெப்பத்
தகுதியிற் கேற்பச் சாற்றிய சித்தர்

௧௨. மருந்தும் வழியும் மறந்தன ராகி
யதன் பெரு மாண்பு மறியா ராகி
அயல் நாட்டவர்செய் யரிய மருந்தே
யமையு மென்றெண்ணி யளப்பரு நோய்க்கும்

௧௬. இருப்பிட மாயின ரிதையுணர்ந் திரங்கிப்
பல்லோர் மருத்துவப் பழநூற் பெருக்கமுங்
கண்டறி திறலோன் கருணை யுருவன்
மருத்துவ ரிலக்கண முற்று முடையோன்

௨0. ஆனந்தப்பேர் தரும் ஆனந்தப்
பண்டிதன் சீரியன் பழங்குடி மருத்துவன்
நோயே யணுகா நேரிய வழியும்
அணுகிய நோயி னற்றலுக் கேற்ப

௨௪. மருந்தும் வழியு மருளா வகையின்
மக்களுணர்ந்து தக்கனராகி
நல்வாழ் வுறுதற் காவன வரைந்து
"மருந்துவன்" எனும்பேர் திறம்படப் பொறித்துத்

௨௮. திங்க டோறுந் திரிவன வாகி
விடுத்தனன் சுவடி விபப்புற நமக்கே (அதுதான்)
நாளையும் நாளையும் நல்லனவாகிப்
பல்லோர் பயனுறப் பரந்து திகழ்தர

௩௨. யெல்லாம்வல்ல யிறைவனை வணங்கி
வாழ்த்துதும் யாமே வாழ்த்துதும்

௩௪. வாழ்க ஆனந்தர் வாழ்க அத்தாளே !

குரு - குமாரசாமி,
சமரச சன்மார்க்க நிலைய அமைச்சர்
அந்தணர் பேட்டை, சிக்கல்.

---



## மதிப்புரை

" அருணோதய " மென்னும் ஒரு உயர்ந்த தமிழ்த்திங்கள் வெளியீடு வரப்பெற்றோம். இருட்டறையில் குருட்டுக் குழந்தையைப்போல் பொய்யான சாதி, மதமென்னும் அந்தகாரத்தில் மூழ்கி அன்பு, அறிவு என்னும் கண்கள் மறைந்து உழலும் நந்தமிழ் மக்களுக்கு மெய்க்கல்வி, ஆராய்ச்சி, கைத்தொழில், வாணிபம், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் முதலிய கதிர்களோடுகூடி அருணன் (சூரியன்) உதய மாகாவிடில், தமிழ்மக்களுக்கு அன்பும், அருளும் இன்னதென்று தெரியாது, நமது தமிழ்நாடும் தன்னரசு நாடாகாது; நமது மக்களும் உண்மை மக்களாக மாட்டார்கள், மற்ற நாட்டார்களும் நம்மை மதிக்கமாட்டார்கள். ஆதலால் அருணோதயம் போன்ற இந்த "அருணோதய" த்தை மகிழ்ச்சியுடன் தமிழர் எல்லோரும் எதிர் பார்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதன் ஆசிரியர் திரு எஸ். ஏ. சின்னப்பமுதலியார் அவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| இதன் வருடசந்தா உள் நாட்டிற்கு ரூபா | 1 | 4 | 0 |
| வெளிநாட்டிற்கு சந்தா ரூபா | 1 | 8 | 0 |

" அருணோதயம் " ஆபீஸ்
எட்டயபுரம், தென் இந்தியா.

---

மருத்துவனுக்கு
### நன்கொடை கொடுத்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| திருநெல்வேலி ஜில்லா மருத்துவர் சங்கத்தார் ரூபா | 50 | 0 | 0 |
| V. S. சண்முகானந்த வைத்தியர் தமிழ் வைத்தியசாலை 36. மாகாளிப்பட்டி புதுரோடு மதுரை ரூபா | 10 | 0 | 0 |
| சைதாப்பேட்டை M. சரவணபிள்ளை அவர்கள் ரூபா | 10 | 0 | 0 |
| திருநெல்வேலி ஜில்லா, ஆத்தூர், மருத்துவர் சங்கத்தார் ரூபா | 10 | 0 | 0 |
| மன்னார்குடி தாலுகா, பெருகவாழ்ந்தான் ரெங்கசாமி பண்டிதர் ரூபா | 5 | 0 | 0 |
| சேர்மாதேவி மு. வேலு வைத்தியர் ரூபா | 1 | 0 | 0 |

## மருத்துவனுக்கு
## முன்பணம் அனுப்பினவர்கள்

Dr. S. திருவேங்கடம் மெடிகல் ஆபீசர்
ராயகுடா, கஞ்சம் ஜில்லா.

Dr. S. சுந்தரம். மெடிகல் ஆபீசர்
சிந்தாப்பள்ளி.
நரசப்பட்டணம் (வழி)

Dr. M. P. சங்கர சுப்பு பிள்ளை
பத்தமடை திருநெல்வேலி ஜில்லா.

Dr. R. பீம்சிங்
காரைக்குடி ராமநாடு ஜில்லா.

Dr. T. R. மாணிக்கம் பிள்ளை
சப் அஸிஸ்டண்ட் சர்ஜன்
எல்லையபூர், சேலம் ஜில்லா.

Dr. P. R. நாயனர்
ஏனங்குடி, தஞ்சாவூர் ஜில்லா.

Dr. K. வெங்கட்டராமபண்டிதர்
கருப்பட்டி, சோழவந்தான்.

R. C. வெங்கட்டராமநாயுடு
கடலங்குடித் தெரு, கும்பகோணம்.

N. சுப்பையாதாஸ், கஸ்டம்ஸ் சப் இன்ஸ்பெக்டர்.
திண்டிவனம்.

G. துரைசாமி நாயுடு
5-3. ஹெட்குவார்டர் ஆபீஸ் ரோட்
கோயமுத்தூர்.

P. G. ஆன்திக், கிளார்க் & டீ மேக்கர்
ஸ்தார்ப்ரோ, மஸ்கிலியா, சிலோன்.

V. S. சண்முகானந்த வைத்தியர்
36. மாகாளிப்பட்டி புதுரோட், மதுரை.



வைத்தியர் சுவாமிநாத பிள்ளை
பாபநாசம், தஞ்சாவூர் ஜில்லா.

G. நடேச வைத்தியர், சீர்காழி.

பசுபதி வைத்தியர்
குடவாசல், தஞ்சாவூர் ஜில்லா.

M. வேலு வைத்தியர்
சேரமாதேவி, திருநெல்வேலி ஜில்லா.

K. ஆண்டியப்பவைத்தியர்
சேரமாதேவி திருநெல்வேலி ஜில்லா.

V. M. முத்துக்குமாரசாமி வைத்தியர்
பழையவண்ணாரப்பேட்டை சென்னை.

S. வீரமலைவைத்தியர், கான்பாளையம், மதுரை.

S. சிதம்பரவைத்தியர்
கீவளூர், நாகப்பட்டணம் தாலூகா.

S. வெங்கடாசலபதி வைத்தியர்
கருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.

P. ராமையா வைத்தியர்
நாவல்பிட்டியா, சிலோன்.

P. K. வெங்கட்டகிருஷ்ண அய்யங்கார்
ஆயுள்வேத வைத்தியர், சென்னிமலை
கோயமுத்தூர் ஜில்லா.

R. அப்பாத்துரை பிள்ளை
சித்தவைத்தியர், வேலூர்.

S. சுப்பையா பண்டிதர் தல்லாகுளம், மதுரை.

P. ராமசுவாமி பண்டிதர் தென்காசி.

T. S. முத்துசுவாமி பண்டிதர்
கற்பதரு வைத்தியசாலை, திருநெல்வேலி.

K. A. தேவராடபண்டிதர், சைதாப்பேட்டை.

வேலாயுதபண்டிதர்
தெரிசனகொப்பு, நாகர் கோயில்.

R. கணபதி பண்டிதர்
கூனியூர், திருநெல்வேலி ஜில்லா.

தட்சிணாமூர்த்தி பண்டிதர்
தெற்குவெளிவீதி, மதுரை.

சுந்தரம் பண்டிதர்
தெமட்டகொடரோட், கொழும்பு.

ரெங்கசாமி பண்டிதர்
பெருநவாழ்ந்தான், மன்னார்குடி தாலுகா.

P. நல்ல பெருமாள் பண்டிதர்
1-14. கோர்ட்போம் ஸ்திரீட், கொழும்பு.

S. வேலாயுதம் பண்டிதர்
நாவல் பிட்டியா, சிலோன்.

S. சுடலைமுத்து பண்டிதர், கம்பளை, சிலோன்.

S. பொன்னையா பண்டிதர்
அம்பலங்கொட, சிலோன்.

K. ராமு பண்டிதர் கமுதி, ராமநாடு ஜில்லா.

சுப்பிரமணிய பண்டிதர்
தமிழ் சித்தவைத்தியர், பெரியகருப்பூர்
திருச்சி ஜில்லா.

M. வெள்ளையன் பண்டிதர்
சின்னமனூர், மதுரை ஜில்லா.

K. வீரபத்திர பண்டிதர்
நாகல் நகர், திண்டுக்கல் டவுன்.

S. முத்துமாலை தாஸ்
சாத்தான் குளம், திருநெல்வேலி ஜில்லா.

R. சண்முகம், கோலாலம்பூர்.

P. முருகேசன், ராயபுரம், சென்னை.



M. சரவணபிள்ளை, சைதாபேட்டை.

V. கிருஷ்ணன்,
திருச்செந்தூர், திருநெல்வேலி ஜில்லா.

T. M. லாஸரஸ், தூத்துக்குடி.

N. பீர் முகம்மது ராவுத்தர்
கிளாத் மர்ச்சண்ட், திருத்துறைப்பூண்டி.

V. M. சுவாமி பிள்ளை,
தலைவாக்கெலை, சிலோன்.

A. S. ஆறுமுகம், கடுவெலை Po. சிலோன்.

V. செல்லையா, நுவரெலியா, சிலோன்.

M. A. A. கதிரேசன் செட்டியார்,
வேகுபட்டி Po. புதுக்கோட்டை.

T. வைத்தியநாத முதலியார்
C/o. பாரம் சூபர்வைசர் நெல்லிக்குப்பம்.
செக்ரடரி திராவிடசங்கம், நாகூர்.

T. N. வேலு மருத்துவர்,
முதல் மருதானை, கொழும்பு.

N. S. பொன்னையா
கொட்டாஞ்சேனை கொழும்பு.

T. நடனமுத்து, கண்டி, சிலோன்.

N. ராமையா மருத்துவர்
பெரியபுரளை, கொழும்பு.

S. இயக்கி முத்து மருத்துவர்
பெரிய பொரளை, கொழும்பு.

முத்து மருத்துவர்
முதல் மருதானை, கொழும்பு.

N. விசுவநாதன் மருத்துவர்
பெரிய பொரளை, கொழும்பு.

K. பிச்சைமுத்து பண்டிதர்
சித்தவைத்தியசாலை, திருச்சி.

E. சுப்பையா மருத்துவர்
பெரிய பொரளை, கொழும்பு.
ராஜு பண்டிதர், எழும்பூர், சென்னை.

K. பெரியசாமி பண்டிதர்
காட்டுபுத்தூர் Po திருச்சி ஜில்லா.

பண்டிட். P. S. நாராயணன்
அம்பலங்கொட, சிலோன்.

C. முத்துசாமி தாஸ்
தென்காசி

K. V. S. சுந்தரம்
பெட்டா, சிலோன்.

S. வீராசாமி, எட்மாஸ்டர்
கோவில் வெண்ணி, தஞ்சை ஜில்லா.

---

தமிழ்நாடு ஆசிரியர்

## டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் என்ன சொல்லுகின்றார்?

சென்னைத் தமிழ் வைத்தியசாலைத் தலைவர், பண்டிட், எஸ் எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித்தைலத்தைச் சில வருடங்களாக உபயோகித்து வருகின்றேன். சிறந்த குணம் அதில் இருப்பதை அறிந்தேன்.

---

பண்டிட் ஆனந்தரின் மகா சந்தனாதித்தைலம்.

| | | | |
|---|---|---|---|
| 24-அவுன்சு ரூபா | 4 | 4 | 0 |
| 12-அவுன்சு ரூபா | 2 | 4 | 0 |
| 6-அவுன்சு ரூபா | 1 | 3 | 0 |

**தமிழ் வைத்திய சாலை,**
221, தங்கசாலைத் தெரு, சென்னை.

## வியாசம் எழுதுவோர் கவனிக்க வேண்டியவை.

வியாசம் எழுதுகிறவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். இராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை, முதலியவைகளும் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. வியாசங்களைத் திருத்தவும், நிறுத்தவும் ஆசிரியருக்கு முழு உரிமையுண்டு. பிரசுரிக்காத வியாசங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா

வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர்.

நமது ஆபிஸிலிருந்து பதில் வர விரும்புவோர் ஸ்டாம்பாவது. தபால் பில்லையாவது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கடிதம் எழுதும்போதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முழுப்பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | | ரூ. 8—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ரூ. 5—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ரூ. 3—0—0 |

மானேஜர் :—

'மருத்துவன்' ஆபீஸ்,

221, தங்கசாலைத் தெரு,

சென்னை.

8 Regd. No. M. 2418

## மருத்துவன் பத்திரிகை சந்தாதாரர் களுக்குள்ள பெரிய லாபம்.

### பாலர் பரிபாலனம், பாலர் வைத்தியம்

மருத்துவனில் மாதந்தோறும் எட்டுப்பக்கம் (ஒரு பாரம்) 'பாலர்பரிபாலனம் பாலர்வைத்தியம்' என்பதன் சம்பந்தமாகப் பல அரிய பெரிய விஷயங்கள் வெளியாகும். இப்புத்தகம் சுமார் முப்பது பாரத்துக்குமேல் வரும். சந்தாதாரர்கள் அதனைச்சேர்த்து ஒரே புத்தகமாகப் பைண்டு செய்து கொள்ளவேண்டும். இது வீணான வேடிக்கைக் கதைகளைப்போன்றதும், நாவல்களைப்போன்றதுமன்று, இல்லறத்திலிருந்து மக்கள் பேறு அடையும் ஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் பெருநிதியைப் போன்றது, இதில் காணும் ஒவ்வொரு சொல்லும் அமிர்தம்போன்றது. வீட்டிலுள்ள பெண்பாலருக்கு இது மிக முக்கியமாதலால் பெண்கள் படித்துணரும் படியான சாதாரண எளிய நடையில் இப்புததகம் எழுதப்பட்டிருக்கிறது. பாலரை நோயணுகாமல் வளர்க்கும் முறைகளும், பாலர்களுக்குவரும் நோய்களுக்குத் தாங்களே பரிகாரம் செய்துகொள்ளும் வழிகளும் இப்புத்தகத்தில் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன, இப்புத்தகத்தைப் பெண்கள் எல்லோரும் படிப்பதால். சிசு தாயின்கருப்பையினின்று வெளிப்படுங்காலத்தில் அருகிலிருந்து பரிகாரஞ்செய்ய மருத்துவச்சி தேடவேண்டியதில்லை. வீட்டிலுள்ள பெண்பாலார் தாங்களே ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளலாம். தாய், கருஉயிர்த்ததுமுதல், குழந்தைக்குப் பன்னிரண்டு வயது ஆகும் வரையில் குழந்தைகளைச் சுகவழியில் அழகு பெற வளர்க்கவும், நோய்கள் வந்தால் மருத்துவர் (வைத்தியர்) உதவி இல்லாமல் தாங்களே பரிகாரஞ்செய்துகொள்ளவும் இப்புத்தகம் மிகவும் முக்கியமானது. இப்புத்தகம் மருத்துவர், மருத்துவச்சிகளுக்கும், மருத்துவ மாணவர் மாணவிகட்கும், பொது ஜனங்கட்கும் தோன்றாத்துணையாக உள்ளது.

மானேஜர்:—**மருத்துவன் காரியாலயம்,**
221, தங்கசாலை வீதி,
சென்னை.

Printed by The Sree Subramaiyna Vilasam Press, NO 220. Mint Street. MADRAS.
& Published by Pandit S. S. Anandam, 221, Mint Street, Madras.

...THUVAN

# மருத்துவன்

PHYSICIAN

தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர். பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

4 JAN 1929 MAD

மலர் க. 1928ஞ் டிசம்பர்மீ இதழ் ௩.

உள்ளுறை

| | |
|---|---|
| அபிப்பிராயங்கள் | 57 |
| பொன் | 61 |
| மதுசாரம் | 65 |
| உடற்பயிற்சியும் சுகாதாரமும் | 68 |
| தமிழர்கள் | 69 |
| சுகவழி | 72 |
| சிறுத்தொண்டர் வரலாறு | 75 |
| ஒரு அருமைத்திருமணம் | 79 |
| பனகால் அரசர் விண்ணுற்றார் | 80 |
| மருத்துவனுக்கு வாழ்த்து | 81 |
| மதிப்புரை | 83 |
| நன்கொடை யாளர்கள் | 83 |
| பாலர் பரிபாலனம் | |

மருத்துவன் காரியாலயம்

221, தங்கசாலை வீதி

சென்னை.

# மருத்துவன

ஓர் உயர்ந்த வைத்திய மாதப் பத்திரிகை.

இம் மருத்துவன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத வேண்டியவன். இவன் நோயாளிகளாகிய ஆண், பெண் ஆகிய இரு பாலாருக்கும் போதிக்கக் கூடியவன். வந்த நோய்களை எளிதாகப் போக்கிக் கொள்ளும் வழிகளைக் கூறுபவன். பெண்கள் கருப்பெற்ற காலத்திலும், கரு உயிர்க்கும் காலத்திலும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும், பாலர் பரிபாலனத்தையும், குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அவற்றிற்குரிய பரிகாரங்களையும் அறிவிப்பவன். பொதுவாக மக்கள் நோயின்றித் தேகபலத்தோடும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்குரிய வழிகளை ஆராய்ச்சி முகத்தால் எடுத்து விளக்குபவன். மக்களுக்கு உயிரினும் சிறந்த பொருள் உலகில் வேறொன்றுமில்லையாதலால், ஒவ்வொருவருடைய உயிர் வாழ்க்கைக்கும் இம்மருத்துவன் உற்ற துணைவனாவான்.

## மருத்துவனின் சந்தா விபரம்.

ஆண்டு 1-க்குத் தபாற் கூலியுட்பட நம் நாடாகிய இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 3—0—0.

பினங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ 3—8—0

தனிப்பிரதி அணா 0—4—0

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

பத்திரிகை ஆங்கிலமாதக் கடைசியில் வெளிவரும்.

## சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டியவை.

சந்தா தாரர்களாகச் சேருகிறவர்கள் தங்கள் பெயரையும், முழு விலாசத்தையும் அருகிலுள்ள தபாலாபீசோடு தெளிவாக எழுத வேண்டும்

சந்தா தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி-பி-யில் செலுத்தியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டின் நடுவில் சேருகிறவர்களுக்கு முன் பத்திரிகைகள் வேண்டுமானால், இருக்கும் சஞ்சிகைகள் மட்டும் அனுப்பப்படும்.

# உன்வரவு நல்வரவாகுக!

மருத்து[illegible]க்கமெனவும், மருத்துவ மகாநாடெனவும் சில்லாண்டுகளாக [illegible]கள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் அவைகளைப்பற்றிக் கூறும் [illegible]ருவத்தையும் நாம் நேரில் கண்டதில்லை. அத்தகைய விஷயங்களை [illegible]றும் உருவமொன்று இதுகாறும் இல்லாமையினாற்றான் மருத்துவக் குலத்தினராகிய நாம் முன்னேற்றமடையும் மார்க்கம் அறியாமல் தவித்துக்கொண்டு இருந்தோம்.

நாடும், சமூகமும் முன்னேற்ற மடைவதற்குப்பத்திரிகைகள் ஏணிகளாய் இருந்து உதவுகின்றன. நமது சமூகமும், முன்னேற்றமடைகின்ற மற்றச் சமூகங்களைப்போல், முன்னேற்ற மடைவதற்கு நமக்கு ஏணியாகிய பத்திரிகை ஒன்று வேண்டியதாயிருந்தது. அந்த [illegible]யத்தை பூர்த்திசெய்யவே இப்போது, "மருத்துவன்" உதித்திருக்கிறான். இவன் தந்தையார் ஏனைய மருத்துவரைத் தட்டி விழிக்கச் செய்த பண்டிதர் திரு எஸ். எஸ். ஆனந்தம் அவர்களாவர். அவர், மருத்துவர் முன்னேற்ற மடைவதற்கு வழிகாட்டவந்த மாதாந்த மருத்துவச் செல்வனை அற்பிசித்திங்களில் உலகுக்களித்தார். மருத்துவச்செல்வன் வாயில் தந்தையாராகிய தாம் தமது கருத்தை ஊட்டினார். சீர்திருத்தக் கட்டுரைகளினால் அவனுடைய அங்கத்தை அலங்கரித்தார். பிறகு அவர் அம்மருத்துவனை, "மருத்துவர்களுக்குத் தொண்டு செய்யப் போ" வென்று கூறியனுப்பினார். அவன் நம்மைத் தபால்மூலமாகத் தேடிவந்து நமது கதவங்களைத் தட்டினான். நிற்க,

மருத்துவன் என்னையும் தேடிவந்தான். நான், நீயார், என்றேன். அவன், நான் மருத்துவன், என்றான். மருத்துவனைக் கண்டேன்; களிகூர்ந்தேன். அவனைவாரி எடுத்து முத்தமிட்டேன். மருத்துவன் திருவாய்ச் சொற்களைக்கேட்டு மகிழ்ந்தேன். மருத்துவச் சமூகத்தின்பால் உள்ள முன்னேற்ற மில்லாமையாகிய பிணியையும், மக்கள்பாற்குடிகொண்டுள்ள உடம்பின் பிணியையும் தீர்க்கக் கருதி முன்வந்துள்ள மருத்துவனுக்கு நாம் செய்யும் கைம்மாறு யாது? என்று நான் எண்ணினேன். உடனே "மருத்துவன், மருத்துவர்களுக்குள் ஒற்றுமை அபிமானம் முதலியவைகளை வளரச்செய்யவேண்டும்" என்றான். பின்னும் அவன், "ஒற்றுமை, குலாபிமானம் முதலியவைகள் மருத்துவர்களிடம் வேண்டுமளவுக்கு இல்லை என்றெண்ணி என் தந்தையாராகிய ஆனந்தம் அவர்கள் ஏக்கமுற்று, நீயாவது அவைகளை மருத்துவர்களுக்குப் போதித்துவா உன் பீதாவது மருத்துவர்கள் இரக்கம் கொண்டு ஒற்றுமை அன்பு முதலியன உடையவர்களாகட்டும், என்று கூறினார்,' என்றான்.

உடனே நான், மருத்துவனே! உன்வரவு நல்வரவாகுக! உன் தந்தைக்கு, உன்னை வளர்ப்பதற்காகவே, இறைவன் நிறைந்த ஆயுளை தேகபலத்தையும் தருவானாக, என்று கூறி நான் கடவுளைத் துதித்தேன்.

க. ஜானகி, பினங்கு.

## இந்து பத்திரிகை, சென்னை

5-12-1928

'மருத்துவன்' பத்திரிகையின் அக்டோபர் மாதத்திய வெளியீடு (முதல் வெளியீடு) வரப்பெற்றோம். இது ஒருமாதப் பத்திரிகை. இதன் ஆசிரியர் பண்டிட் S. S. ஆனந்தம் அவர்கள். இப்பத்திரிகை பொது ஜனங்களுக்கு சுகாதார விதிகளையும், பொதுவாக நோயணுகா விதிகளையும், குறிப்பிட்ட பல வியாதிகளை ஒழிக்கும் முறைகளையும் கூறுவதோடு, சித்தவைத்திய முறையை அனுசரித்து வியாதிகளைப்போக்கும் வழிகளைக் கூறுவதாக அறிகிறோம்."

## ஜஸ்டிஸ், சென்னை

(1-12-1928.)

மருத்துவன் என்னும் புதிய தமிழ்வைத்திய மாதப்பத்திரிகையின் முதல் வெளியீடு வரப்பெற்றோம். அதன் ஆசிரியர் பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள். நம்நாட்டு மருந்துகளைப்பற்றிய அறிவு வளர்ச்சியையும், பிரசவம், சிசு பரிபாலனம் ஆகிய இவைகளைப்பற்றிய முக்கியமான விஷயங்களையும் பரப்புவது அதன் நோக்கமாகும். அதன் முதல் வெளியீட்டில், மற்றவைகளுடன் ஆரோக்கியம், உடல் வலிமை, குழந்தை பிறந்ததும் அனுசரிக்க வேண்டிய சில முக்கிய விதிகள் ஆகிய இவைகள் அடங்கியுள்ளன. அப்பத்திரிகை நீடூழிவாழ்க.

## இந்து சாதனம், இலங்கை

(29-11-1928.)

மருத்துவன்.

" இது சென்னையிலிருந்து மாதந்தோறும் வெளிபாகும் சஞ்சிகை வடிவமான ஓர் பத்திரிகை. இதன் முதல் இதழ்வரப்பெற்றோம். இதன்கண் ஒவ்வொரு குடும்பமும் அநுசரிக்கவேண்டிய நோயணுகாவிதிகள், பெண்கள் கருப்பவதிகளாயிருக்கும்,காலங்களில் நடந்துகொள்ளவேண்டிய முறைகள், குழந்தைகளை நோயணுகா வண்ணம் வளர்க்கும் தன்மை, ஆபத்துக்காலங்களில் செய்யவேண்டிய உதவிகள், பதார்த்தகுணம் முதலிய அரிய விஷயங்கள் வெளியிடப்படுகின்றன. மருத்துவ விஷயமாக இது காறும் ஒருபத்திரிகையும் வெளிவந்ததில்லை. அதனையுணர்ந்து இதன் ஆசிரியர் அக்குறையை நிவர்த்திசெய்துள்ளார். ஒவ்வொரு குடும்பஸ்திரீயும் இப்பத்திரிகையை ஆதரித்து வருதல் அவர்களுக்கே நன்மையாகும்."

---

## பண்டிட் ஆனந்தரின் தமிழ் வைத்திய சாலை,
## 221, தங்கசாலை வீதி, சென்னை.

அன்பர்களே!

### அருமையான உங்கள் உடம்பில் ஒரு நோய்வந்தால் உடனே யாரிடம் தெரிவிக்கின்றீர்கள்?
### யார் சொல்லை நம்புவீர்கள்?
### யாருடைய மருந்தை அன்புடன் அருந்துவீர்கள்?

கற்றறிந்த பிரபலமான ஒரு வைத்தியர் (டாக்டர்) சொல்லைத் தானே நம்புவீர்கள். அதுபோல் கவர்ன்மெண்டு வைத்திய பரீட்சைகளில்தேறி பொது ஜனங்களின் நன்மதிப்புக் குரியவர்களாயுள்ள இங்கிலீஷ் டாக்ட்டர்கள் இதன் அடியில் என்ன எழுதுகின்றார்கள் என்பதை அன்புகூர்ந்து முழுவதும் படித்துப்பார்த்து அதன்படி நடந்து கொள்ளப் பெரிதும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## டாக்டர்களின் அபிப்பிராயம்

### டாக்டர் சி. என். டி.. சுவாமி, ஐ. எம். டி.

ஒரு குழந்தைக்கு இருந்த மேக நோயை வெகு ஆச்சரியமாக பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் குணப்படுத்தினதை நான் பார்த்தேன். அந்த குழந்தையை முதலில் என்னிடம்தான் கொண்டு வந்தார்கள். ***** டை குழந்தையை இரண்டொரு மாதங்களுக்குப் பின் நான் பார்க்க நேரிட்டபொழுது, அந்த மேகநோய் முற்றும் நீங்கி, அக்குழந்தை நலமா யிருக்கக்கண்டேன். சிலசித்தவைத்தியர்கள் இம்மாதிரி வியாதிகளைக் குணப்படுத்துவதில் மிகவும் கை தேர்ந்தவர்களென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

### டாக்டர் சி. ஆர். புருஷோத்தம முதலியார் அவர்கள்

பி. ஏ., எம். பி. சி. எப்.

சிவில் அஸிஸ்டேண்டு ஸர்ஜன் ஜெனரல் ஆஸ்பத்திரி சென்னை.

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் சிறந்த மருந்துகளில் மகா சந்தனாதித் தைலம், அமுத சுரபி, பற்பொடி முதலியவற்றை இரண்டு மூன்று வருஷங்களாக உபயோகித்து அவற்றின் நற்குணங்களை அறிந்திருக்கிறேன். அவருடைய மருந்துகள் பலராலும் கொண்டாடப்படுகின்றன. தாழ்ந்த வகுப்பினருக்கு இலவசமாக வைத்தியஞ் செய்வதுமன்றி அவ்வப்போது சுகாதார போதனையுஞ் செய்து வருகின்றார்."

### டாக்டர் ஜெ. எம். ஞானவொளி
பி. ஏ., எம். பி. ஸி. எம். சென்னை.

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் மகா சந்தனுதித் தைலம், அமுத சூரபி முதலிய மருந்துகளை நான் உபயோகித்துப் பார்த்தேன். அவை நேர்த்தியாய்ச் செய்யப் பட்டிருக்கின்றன; நல்ல மருந்துகள்."

### டாக்டர் டி. எஸ். இராமசாமி அவர்கள்
பி. ஏ. எம். பி. ஸி. எம்.

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளையவர்கள் கீர்த்தியுள்ள தமிழ் வைத்தியக் குடும்பத்தினர், அவருடைய அமுத சூரபி என்னும் தாது விருத்தி மருந்து. சந்தனுதித் தைலம், ஹேர் ஆயில், ராயல் டூத் போஸ்ட் என்னும் பல் விளக்கும் மருந்து முதலியவைகள் சாஸ்திர முறையாய்த் தயார் செய்யப் பட்டிருக்கின்றன. குறித்த நோய்களைக் கண்டித்து நல்ல குணத்தைத் தருகின்றன."

### டாக்டர். ஜெ. ஆர். ஆசீர்வாதம் அவர்கள்
பி. எ. எல். எம். எஸ்.

கிருஸ்டியன் கலாசாலை, மெடிகல் ஆபீஸர் சென்னை

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களுடைய மகா சந்தனுதித் தைலம், ராயல் டூத் போஸ்ட், கேசாமிர்தம், கஸ்தூரி பற்பொடி முதலியவைகளை நான் உபயோகித்து பரீட்சித்திருக்கிறேன். அவைகள், குறித்த நோய்களைப் போக்கி அதிக நன்மையடையச் செய்கின்றன. அருமையான சரக்குகள் அவைகளில் சேர்க்கப்பட்டிருந்தும் சொற்ப விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது, இவைகள் அநேகருக்குப் பிரயோசனத்தைக் கொடுக்குமென நிச்சயிக்கிறேன்.

### டாக்டர் ஜே. என். ராஜ ரத்தினம், பி. ஏ. எல். எம். எஸ்.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனுதித் தைலத்தை நெடுநாளாக உபயோகித்து வந்திருக்கின்றேன். அது மிக ஆரோக்கிய முள்ளதாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கின்றது. அதன் இனிமையான மணமும் எல்லோராலும் விரும்பத் தக்கதாயிருக்கின்றது.



யாகும். நாம், மக்களுக்கு இன்றி அமையாத கல்வி, அறிவு, ஆன்ம சக்தி, தேகசக்தி, நீண்ட ஆயுள், செல்வம், ஒற்றுமை, அன்பு, அருள், ஒழுக்கம் முதலியவைகளை அறவே இழந்தோம். விலங்கினும் கேடான நிலையை அடைந்தோம். இக்கீழ் நிலையிலிருந்து மீண்டும் நாம் ஒரு சமூகமாய் ஒற்றுமைப்பட்டுப் பண்டைக்கால நலன்களை எல்லாம் அடைந்து, மற்ற நாட்டினரைப்போல் சீரும், சிறப்புமுற வேண்டுமாயின் நமது தாய் மொழியை நன்கு பயின்று நமது செந்தமிழ் மொழியில் நமது பெரியோர்கள் சேமித்து வைத்துள்ள அன்பு, அறம், மருத்துவம், யோகம், ஞானம் முதலிய அறிவு நூல்களையும் வேளாண்மை, கைத்தொழில், வாணிபம் இரசாயன சாஸ்திரம் முதலியவைகளையும் கசடறக் கற்றல் வேண்டும். நம்மை மூடர்களாக்க நடுவில் வந்து சேர்ந்த பொய்க் கதைகளையும், புராணங்களையும், சாஸ்திரங்களென மதித்துள்ள தவறான எண்ணம் ஒழிய வேண்டும். நோய்வராமல் தடுத்துக் கொள்ளவும், வந்த நோய்களைப்போக்கிக்கொள்ளவும் வழியறியாது உடம்பில் உண்டாகும் பிணிகளுக்கெல்லாம் காரணம், பேய், பிசாசு, மாடன், வீரன், இருளன், மாரி, காளி, முதலிய துர்த் தேவதைகளின் செய்கையே எனவும், பகைவர்களால் ஏவி விடப்படும் பில்லி, சூனியம், வைப்பு, எனவும், அவற்றிற்குச் ஜோதிஷம் பார்த்தல், மந்திரம் செய்தல், குறிகேட்டல், காணிக்கை செலுத்தல், சிறு தேவதைகளுக்கும் இறந்துபோனவர்கட்கும் பலியிடல், பூசை போடல், தலை மயிரை மொட்டை அடித்தல், காதிலும், கன்னங்களிலும் அலகு குத்துதல் முதலிய செய்தல் வேண்டுமென எண்ணும் அறிவற்ற கொள்கைகள் ஒழியவேண்டும். ஒளி மழுங்கி மறைந்து கிடக்கும் நமது நாட்டு மருத்துவத்தை வளர்த்து, அதனைப் பிரகாசிக்கச் செய்து, அதன் பயனை உலகத்தில் எல்லோரும் அடைந்து இன்புறச் செய்தல் வேண்டும். இவைகளுக்காக நம்மாலியன்ற துறைகளிலெல்லாம் முயற்சி செய்வதே, நமது பெரும் நோக்கமாகும்.

தமிழ் நாட்டில் மருத்துவ நூல்களைத் துறை போகக் கற்றுத் தேர்ந்து சுதேச சமஸ்தானங்களிலும், பொது ஜனங்களிடத்திலும் பெரும்புகழ் படைத்த பரம்பரை மருத்துவ வகுப்பினில் பிறந்த யாம் அம்மருத்துவத் தொழிலில் இளமை முதல் பயின்று, சென்னை நகரில் இருபது ஆண்டுகளுக்கு மேல் தமிழ் (சித்த) வைத்தியத்

தைச் செய்து வருகின்றோம். எனினும் நமது வைத்தியம் பொது மக்களாலும், அரசாங்கத்தாராலும் நன்கு மதிக்கப்படாமலும், ஆதரிக்கப்படாமலும் இருந்து வந்தது. அந்நிலையைப் பார்த்து மனம் சகியாமல் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 23-12-1915-ஆம் நாள் சென்னையில் டாக்டர் சர். சுப்பரமணிய ஐயர், சர். பி. தியாகராய செட்டியார், திவான் பகதூர் P. இராஜரத்தின முதலியார் முதலிய பெரியோர்களின் ஆதரவினாலும், சென்னையிலும், வெளியூர்களிலுமுள்ள சில மருத்துவப் புலவர்களின் துணையினாலும் தென் இந்திய ஆயுள்வேத சங்கமெனும் பெயரால் ஒரு தமிழ் (சித்த) வைத்திய சங்கத்தை நிறுவி அச்சங்கத்துக்கு நாமே சில ஆண்டுகள் காரியதரிசியாகவும் இருந்த உழைத்து வந்தோம். அந்த நாள் முதல் தமிழ் வைத்திய பாடசாலை, தமிழ் வைத்தியசாலை, தமிழ் வைத்தியப் பத்திரிகை முதலியன நடத்தல், தமிழில் அச்சுக்கு வாராது மிகுதியாயுள்ள மருத்துவ நூல்களை ஆராய்ந்து தொகுத்து அச்சிடுதல் முதலிய அலுவல்களைச் செய்ய அச்சங்கம் நோக்கங்கொண்டிருந்தது. அந்நோக்கப்படி செய்தற்கு நம்மவர்களின் ஒற்றுமைக் குறைவால் இதுகாறும் தடைபட்டு வந்தது. எனினும் நமது முயற்சி முற்றும் வீணாகாமல் அரசாங்கத்தார் நமது நாட்டு மருத்துவத்தை ஆதரிக்க முன்வந்து சென்னையில் இந்திய மருத்துவப் பாடசாலையில் தமிழ் (சித்த) வைத்திய பாட சாலையையும், சித்த வைத்திய சாலையையும் நான்கு ஆண்டுகளாக நடத்தி வருகின்றனர். அதற்காக நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கின்றோம். நமது மருத்துவ வளர்ச்சிக்குத் தமிழ் மருத்துவப் பத்திரிகை ஒன்றுவது நீடித்து நன்னிலையில் நடைபெற வேண்டியது இன்றியமையாததாகும்.

இஃதன்றித் தமிழ் நாட்டில் மருத்துவத் தொழிலைக் குல வித்தையாகக்கொண்டு பரம்பரையாக அத்தொழிலைச் செய்துவரும் மருத்துவ வகுப்பினர், கால வேற்றுமையாலும், அரசியல் மாறுதல்களாலும் தற்காலம் தங்கள் தொழிலின் அறிவுகுன்றி வருகின்றார்கள். இதனால் அவர்கள் பொது மக்களுக்குச் செய்துவந்த பேருதவியைச் செய்ய வகையற்றவர்களாய்ப் பெருமை குறைந்து இருக்கின்றார்கள். மருத்துவ வித்தையைத் திரும்பவும் அவ்வகுப்பினருக்குக்கல்வி அறிவோடு கலந்து போதிக்கக் கருதி ஏழாண்டுகளுக்கு—



முன் தென்இந்திய மருத்துவ சங்கத்தைச் சென்னையில் நிறுவி அச்சங்கத்தின் சார்பில் இரண்டு மூன்று மகா நாடுகள் கூட்டிச்செய்த தீர்மானங்களில் மருத்துவவளர்ச்சிக்கும் மருத்துவர்களின்முன்னேற்றத்திற்கும் மருத்துவப் பத்திரிகை ஒன்று நடத்தவேண்டுமென்பதும் ஒன்றாகும். ஒரு பத்திரிகையைச் சரியான முறையில் நீடித்து நடத்துவதற்குவேண்டிய வசதிகள் ஏற்படாமல் நாம் இதுவரையில் இவ்வலுவலை நடத்த யோசித்துக் கொண்டிருந்தோம். ஆனால், நமது நண்பர்கள் மருத்துவப் பத்திரிகையொன்று நடத்தும்படி அடிக்கடி நம்மைத் தூண்டுவதாலும், நமக்கு இதிலுள்ள அபிமானத்தினாலும் சுமார் நாலுகோடி தமிழ் மக்களும் அதில் பல்லாயிரக் கணக்கான மருத்துவர்களும் தென்னாட்டில் இருப்பதாலும், நமக்குள்ள தொல்லைகளுக்கிடையில் இம் "மருத்துவன்" எனும் வைத்திய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையையும் இறைவன் திருவருளால் நடத்த முன் வந்தோம். பத்திரிகைகளெல்லாம் அன்பர்களின் ஆதரவினாலேயே நீடித்து நடைபெறவேண்டும்.

இம் 'மருத்துவன்' என்னும் பத்திரிகை ஒவ்வொருவருடைய குடும்பத்திற்கும் இன்றியமையாது வேண்டிய நோயணுகா விதிகள், சுகாதாரப் பகுதிகள், கருப்பெற்ற காலத்திலும், கருவுயிர்க்குங் காலத்திலும், பெண்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள், பாலர் வளர்ப்பு, சிசு வைத்தியம், சமையல் பாகம், வைத்தியக் கைமுறைகள், ஆபத்துக்களில் செய்யவேண்டிய முதல் உதவிகள், சித்தவைத்தியம் எனும் தமிழ் வைத்தியம், மருத்துவர்களின் வரலாறு, மருத்துவ வகுப்பினரின் முன்னேற்றத்திற்கான குறிப்புகள், இன்றியமையாத பொது விஷயங்கள் முதலியவற்றைக் கொண்டு வெளியாகும். பெரியோர் இப்பத்திரிகையில் காணும் குற்றங்களை நீக்கிக் குணத்தைக்கொண்டு இப்பத்திரிகைக்கு வேண்டிய விஷயங்களை அன்புடன் கொடுத் துதவுவார்கள் என்று நம்புகின்றோம். மருத்துவன் பத்திரிகையை ஆதரிக்கப் பொதுமக்களையும் மருத்துவர்களையும் பணிவுடன் பெரிதும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பத்திராசிரியர்

அருளி லாமலே பொருளுடை யோர்கள்பா லீட்டிப்
பொருளி லார்கணோய் தீப்பசி பனிப்பிணைப் போக்கித்
தெருளு நன்மருந் தூணுதுகில் தீதற வளித்தல்
மருள கற்றிடு மருத்துவர் கடனென்பர் மன்னே.

---

## தேரையர்

### எண்சீர்கழி நெடிலாசிரிய விருத்தம்

தெய்வவுபா சனைபலநா ளெல்லை காண்டல்
 திரிகரண சுத்திபன்னோய் தீர்த்த லுளும்
நைவகன்ற தீரமதி நுட்பஞ் சான்றோர்
 நட்பொழுக்க மேன்மைகுண மன்புள் ளானாய்
மெய்வசுதை விகலையணங் குறைபதார்த்த
 விதியுடற்கா தாரமட லங்கி மாந்தல்
கைவருமெண் பேதமெலா முணர்ந்தாற் றானாய்க்
 காணிலந்த மருத்துவனைக் காணி யுண்ணே

மூன்று கண்தலை நான்கு முகங்கள்
ஆன்ற வைந்திங் காறு கையுடல்
கான்ற வெட்டுக் கால்கள்பத் தெய்தி
*மாண்ட மருத்துவன் மாற்றுவ னேயே.

### எண் சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வாதுகுறி வைத்தியரே சொல்லக்கேளீர் வாகாகக் கண்மூன்று
 தலைகள் நான்கு
நீதமுடன் முகமைந்து கைகளாறு நிலைசரீரங்களெட்டு
 கால்கள் பத்து
வீதமிதின் பயனறிந்தார் வியாதி தீர்ப்பார் விகமறியார் மானிடரை
 பழியே செய்வார்
சேதமாஞ் செய்மருந்து பலித்திடாது செத்த பின்பு நிரகிற்
 சேருவாரே.

---

* மாண்ட = மாட்சிமையுள்ள

# பொது ஜனங்களுக்கு ஒரு வேண்டுகோள்

இந்திய வைத்திய முறைகளை நான்கு வருஷங்களாகச் சென்னை அரசாங்கத்தார் ஆதரித்து வருகின்றனர். அது மிகவும் சிறந்த நோக்கமென்பது திண்ணம். ஆனால் நமது பொதுஜனங்களில் பலருக்கு நமது நாட்டு வைத்தியத்தில் அபிமானமில்லாமலிருப்பது வருந்தத்தக்கதாகும். அது சம்பந்தமாய்ச் சில விஷயங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஒரு நாட்டின் வெப்ப தட்பத்திற்குத் தக்கவாறும், அந்நாட்டின் நித்தியவாழ்க்கை, பொது வாழ்க்கைக்குத் தக்கவாறும், உணவு முதலியவற்றிற்குத் தக்கவாறும், அனுபவ மூலமாய் மருந்துகள் செய்தலும், பருவகாலம், நோயின் நிலைமை, நோயாளியின் வயது தாது முதலிய எண்வகைச் சோதனைகளை அறிந்து அம்மருந்துகளை உபயோகப்படுத்துதலும் வைத்தியமெனப்படும். ஒரு நோயாளிக்கு நல்ல வாசஸ்தானமும், மனித உதவியும், தக்க பத்திய பாக உணவும் மருந்தைக் காட்டிலும் மேலானவையாகும்.

இந்த நிலைமையில் ஒரு தேசத்தின் வைத்தியம் மற்றொரு தேசத்திற்கு எவ்வளவு தூரம் பொருந்துமென்பதை ஆராய்வோம். மேல்நாட்டிலோ மருந்து செய்பவரும், மருந்து விற்பவரும், மருந்தை உபயோகிக்கும் மருத்துவரும் தனித்தனி மனிதராவார்கள். மேல்நாட்டு மருத்துவரும், அந்த முறையைக் கற்றறிந்த இந்திய மருத்துவர்களும் மேல்நாட்டு மருந்துகள் செய்யும் முறைகளை அனுபவ வாயிலாய் அறியாதவராவார்கள். ஆனால், படிப்பின் மூலமாய் ஒருவாறு அறிந்திருக்கலாம். அனுபவத்திற்கும் படிப்பிற்கும் வித்தியாசமிருக்கின்றது. மற்ற தேசத்து மருந்துகளைப் போலவே மேல்நாட்டிலுங் குறித்த ஒரு வியாதியின் பொருட்டுச் செய்யப்படும் ஒவ்வொரு மருந்தும் காலாந்திரத்திற் பலிதமாகாமற்போவது அனுபவமாகும். மூலிகைகளின் தன்மையும், காரசாரமும் ஒருகாலத்திருப்பவைபோல மற்றொரு காலத்திருத்தல் அருமையாகும். அடிக்கடி பூசாரம் பேதப்படுமென்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். எந்த மருந்தை எவன் செய்பவனோ அவனே அந்த மருந்தை அடுத்தமுறை செய்யும்போது தவறு ஏற்படுவது சாதாரணமாகும். எந்த மருத்துவன் மூலமாய், எந்த மருந்தினால், எந்த மனிதன், எந்த நோயினின்றும் சுகமடைந்தானோ அவனே அந்த மருத்துவனாலும், அந்த

மருந்தாலும் மீண்டும் அந்த நோயினின்றும் சுகமடைதல் அருமையாகும். இவ்விதமில்லாவிடில் மேல்நாட்டிலும் கீழ்நாட்டிலும் மன்னர் மன்னர்களும், பிரபுக்களும், ராஜதந்திர நிபுணர்களும், யுத்ததந்திர வீரர்களும் நோயினால் மரணமடையாரன்றோ? அன்றியும் சிலவியாதிகள், முதிர்ந்த பின்னர், எந்த மருத்துவனாலும், எந்த மருந்தினாலும் நீங்குவது அருமையாகும். பல காரணங்களால் சுவாசம் மிதமிஞ்சி வெளிப்பட்டுப்போன ஒருவனை எந்த வைத்திய முறைதான் காப்பாற்றும்? நமது யோகநூல் இதற்கு அத்தாட்சியாகுமல்லவா? புதிது புதிதாய் உண்டாகும் நோய்களுக்கு அந்த அந்தத் தேசங்களின் வெப்பதட்ப வேற்றுமை , முதலியவற்றிற்குத் தக்கவாறு புதிது புதிதாய் மருந்து பொருள் கண்டுபிடித்தலும் அவற்றால் மருந்துகள் செய்தலும் வழக்கமாகும். அத்தகைய மருந்துகளும் எல்லாத் தேசத்தினருக்கும் ஒரே விதமான பலன் கொடுப்பனவாய்க் காணப்படவில்லை. சில நோய்களின் தோற்றமும், அதற்கு முதற்காரணங்களைப் பற்றிய அபிப்பிராயங்களும் எத்தேசத்திலும் அடிக்கடி மாறிக்கொண்டு வருகின்றன. நாட்டில் ஒரு வியாதி வளர்வதும் குறைவதும் தேசத்தின் சீதோஷ்ணத்தையும் ஜனங்களின் தேக நிலைமையையும் பொருத்தனவாய்க் காணப்படுகின்றன. மருந்துகளாலேயே எல்லா நோய்களும் பரிகரிக்கப்படுமென்பதில்லை. மருந்தில்லாமலேயே பல வியாதிகள் பரிகரிக்கப்படுகின்றன. மருந்து செய்பாகம் வெவ்வேறாய்க் காணப்படினும் மேல்நாட்டு மருந்துகளிற் பலவற்றிற்கும் கீழ் நாட்டு மருந்துகளில் பலவற்றிற்கும் மூலச் சரக்குகளில் வேற்றுமையில்லை. மூலிகைகளின் குணகுணங்களில் எத்தேச மருத்துவ நிபுணர்களும் பேதப்படுவதில்லை. எத்தேசத்து வைத்தியமும், எத்தேசத்து ஔஷதங்களும் இதுவரை ஒரு நிச்சயமான முடிவிற்கு வரவில்லை. இனிவருமென்பதும் எளிதிலில்லை. இந்தியாவில் அரசப் பிரதிநிதியாயிருந்த ஆர்டிஞ்சி பிரபு, எந்த வைத்திய முறையும் பூரணமடையவில்லையென்று பொருள்படுமாறு ஓர் உபந்நியாசத்தில் விளக்கியிருக்கின்றார். அது மறுக்கப்படுவதாகுமோ?

அன்றியும் ஜனங்கள் எந்தப் பூசாரத்தில் பிறந்து வளர்ந்தார்களோ அந்தப் பூசாரத்தில் விளைந்த மூலிகைகளும் மற்றப்பொருள்களுமே உடம்பில் கலந்து எளிதில் நோய்களை நீக்குமல்லவா?



தற்கால நாகரிக வாழ்க்கையில் ஆங்கிலம் படித்தவர்களிலும் படியாதவர்களிலும் பலர் நம் நாட்டு வைத்தியத்தை அவமதிக்கின்றார்கள். சுக்கு, மிளகு, திப்பிலி என்றாலும், இரச, கெந்தக, பாஷாணம் என்றாலும் கேவலமாகக் கருதுகின்றார்கள். பரம்பரையாய் மருத்துவ ஞானமுள்ள நாட்டு மருத்துவர் சிலர் ஆங்கிலம் படியாமலும் நடை உடை பாவனைகளை காலத்திற்குத் தக்கபடி மாற்றிக்கொள்ளாமலுமிருப்பதால் அவ்வகை மருத்துவர்களைப் பார்க்கவும், அவர்களிடம் மருந்து வாங்கி அருந்தவும் மேற்கண்ட நாகரிகக்காரர்கள் விரும்புவதில்லை. அது தங்கள் கல்வி அறிவுக்கும் அந்தஸ்துக்கும் குறைவென்று கருதுகின்றார்கள். ஆங்கில வைத்தியம் படித்து ஆங்கில உடை நடை பாவனையோடு உயர்ந்த வாகனங்களில் வரும் மருத்துவர்களையே நம்பி அவர்களிடம் மருந்து சாப்பிடுவதும், அவர்கள் தங்கள் வீடுகளுக்குவந்து போவதுமே பெருமை என நினைக்கிறார்கள். ஆனால், இப்படி நினைப்பவர்களின் பிதாவும், பாட்டனும் நீண்டநாள் நோயில்லாமல் வாழ்ந்தார்களே அதற்குக் காரணம் என்ன? அப்பெரியோர்கள் பிறக்கும் தருணமுதல் எந்த மருத்துவச்சி அருகிலிருந்து மருத்துவம் செய்து மருந்து கொடுத்தாள். எந்த மருத்துவரிடம் அவர்கள் காலமெல்லாம் உடம்பையும் உயிரையும் ஒப்புவித்திருந்தார்கள் என்பதை இக்காலத்திய கனவான்கள் நினைத்துப்பார்க்க நேரமில்லை. சில பிரபுக்கள் தாங்கள் நாட்டு வைத்தியனிடம் வைத்தியம் செய்துகொள்வதில்லை. அவர்களிடம் நான் ஒருவேளை மருந்துகூட சாப்பிடுவதில்லை எனப் பெருமை பேசுகின்றார்கள். இதேபோல் தமது வீடுகளுக்கு நாட்டு மருத்துவச்சிகளை அழைப்பதில்லை; ஆசுபத்திரி மருத்துவச்சியைத்தான் அழைப்பது வழக்கம் எனவும் கூறுகின்றார்கள். நாட்டு மருத்துவர்களிடம் சில குறைவுகள் இருப்பினும், அவர்களிடம் பரம்பரையாய் வந்த அநுபவ வைத்திய ஞானம் மிகுதியாய் இருக்கின்றது. அது இக்காலத்தில் படித்த ஆங்கில வைத்தியர்களிடமும் காணவியலாது. மேல்நாட்டு நாகரிகமும் வைத்தியமும் நமது நாட்டில் பரவி சுமார் நூறு வருஷங்கள்தான் ஆகிறது. அதற்கு முன்னர் நமது ஜனங்களின் தேகநிலை, ஆயுள்நிலை எப்படி இருந்தது? மேல்நாட்டு வைத்திய முறைகளையும், மேல் நாட்டார் உடை நடை பாவனைகளையும், உணவு குடிவகைகளையும் நாம் ஏற்றபின்னர் நமது தேக

பலம், ஆயுள், நமது குழந்தைகளுடைய நிலைமை, நமது பெண்கள் தேக நிலைமை, பெண்கள் கரு உயிர்க்கும் காலத்தில் அவர்கள் படும் பாடு இவைகளைக் கவனிப்பவர்களுக்கு விளங்காமற் போகாது. ஆனால் ஆங்கில ஆட்சியாலும் ஆங்கிலக் கல்வியாலும் நாம் அடைந்துள்ள வேறு பல நன்மைகளை நாம் என்றும் இல்லையென்று கூற முடியாது. ஆங்கிலேயர்கள் நமது மருத்துவ முறைகளைக் கூடாதெனச் சொல்லவில்லை. இன்னும் இந்தியாவில் உண்டாகும் பல மூலிகைப் பொருள்களே மேல்நாடுகளுக்குச் சென்று இங்கிலீஷ் பெயர்களால் பொடிகளாகவும், நீராகவும், உருண்டைகளாகவும் மாற்றுருக்கொண்டு இங்கிலீஷ் மருந்தென்று நமது நாட்டில் வருகிறதென்பதை உணரவேண்டும். அதன் விவரத்தை மற்றொரு முறை கூறுவோம். மேல்நாட்டாரிடமுள்ள நல்லனவைகளை எல்லாம் நாம் கைக்கொள்ள வேண்டும். வெப்பமான நமது நாட்டுக்கொவ்வாத தீயவைகளை எல்லாம் நாம் கைக்கொள்ளாமல் தள்ளவேண்டும். நமது முன்னோர்கள் நீண்டநாள் தேகபலத்தோடு நோயின்றி வாழ்ந்ததற்குரிய மருத்துவமுறைகளை நாம் கேவலப்படுத்தி தற்காலவீணான இடம்பக் காரியங்களிலேயே நம் கவனம் இழுக்கப்பட்டு அதனால் நம்மவர்கள் நோயாளர்களாகவும் பலவீனர்களாகவும் அற்ப ஆயுளில் அழிந்து போகிறவர்களாகவும் ஆனோமென்பதை நாம் ஒப்புக்கொள்ளாமல் இருக்கவியலாது. தற்காலம் புதிய புதிய நோய்களும் நமது ஜனங்களைப் பிடிக்கிறதென்பதையும் மறுக்கவியலாது. ஆனால், இதனால் நான் மேல்நாட்டு மருத்துவ முறையை முற்றும் கண்டிப்பதாகக் கருதக்கூடாது. அதில் நமது உடம்புக்கு பொருந்தக் கூடியனவைகளைமட்டும் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். நமது முன்னோர்களுடைய உயர்ந்த அனுபவ முறைகளை நாம் அடியோடு இழந்துவிடாமல் போனதுபோக, எஞ்சி நிற்கும் சில மருத்துவ வித்தைகளையாவது காத்து வளர்க்கவேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள பரம்பரை மருத்துவர்களை ஆதரித்தல் வேண்டும். அவர்களுடைய கல்வியையும் உடைநடை பாவனைகளையும் கவனியாது அவர்களிடமுள்ள மருத்துவத்தொழிலை வளர்த்து அதன் பயனைப் பொதுஜனங்கள் பண்டைய காலம்போல் அடையும்படி செய்தல் வேண்டுமெனப் பொதுஜனங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

S. பொன்னுசாமிப் பிள்ளை,
சித்தவைத்தியர், கும்பகோணம்.

# அயம் அல்லது இரும்பு

## அயத்தின் இயற்கைக் குணம்

உலோகங்களில் இரும்பே மிகுதியாகக் கிடைப்பதும், மிகுதியாகப் பரவுவதும், மிகப் பயன்படுவதுமாயிருக்கின்றது. இரும்பில்லாமல் எந்தக் காரியமும் செய்ய இயலாது. இதனை உலோக அரசன் எனக் கூறலாம். மேற்கு ஆப்பிரிக்காவில் ஈஜிப்தில் இயற்கையான தனி இரும்பு மிக உண்டு. இந்தியாவில் சேலம் ஜில்லாவில் இரும்புச் சுரங்கங்கள் இருக்கின்றன. இந்தியாவில் இன்னும் பல இடங்களில் கருமண்ணிலிருந்தும், கற்களிலிருந்தும் இரும்பு எடுக்கப்படுகின்றது. முள்ளந்தண்டையுடைய பிராணிகளின் இரத்தத்தில் இரும்பு மிகுதியாகச் சேர்ந்திருக்கின்றது. சில செடிகளிலும் இரும்பு இருக்கின்றது. இது பிராணிகளுக்கும், தாவரங்களுக்கும் கெடுதி செய்யாத பிராணவாயுவுடன் கலந்திருக்கின்றது. இஃது இயற்கைப் பொருளாக இருந்தும், பிராணவாயுவோடு கலந்திருப்பதுமன்றிக் கெந்தகத்துடனும் கலந்திருக்கின்றது. நிக்கல், கொபலம் என்ற புதிய உலோகங்களோடும், கல்லோடும், மண்ணோடும் சிறிய அளவான வேறு உலோகங்களோடும் இரும்பு கலந்திருக்கும். இயற்கையான தனி இரும்பு நிலத்தில் உண்டாவது மிக அரிது. இரும்பு பிளாட்டினம் என்னும் உலோகமுள்ள கல்லிலும் சேர்ந்திருக்கிறது.

இரும்பு களிம்பு மணமும், சிறு துவர்ப்பும், புளிப்பும் கலந்த சுவையுமுடையது. இரும்பில் ஈரக் காற்றுப் பட்டால் துருப்பிடிக்கும். காந்தம் இரும்பை இழுத்துக்கொள்ளும். கடுக்காய், மாசக்காய் முதலியவைகளின் ஊறல் நீர்க் கியாழங்களில் இரும்பைச்சேர்த்துக் காய்ச்சினால் அது கருநிறமாகும். இதனால் துணிகளுக்குக் கருமை நிறமேற்றுகின்றார்கள்.

## வான் இரும்புக் கற்கள்

சில இடங்களில், நல்ல இரும்பு கல்லாக நிலத்திற் கிடக்கும். இந்த இரும்பு வான்கற்கள் நிலத்திலுள்ள மற்றெந்தப் பொருளுக்கும் வேறாக இருப்பதால் அவைகள் வானிலிருந்து நிலத்தில் விழுவதை யாருங் காணாதிருந்தும் அவைகளை வான் இரும்பு என்று நிச்சயிக்கின்றனர். இவைகளில் 30000 இராத்தல் 40000 இராத்தல் நிறையுள்ளதாக ஒவ்வொரு வான் இரும்பு இருப்பதாகவும் தெரிகின்றது. 1844-ஆம் ஆண்டில் தென் அமெரிக்காவில், இரண்டு முழ கனம் அளவான இரும்பு நெருப்புப்போல் விழக் கண்டார்களாம். 635 இராத்தல் எடையுள்ள ஒரு வான் இரும்புக்கல் 'எல்' கலாசாலையிலும், 252 இராத்தல் எடையுள்ள வான்கல் 'ஸ்மித்சன்' சங்கத்திலும் உண்டு.

தூய்மையான தனி இரும்பு நீலங்கலந்த வெள்ளை நிறமாயிருக்கும். அதனைத் துலக்கினால் பளபளப்பாகவும் இருக்கும். தனி இரும்பு வாணிபத்தில் காணப்படுவதில்லை. நல்ல இரும்பிலும், கெந்தகம், பாஸ்பரஸ், கார்பன், சிலிசி இவைகள் கொஞ்சமாவது கலந்திருக்கும்.

## இரும்பின் வகையும் இரும்பு எடுக்கும் வகையும்

இரும்பு கலந்த மண்ணிலிருந்து, இரும்பைப் பிரித்தெடுப்பதற்கு இரும்பு கலந்த மண்ணையும், சுக்காங்கல் என்னும் கற்சுண்ணாம்பையும், கரியையும் சேர்த்து நெருப்பில் நன்றாய் உருக்கினால் இரும்பு உருகித் தூய்மையாகித் தனியே பிரிந்து விடும். இப்படிச் செய்வதற்கு இரும்பு எடுக்கும் இடத்திற்கு அருகில் சுக்கான் கல்லும், நிலக்கரியும் இருக்கவேண்டும்.

இரும்பைச் சிவக்கக் காய்ச்சித், தண்ணீரில் அதிகமுள்ள "ஐட்ரோஜின்" என்னும் நீர்வளியை (ஜலவாயுவை) அதில் கலக்க விடுவதால் சிறிதும் கலப்பில்லாத நல்ல இரும்பை எடுக்கக்கூடும். இப்பொழுது மூன்று வகையான இரும்புகள் வழங்கி வருகின்றன. சுரங்கங்களில் எடுக்கின்ற இரும்புக் கற்களை உலையிலிட்டு உருக்குவதால் வரும் இரும்பு வார்ப்பு இரும்பென்றும், சீனச்சட்டி என்றும் சொல்லப்படும். இது மிக நொறுக்கலானதால் தகடாகத் தட்டி மடக்கவும், கம்பியாக இழுக்கவும் இயலாது. வியாபாரத்தில் இரண்டு வகை வார்ப்பு இரும்புகள் வரும். அவைகளில் நரை வார்ப்பு இரும்பைவிட வெள்ளை வார்ப்பு இரும்பு கடினமும், நொறுக்கலுமாய் எளிதில் உருக்கக் கூடியதும் கரிவாயுவை மிகுதியாக உடையதுமாகும். நரைவார்ப்பிரும்பு இராவவும், துளைக்கவும் கூடியது. வெள்ளை வார்ப்பிரும்பில் அஃது இயலாது. நரைவார்ப்பு இரும்பு வேண்டிய தளவாடங்கள் வார்ப்பதற்கும், வெள்ளை இரும்பு கம்பிச்சிலாகைகள் தட்டுவதற்கும், எஃகு (உருக்கு)ச் செய்வதற்கும் உபயோகமாகும். வார்ப்பு இரும்பிலேயுள்ள கரிவாயு முதலிய குற்றங்களை நீக்குவதால், தட்டிரும்பு செய்யப்படும். இதைத் தேனிரும்பு என்றும், மருக்கிரும்பு என்றும் சொல்வதுண்டு. இது கடுஞ்சூடாகிய வெண்ணிறச் சூட்டில், ஒன்றோடொன்று ஒட்டவும், விரும்பிய வடிவமாகத் தட்டவும் கூடும். நூறுபங்கு வார்ப்பிரும்பில் 85 பங்கு தட்டிரும்பு எடுக்கலாம். எஃகு அல்லது உருக்கு என்பது இரும்பும், கரி வாயுவும் ஒன்றாகச் சேர்வதால் உண்டாகும் கலவைப் பொருள். எஃகு உருகும் சூட்டைவிட வார்ப்பிரும்பு உருகக் குறைந்த சூடும், தட்டிரும்பு உருக அதிக சூடும் வேண்டும். இதைச் சிவக்கக் காய்ச்சித் தண்ணீரில் நனைக்க இஃது உடனே கெட்டியானதற்கு அடையாளமான வெள்ளை நிறம் கொள்ளும். இதைச் சிவப்பக் காய்ச்சி மெதுவாக ஆறவிட்டால், இரும்பைப்போல் நயமாகும்.



இப்படி எஃகுவை வேண்டியபடி கடினமாகவும், நயமாகவும் செய்து கொள்ளலாம். எஃகு நன்றாகக் காய்ந்து உருகும் தருணத்தில் நமக்கு வேண்டிய ஆயுதங்களாகச் செய்து உருவாக்கிக்கொண்டு, பிறகு கடினமாக்க அவ்வாயுதங்களைச் சிவக்கக் காய்ச்சித் தண்ணீரில் நனைப்பார்கள். இப்படிச் செய்வதற்குத் துவைச்சல் என்று சொல்வதுண்டு. இப்படித் தங்கள் ஆயுதங்களுக்கு வேண்டிய வன்மை மென்மைக்குத் தக்கபடி, தீயில் காய்ச்சி நீரில் தோய்த்துப் பக்குவப்படுத்திக் கொள்ளுவார்கள். இப்படிச் செய்த ஆயுதங்களில் தோன்றும் நிறங்களினால், வன்மை, மென்மை (கடினம், நயம்) என்பதைத் தெரிந்து கொள்ளுவார்கள். எஃகு உடையக் கூடியது. இதனால் கண்ணாடியையும் கீறலாம்.

## சிந்தூரம் செய்ய அய சுத்தி

அய சுத்தியில் பலவகை உண்டு. அதில் தமிழ் வைத்தியர்களால் செய்யப்படும் முறைகளுள் சிலவற்றை இங்குக் குறிப்பிடுவோம். முன் சொன்ன நயமான தட்டிரும்புத் தகட்டையாவது, பழைய குதிரை இலாடத்தையாவது, எஃகு இரும்பையாவது வேண்டிய அளவு தூளாக அரத்தினால் இராவி அதனைத் தண்ணீரில் கழுவி வெயிலில் உலர்த்திக்கொண்டு பழச் சாற்றிலாவது, காடியிலாவது மூன்று நாள் ஊறவைத்துப் பிசைந்து, நல்ல தண்ணீரில் கழுவி வெயிலிற் காயவைத்தால் அயம் சுத்தியாகும்.

இதனைச் சிந்தூரமாகவும், நீறாகவும் (பஸ்பமாகவும்) செய்யும் முறைகள் பல உண்டு. மருத்துவ நூல்களிற் பல முறைகள் காணலாம். இவைகளில் அனுபவத்திற்கு வந்தனவும், எல்லோராலும் எளிதாகவும் விரைவாகவும் செய்யக்கூடியனவுமான சில முறைகளைப் பின்னர் எழுதுவோம்.

## இரும்பு மருந்துகளும், அதன் செயல்களும்

இரும்பு அரப்பொடியை ஊறவைத்து, சுத்திசெய்து சிந்தூரம் அல்லது நீறு (பஸ்பம்) செய்வார்கள். இரும்பிலிருந்து அன்னபேதி முதல் அநேக வித உப்புகளெடுக்கப்படுகின்றன. அயம் சேர்ந்த மருந்துகளைச் சாப்பிடுகிறவர்கள் கீழ் குறிக்கும் விஷயங்களை அறிய வேண்டும். குற்றமற்ற இரும்பாலான மருந்துகளை அருந்துவதால் ஒரு கெடுதியும் உண்டாகாது. அயம் சேர்ந்த மருந்துகள் வயிற்றில் செமித்து(ஜீரணமாகி)இரத்தத்தில்கலந்து அதிலிருக்கும் சிவப்பு அணுக்களை அதிகப்படுத்திச்சிவந்தநிறத்தையும்அதிகப்படுத்தும். இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் குறைந்து, வெள்ளை அணுக்கள் மிகுதியான காலத்தில் உடல் வெளுப்பும், பலக் குறைவும், பாண்டு சோகை முதலிய நோய்களும் ஏற்படுகின்றன. ஆகலால், அந்நோயாளர்களின் இரத்தத்தில் இருக்கவேண்டிய அயத்தின் தன்மையுள்ள சிவந்த அணுக்கள் இல்லை

என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். அக்காலத்தில் அயம் சேர்ந்த மருந்துகளை நோயாளிகள் அருந்தி, நல்ல நிலை அடைவதைக் காண்கின்றோம். ஆனால், நோயாளிகள் உட்கொள்ளும் இரும்பு முழுவதும் உடம்பில் சேருவதில்லை. அயம் அருந்துபவர்கள் மலம் கருநிறமாகக் கழிவதால், மலத்துடன் அயம் வெளிப்படுவதைக் காணலாம். சிறு நீரிலும் (மூத்திரத்திலும்), அயம் அருந்துகிற பெண்களின் முலைப் பாலிலும் அயத்தைக் காணலாம்.

அயம் சாப்பிடுகிறவர்களுக்குச் சீரண சக்தியும் பசியும் மிகுதிப்படும்; நாடி நடை விரைவாகும். அயம் உடல் வன்மையை உண்டாக்கும்; உடலின் வெளி உறுப்புக்களில் கண், உதடு முதலியவைகளில் ஏற்பட்டுள்ள, வெள்ளை நிறத்தை நீக்கிச் சிவந்த நிறத்தை உண்டாக்கும். அயத்தைச் சாப்பிடுங் காலத்தில், பத்துப்பதினைந்து நாளைக்கொருதரம் விட்டுவிட்டுச்சாப்பிடுவது நல்லது. அயத்தை நெடுநாள் விடாமல் சாப்பிட்டால் ஆண்களுக்கு விதையும் (பீஜமும்) பெண்களுக்குப் பால் முலையும் சிறுத்துப் போவதுண்டு. இதனால் சிலர் இளமையில் அயம் அருந்தக் கூடாதென்பார்கள். அயம் சாப்பிடும் போது நடுவில் மலக் கழிவிற்குச் சாப்பிடுவது நலம். அயத்தைச் செந்தூரமாகவும், மண்டூரமாகவும் பலவித உப்புகளாகவும், திநீர்(திராவகம்)களாகவும் செய்து நோய்களுக்குத் தக்கபடி கொடுக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக உடம்பில் இரத்தம் மிகுதியாக உடையவர்களுக்கு அயம் வேண்டியதில்லை. அயமருந்து மிகுதியாய் வயிற்றிலிருந்து கெடுதி விளைந்தால், கடுக்காய்க் குடிநீர் (கஷாயம்) கலந்த ஆமணக்கு நெய், அல்லது குரோசானி ஓமம் கொடுப்பது நல்லது. ஆகாரம் அருந்திய பின்னர் அய மருந்துகளைச் சாப்பிட வேண்டும். அயம் சாப்பிடும்போது ஊன் (இறைச்சி) வகைகளையும், மிகப்புளிப்புள்ள பொருள்களையும், புளிப்பான பழ வகைகளையும் விலக்குவது நல்லது.

இரத்தத்தில் அயம் வேண்டிய வரையில் கலந்தபிறகு, அயத்தை நிறுத்திவிட வேண்டும். அயம் உடம்பில் அளவுக்கு மிகுதியானால், உடம்பின் நிலைமை மாறி ஜீரண சக்தி குறைந்து உடல் பருமனாகும். அய மருந்துகள் செய்யக் கடைகளில் விற்கும் அயப் பொடியை வாங்கக் கூடாது. அதில் உருக்கு இரும்பாகிய தண்டவாளப் பொடியே அதிகம் இருக்கும். சில சமயங்களில் பித்தளைப் பொடியும், மண்ணும் கலந்திருக்கும். ஆதலால், நயமான தட்டிரும்பு, எஃகு இவைகளின் பொடியைக் காந்தத்தினால் ஒற்றி எடுத்துத் தண்ணீரில் நன்றாகக் கழுவிப் பிறகு மருந்துகளுக்கு உபயோகிப்பதே நல்லது. சிலர் தேய்ந்து கழன்றுவிழுந்த குதிரை இலாடங்களைச் செந்தூரங்களுக்கு உபயோகிக்கின்றார்கள்.

# உணவும் உடல் வலிவும்

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் பண்டித என். எஸ். ஆனந்தம் அவர்கள் செய்த உபந்நியாசம்:—

சகோதரர்களே, தற்காலம் நமது நாட்டிலுள்ள மக்கள் சுயமரியாதை அடைய வேண்டும், சுயராஜ்ஜியம் பெறவேண்டுமென்னும் ஆவலுள்ளவர்களாயிருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். இந்தியா தன்னரசு நாடாகாமல், அடிமை நாடாக இருப்பதற்கு வேறு பல காரணங்கள் இருப்பினும் இந்தியர் உடல் வன்மை இல்லாமலிருப்பதே முதற் காரணமாகும். நம்மை ஆளுவோர் நம்மிலும் தேக பலத்தோடு இருக்கின்றார்களென்பதை அறியவேண்டும். நாம் இதனை நன்றாக அறியாமலிருக்கின்றோம். அந்நியர் இதனை நன்றாக அறிந்திருக்கின்றார்கள். சிலர் நமக்கு ஆயுத பலமில்லை, ஒற்றுமை இல்லை, அதனால் நாம் சுயாட்சி அடையஇயலாமலிருக்கிறோம்எனக் கூறலாம்; ஆயுதபலம், ஒற்றுமைமுதலியன இருந்தாலும் தேகபலந்தான் முன்னிருக்க வேண்டும். தேகசக்திக்குப் பின்தான் மற்ற சக்திகளெல்லாம். எந்தக் காலத்திலும் பலவானே இராஜா என்பதை நாம் மறக்கக் கூடாது. வேற்று நாட்டார் நம்மைப் பார்த்த உடனே நாம் வலிமையற்றவர்கள்; நம்மால் ஒன்றும் செய்ய இயலாதென்று தீர்மானித்து மனித வகுப்பில் நம்மைச் சேர்க்காமல் நடத்துகின்றார்கள். ஆகலால், முதலில் நாம் உடம்பால் பலவான்களாக வேண்டும். தெய்வமாகப் பலர் கொண்டாடப்படும் இராமனிடம் உடல்வன்மை சிறந்திருந்ததெனத் தெரிகிறது. இதனைக் கம்பராமாயணத்தில்,

'நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழியதாகும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையிராமன் தோள்வலி கூறு வோர்க்கே.'

என, இராமனுடைய புயபலத்தையே சிறந்ததாகக் கம்பர் எடுத்துக் கூறினார். மிதிலையில் எவராலும் வளைக்க வியலாத பெரியவில்லை வளைத்தொடித்துச் சீதையைமணமுடித்ததும், துஷ்டர்களைவதைத்ததும் இராமனுடைய உடல் வன்மையையே காட்டும். அர்ச்சுனனும், வீமனும் அப்படியே யாவர். தோள்வலி யுள்ளவர்களிடம் வாள் வலியுண்டு. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். உடல்வன்மை யுள்ளவர்களிடம் உயிர் வன்மையுண்டு. இதனையே பெருந்தவப் பெரியாராகிய திருமூல நாயனார் தமது திருமந்திரமாகிய ஆகமத்தில்,

உடம்பால் அழிவர் உயிரால் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தபின்

எனக் கூறினார். ஆதலால் இம்மை மறுமைப் பயன்களை அடைவதற்கு நோயின்றி உடம்பை வளர்த்து ஒவ்வொருவரும் தேகபலம் உடையவர்களாக வேண்டியது இன்றியமையாததாகும். நம் உடம்பு, தாயின் வயிற்றில் 10 மாதம் இருந்து உருவாகும்போதும், வெளியேவந்து 10 மாதம் தாயினிடம் பால் அருந்தும்போதும், தாய் உண்ட உணவின் சாரத்தால் வளர்ந்தது. பின்னர் நாம் உண்டுவரும் உணவினால் வளர்ந்து வருகின்றது. உடம்பென்பது அவரவர் உட்கொள்ளும் பஞ்சபூத காரியமாகிய உணவுப் பொருள்களின் மறு உருவமேயாகும். ஆதலால் உடலுக்குப் பொருந்தும் உணவுகளைத் தெரிந்துண்ணுவதே அறிவுடைமையாகும். நாள்தோறும் நாம் உண்ணும் உணவிலுள்ள ஜீவசக்தியை அழிக்காமல் அப்பொருள்களிலுள்ள சத்தைக் கழிக்காமல் நாம் உண்ணப் பழகுதல்வேண்டும். இந்தியாவுக்கு வெளியேஉள்ளவர்கள்உடல்வன்மை உடையவர்களா யிருப்பதற்கும்,இந்தியாவின் தென்பாகத்திலுள்ளவரினும் வட பாலுள்ளவர்கள் பலவான்களாகக் காணப்படுவதற்கும் அவர்கள் நாள்தோறும் உண்ணும் உணவும்,அவ்வுணவைச் சமையல்செய்யும்பாகமுமேகாரணமாகும். வடநாட்டார்களும் அயல் நாட்டார்களும் பெரும்பகுதி கோதுமையையும், இதரப் பொருள்களையும், ஊன் வகைகளையும் உணவாகக் கொள்ளுகின்றார்கள். தென் இந்தியர் கோதுமையினும் சத்துக்குறைவாகிய நெல்லையே சாப்பிடுகிறார்கள். நெல்லை முதல்தடவை வேகவைத்துலர்த்திப் பின்னர்க் குற்றி உமி நீக்கி உமிநீக்கின அரிசியைப் பின்னும்குற்றித் தீட்டி அதிலுள்ளதவிட்டைமுற்றும் போக்கிவிடுகின்றார்கள். இவர்கள் அரிசி வெண்மையாயும் மழமழப்பாயும் இருப்பதைத்தான் கவனிக்கின்றார்கள்.அதன் பின் அரிசியைத்தேய்த்துத் தேய்த்துப் பன்முறை கழுவிக் கொஞ்சமிருக்கும் தவிட்டையும் அறவே போக்குகின்றார்கள். அதன்பின்னர்ச் சோறாக்குவதற்கு மிகுதியான நீரில் அரிசியை வேகவைத்து அரிசியின் சத்தாகியஅன்னப்பாலை அறவேவடித்துக் கொட்டிவிட்டு கடைசியாய் அரிசியின் சக்கையாகிய சோற்றை உண்கின்றார்கள். காப்பி தேயிலைகளையும், சுக்கு, மிளகு, திப்பிலி, நன்னாரிவேர், கடுக்காய் முதலிய மருந்து பொருள்களையும் மட்டும் வேண்டியபோது காய்ச்சிச் சத்தாகிய கியாழத்தை எடுத்துக்கொண்டு சக்கையை உபயோகிக்காமல் விலக்கி விடுகின்றார்கள். ஆனால் நாள்தோறும் உண்ணும் உணவிலுள்ள சத்தை முற்றும் ஒழித்துச் சக்கையையே அருந்துவது மிக வருந்தத்தக்கதாகும். தலையணைக்கு துணிப்பையில் இலவம் பஞ்சை நிறைய அடைப்பதுபோல் நமது வயிற்றில் இந்த அரிசிச் சக்கையை நாள்தோறும் நிறைய அடைப்பதால் பயனில்லை. முதலில் வெடித்து நன்றாய்ச் சோறுபோல் வேகும்வரையில் நெல்லை வேகவைத்தல் கூடாது. பச்சை நெல்லை உமியைமட்டும் போக்கி மிகுதியாகத் தீட்டாமல், தேய்த்துக் கழுவாமல் ஆண்டுகள்தோறும் சங்கராந்தி என்னும் பொங்கல் புது நாட்களிலும்,



கோயில்களில் நைவேத்தியத்திற்கும் சோற்றிலிருந்து கஞ்சியை வடிக்காமல் தண்ணீரைத் திட்டமாகவைத்துப் பொங்கிக்கொள்வதைப்போல் நாள்தோறும் நாம் சமையல் செய்து கொள்ள வேண்டும். நெல்லோடு ஒரு வேளையாவது கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு, முதலிய தானியங்களில் ஏதாவதொன்றையும் அருந்த வேண்டும். அப்படியே காய்கள், கிழங்குகள், கீரைகள், பூக்கள், துவரை, கடலை, மொச்சை, பயறு, உளுந்து முதலியவைகளைச் சமையல் செய்யும்போதும், அப்பொருள்களோடு தண்ணீரை மிகுதியாகச் சேர்த்து வேகவைத்த நீரை வீணாகக் கீழே வடித்து விடாமல் அப்பொருள்களோடு வெந்தநீர் அப்பதார்த்தங்களிலேயே சுவரும்படி அளவாகத் தண்ணீர் வைத்துக்கொள்ளல் வேண்டும். குழம்பு, மிளகுநீர் முதலியவற்றையும் கறிவகைகளில் உப்பு, புளி, மிளகாய், முதலிய அறு சுவைப் பொருள்களையும் மணப் பொருள்களையும் (வாசனைத் திரவியங்கள்) குறைத்தல் வேண்டும். சில நோயாளிகட்கு மட்டும் விரைவில் செரிப்பதற்காகப் புழுங்கலரிசியைச் சமையல் செய்துகொள்ளலாம்.

நெல்லைக்குற்றி உமி நீக்கின பின்னர் அரிசியின் மேல் செந்நிறமாயுள்ள மெல்லிய தோலில் சுவையும், கொழுமையுமுள்ள சத்து மிகுதியாயிருப்பதை அறியாமல் அந்தத்தோலை, தீட்டிப்பிரித்தெடுத்த தவிட்டையும், சமையல் செய்யும்போது அரிசியைப் பன்முறை கழுவுவதால் அரிசியின் மேல் புறத்துத் தவிட்டோடு கூடிய நல்ல சத்து கலந்த கழிநீரையும், பின்னர் நீரை மிகுதியாக அரிசியுடன் சேர்த்து வேக வைப்பதால் உண்டாகும் சோற்றுச் சத்தாகிய வடிகஞ்சியையும் மாட்டுக்கு உணவாகக் கொடுக்கின்றோம். ஆதலால் நாம் அரிசியிலிருந்து நேரே அடைய வேண்டிய கொழுமையையும் வன்மையையும் மாடுகள் அடைகின்றன. பின்னர் அப்பசுக்களின் கன்றுகளுக்குத் துரோகம் செய்து அப்பசுக்களின் பால் வழியே நாம் அரிசியின் சத்தை அடைகின்றோம். ஆதலால் அன்பர்களே, அரிசியிலுள்ள சத்தையும் மற்ற உணவுப் பொருள்களின் சத்துக்களையும் கெடுக்காமல் பாகம் செய்து நாம் உண்ணும் உணவுகளை அமைதியாக நன்றாகப் பற்களினால் நொறுங்க மென்று உண்ணல் வேண்டும். இவ்விதம் கொஞ்சம் புசித்தாலும் நல்ல உடல் பலத்தை அடையலாம்; நோயின்றி நெடுநாள் வாழலாம். அப்படிச் செய்யாமல் வழக்கம் என்னும் பேய்பிடித்த நம்மக்கள் பழைய வழக்கத்தையே இன்னும் கைவிடாதிருப்பார்களானால் அவர்கள் நோயாளர்களாகவும், வலிவற்றவர்களாகவும், அடிமைகளாகவுமே என்றும் இருந்து காலந்தள்ள வேண்டியவர்களாவர்.

# மருந்து

மக்கள் யாவரும் கவலையற்றிருக்க விரும்புகின்றாராயினும் அதற்குத் தக்கபடி தம்மை பழக்கிக் கொள்ளுகின்றவர்கள் வெகு சிலரே. கவலையற்றிருக்க விரும்புகின்றவர்கள் தம்முடைய உடம்பையும் நெஞ்சத்தையுங் காப்பாற்றிக் கொள்ள வேண்டியவர்களாக விருக்கின்றார்கள். உடம்பிற்கும். நெஞ்சத்திற்கும் உறவு அதிகம். உடம்பு நோய் கண்டால் நெஞ்சம் வருந்துகின்றது. நெஞ்சம் வருந்தினால் உடம்பிளைப்பதும், நெஞ்சம் மகிழ்ந்தால் உடம்பு பருப்பதும் யாவரும் அறிந்ததே. பயம் உண்டானால் இதயந் துடிப்பதும் நரம்புகள் தளர்வதும் உடம்பு நடுங்குவதும் மல மூத்திரங்கள் வெளிப்படுவதும் இயல்பல்லவா? கோப முண்டானால் இரத்தம் கொதித்து கண்ணும் முகமும் சிவந்து வியர்வை யதிகரித்து உடம்பில் எரிச்சலுண்டாவதும் இயல்பல்லவா? கள் குடித்தலால் மனம் மாறுதலும் அதன் முறிவினால் மனம் தெளிவதும். பித்தம் அதிகரித்தால் மனம் தடுமாறலும் மருந்தால் அது தீர்தலும் உண்மையல்லவா? நண்பர்களே, இவைகளை யுற்றுநோக்கின் நெஞ்சு திடத்தால் தேகதிடமும் தேகதிடத்தால் நெஞ்சுதிடமும் அடையவேண்டியதா யிருக்கிறதென்று நன்றாய் விளங்குகின்றது. சிலர் கொழுத்த உணவினால் உடம்பை சுகமாய் வைத்திருக்கலாமென்று நினைத்து உண்ணுகின்றார்கள். அவ்வுணவிற்குத் தக்கபடி உழைக்கின்றதில்லை. உழைப்பில்லையாகவே தூக்கம் பிடிக்கின்றதில்லை. தூக்கம் பிடிக்காததால் நெஞ்சம் மதுபானத்தையும், போகத்தையும் பெரிதும் விரும்புகின்றது. அதனால் தீயளவுகுறைந்து பசிகெடுகின்றது. உடம்பு மெலிகின்றது, நோய் உண்டாகின்றது. அதனால் உடம்போடிருப்பதே வெறுப்பாய்த்தோன்றி நெஞ்சம் தம்மை கவலைக்கு ஆளாக்கி விடுகின்றது. ஆதலால் நண்பர்களே உணவும் உழைப்பும் உறக்கமும் அளவாயிருக்க வேண்டியது. அவை தவறினால் வாதமுதலாய மூன்றும் தம்முள் மாறுபட நோயுண்டாம். இதனை திருவள்ளுவனார்,

'மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று'
"தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்."

என்ற குறள்களுள் விளக்கி யிருக்கின்றார். உடம்பின் தன்மைக்கும் காலத்தின் இயல்பிற்கும் தேசத்தின் சீதோஷ்ண நிலைமைக்கும் தக்கபடி மேற்சொன்ன உணவு, உழைப்பு, உறக்கம் ஆகிய இவைகளை ஒவ்வொருவரும் அளவுபடுத்திக்கொள்ள வேண்டியது. தேகத்திற்குரிய உணவின் தன்மைகளை அறிதற்கு மருத்துவ நூல்கள் நம் பெரியோர் பலவியற்றி யிருக்கின்றார்கள். அவைகளைக் கற்றறிந்து அவைகளின்படி நடக்க ஒவ்வொருவரும் முயலவேண்டும். அவர்கள்தான் கவலையற்றிருக்க முடியும். உடம்பிற்கு இன்றியமையாத உணவைத்தக்கபடி அறிந்து தேடுவதில் ஒவ்வொருவரும் ஊக்கமுடையவர்களா யிருக்கவேண்டும். அது பெரிதும் அருமையான காரியமென்று நினைக்கின்ற பலர் புகையிலைச் சுருட்டையும் பொடியையும், சாராய வகைகளையும், பரத்தையர் போகத்தையும் நாடி அருமையான உடம்பையும் சுகமான அறிவையும் அழியாத செல்வத்தையும் அழித்துக் கொள்ளுகின்றார்கள். நண்பர்களே, கணந்தோறும் புதிதாக ஒவ்வொன்றைக் கற்றுக்கொள்வதே கல்வி. கற்றபடி யொழுகி தம்மைக் கவலைக்கு இடமாக்கிக்கொள்ளாது காத்துக்கொள்ளுவதே மருந்து.

கா. சி. சிவசங்கரன்

மருத்துவப் பெரியாரில் ஒருவராகிய

# சிறுத்தொண்டர் வரலாறு

## முன்னுரை

இவ்வுலகில் நாம் வசிக்கும் நிலப்பகுதியாகிய இந்தியாவென்னும் பரதகண்டமே மக்கள் வாழ்வதற்குரிய வெப்பதட்பங்களைச் சமமாகப் பெற்றுள்ளது. இந்நாட்டின் மூன்று பக்கங்களும் முத்து பவழம் முதலிய மணிகளைக்கொழிக்கும் கடலால் சூழப்பட்டுள்ளது. இதன் வடபாகமோ இமயம் என்றும் பெரிய பனி மலையை அரணாகப் பெற்றுமிளிர்வது. இதில் என்றும் வற்றாத நீரோட்டமுடைய பெரிய ஆறுகள் பல உண்டு. இதன் தென்பாகமே மக்கள் முதன் முதல் தோன்றின இடமென்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றார்கள். மணி மலையையும், குமரி ஆற்றையும், பஃறுளி ஆற்றையும் கொண்ட பெரிய அந்நிலப்பகுதி ஓர் ஊழிக் காலத்தில் கடலில் மூழ்கிவிட்டது. அவ்வாறு மூழ்காது மிகுந்துள்ள பாகமே தமிழ் நாடாகும். இத்தமிழ் மக்களே உலகில் முதல் மக்களாவர். இவர்கள் பேசும் மொழியே முதல் மொழியாகும். இஃது அமிழ்தினுமினிய தமிழ்மொழி எனவும், உயர்தனிச் செம்மொழி எனவும் கூறப்படும். இப்போது உலகில் மக்கள் ஒழுகிவரும் சமயங்களெல்லாம், இத்தமிழ் மக்களிடத்திலிருந்து பரவியனவேயாகும். அன்பிலும் ஒழுக்கத்திலுஞ்சிறந்து கடவுளைக்கண்ட பல பெரியோர்கள் தமிழ்நாட்டில்தான் முதன்முதல் தோன்றினார்கள். அவர்களில் சைவ சமய நெறியில் சிறந்தவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்கள் ஆவார்கள். அவர்களில் கடவுளைக் காண வேண்டுமென்னும் கொள்கை நிறைவேறுதற் பொருட்டுத் துன்பத்தை யெல்லாம் இன்பமாய்க்கண்டு பக்தி வைராக்கியத்தால் செயற்கரிய செய்கையைச் செய்தவர் சிறுத்தொண்டப் பெருந்தகையாவார். இவரைப்பற்றி,

'வாளால் மகவரிந் தூட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேனல்லன் தொண்டுசெய்து
நாளாறில் கண்ணிடந் தப்ப வல்லேனல்லன் நானினிச்சென்று
ஆளாவதெப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே.'

என, முற்றுந்துறந்த முனிவராகிய பட்டினத்தடிகளும் முதன்மையாய் வியந்தெடுத்துக் கூறுகின்றார்.

இப் பெரியாருடைய கதையைப் பொதுவாகத் தமிழ் நாட்டில் கல்வி அறிவு சிறிதுமின்றி மிகத்தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களும் கற்றறிந்த பெரியோர்களும் அறிவார்கள்.

ஆனால், சிறுத்தொண்டருக்குள்ள தனிப்பெருமை என்னவென்பதைப் பலர் அறியார். இவருடைய காலம் இன்னதென்பதையும், நடுவில்வந்த குலம் என்பதில் இவர் என்ன குலத்தினர் என்பதையும் பலர் அறியார். சைவசமய ஆசிரியர்களாகிய திருஞானசம்பந்தர், அப்பர் முதலிய பெரியோர்களின்காலத்தை அறிவதற்கும், அவர்கள் வரலாற்றைநிச்சயிப்பதற்கும் சிறுத்தொண்டர் வரலாறுதான் ஆதாரமாயிருக்கின்றது. இவர் சோழ மண்டிலத்தில் தமிழரசருக்கு அணுக்கராகவும், சேனாதிபதியாகவும் இருந்து வடநாட்டில் பாதாமி என்ற நகரை முற்றுகையிட்டு வெற்றிகொண்டு வந்ததைப்பற்றிப் பாதாமி நாட்டின் மலைக் குகையிலுள்ள கல்வெட்டு வெள்ளிடைமலைபோல் வெளிப்படுத்திவிட்டது. ஆதலால், சிறுத்தொண்டர் காலமும் அவர் காலத்திருந்த சம்பந்தர், அப்பர் முதலானவர்களுடைய காலங்களும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. பண்டைக் காலத்தில் தமிழர்களுக்குள் குலவேற்றுமை இல்லை. நமது பெருமை எல்லாம் அழிந்து மிகச் சிறுமைப்பட்டு விலங்கினும் கேடான நிலையில் வாழ்வதற்குக் காரணமாய் நடுவில் தோன்றியது சாதி வேற்றுமை. இதனை அறிவுடையோர் சிலர் உடைத்துத் தகர்த்துக்கொண்டு வருகின்றார்கள். ஆயினும், இன்னும் அக்கருத்து பாமரமக்களிடம் பரவிச் செயலில் வருவதற்கு, நமது தலைவர்களுக்கு அதிகாரமின்மையால் இயலவில்லை. ஆதலால், சாதி வேற்றுமை இல்லாத பெரியோர்களாகிய அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் நடுவில் வந்த சாதிகளைப் புகுத்திவிடப்பட்டிருக்கும் வரலாற்றில் பெரிய புராணத்தில் உள்ளபடி நமது சிறுத்தொண்டரை மருத்துவர், மாமாத்திரர் என்று கூறப்பட்டிருக்கின்றது. சிறுத்தொண்டர் மருத்துவர் என்பதை மருத்துவ வகுப்பினரில் பலரும் கற்றறிந்த பெரியோர்களில் சிலரும் அறிந்திருக்கிறார்களேயன்றிப் பொது ஜனங்கள் அறியவில்லை. மருத்துவர்களிலும் பலர் தங்கள் மரபில் இத்தகைய பெரியார் ஒருவர் உண்டென்பதை அறியாத



வர்களாயிருக்கின்றார்கள். ஆதலால், மருத்துவர்களின் வரலாறு எழுதப் புகுந்த நாம், முதலில் சிறுத்தொண்டரின் வரலாற்றைச் சேக்கிழார் செய்த பெரிய புராணத்தையும், உமாபதி சிவாச்சாரியாரின் பெரியபுராண சாரத்தையும், ஜனங்கள் கர்ண பரம்பரையாய்ச் சொல்லிக்கொள்வதையும் கொண்டு இதில் சுருக்கமாக எழுதுகின்றோம். மருத்துவ குலப் பெரியோர்களின் வரலாறுகளை விரும்பிக் கேட்ட பல மருத்துவர்களுக்கும் இது வேண்டற்பாலதாகும். சிறுத்தொண்டர் வரலாறு முடிந்த பின்னர் மற்றப் பெரியோர்களின் வரலாற்றைக் குறித்தும் மருத்துவர்களின் உற்பத்தி அல்லது தோற்றம் என்பதுபற்றியும் நாம் ஆராய்ந்துள்ளதை வெளிப்படுத்த எண்ணியுள்ளோம். ஆதலால், அன்பர்கள் இதனை ஆதரிக்க முன் வருவார்களென நம்புகின்றோம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான
மருத்துவப் பெரியார்

# சிறுத்தொண்டர் வரலாறு

சைவசந்தானாசாரியர்களில் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார்
அருளிய

## பெரிய புராணசாரம்

* பல்குமருத் துவரதிபர் செங்காட்டங் குடிவாழ்
படைத்தலைவர் அமுதளிக்கும் பரஞ்சோதி யார்மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர் காழி நாடன்
திருவருள்சேர்ந் தவர்வளருஞ் சீராளன் றன்னை
நல்குதிரு வெண்காட்டு நங்கைசமைத் திடப்பின்
நன்மதிச்சந் தனத்தாதி தலைக்கறிஇட் டுதவப்
புல்கவரும் வயிரவர்தா மகிழ்ந்து மகவருளப்
போற்றியவர் சிவனருளே பொருந்தி னாரே.

---

சேக்கிழார் திருத்தொண்டர் புராணமாகிய
பெரிய புராணத்துள்

## சிறுத்தொண்ட நாயனார் புராணம்

உருநாட்டுஞ் செயல்காமன் ஒழியவிழி பொழிசெந்தீ
வருநாட்டத் திருநுதலார் மகிழ்ந்தருளும் பதிவயலிற்
கருநாட்டக் கடைசியர்தங் களிகாட்டுங் காவேரித்
திருநாட்டு வளங்காட்டுஞ் செங்காட்டங் குடியாகும்.

நிலவியவத் திருப்பதியில் நெடுஞ்சடையார் நீற்றடைவால்
உலகில்வளர் உயிர்க்கெல்லாம் † உயர்காவற் றொழில்பூண்டு
மலர்புகழ் || மா மாத்திரர் தம் குலம்பெருக வந்துள்ளார்
பலர்புகழுந் திருநாமம் பரஞ்சோதி யாரென்பார்

---

* மருத்துவரதிபர்=வைத்திய குலத்தினருக்குத் தலைவர்

† உயர்காவற்றொழில்=உயிரைக் காப்பாற்றும் மருத்துவத்தொழில்

# பாலர் பரிபாலனம்

## பிறப்பு

தாயின் கருப்பையிலிருந்து குழந்தையின் தலை வெளிப்பட்டவுடனே மருத்துவச்சி குழந்தையின் தலையைத் தாயின் உடலிற்படாமல் தாங்கி, முதலில் அதன் கழுத்தைப் பார்த்துக் கொப்பூழ்க் (தொப்புள்) கொடி சுற்றியிருந்தால் அது இறுகிச் சிசுவுக்குச் சேதம் நேராமல் அதனை மெதுவாய் எடுத்துவிட வேண்டும். பிறகு, குழந்தையின் உடல் வெளிவந்தவுடன் அதன் கால், கை அல்லது உடம்பில் கொடி சுற்றிச் சிக்குப்பட்டிருந்தால் அதனையும் மெல்ல எடுத்துவிட வேண்டும்.

குழந்தை பிறந்தவுடன் அழுதற்குக் காரணமும், அழவேண்டிய அவசியமும்:—சூடான தாய்வயிற்றில் தங்கியிருந்து வெளிப்பட்ட குழந்தையின் மேல் குளிர்காற்று வீசுகிறது. இக்காரணத்தாலே குழந்தை அழுகிறது. இப்படி அழுவது நல்லது. அழாவிடில் கெடுதி; ஏனெனில், குழந்தை கருப்பையிலிருக்கும்போது தாயின் இரத்தக் குழாய்க்கும் குழந்தையின், தொப்புள் கொடிக்கும் இரத்த ஓட்டமிருந்து அதனால் அக்குழந்தை வளர்கிறது. குழந்தை பிறந்து சுமார் எட்டு நிமிஷத்தில் அந்த இரத்த ஓட்டம் நின்றுவிடுகிறது. பிறகு, குழந்தையின் இரத்தம் சுத்தமடைய வேறுவழியில்லாமல் அது தானே சுவாசிக்கத் தொடங்குகிறது. அப்போது குழந்தை அழத்தொடங்கினால்தான் நுரையீரல் எனும் மூச்சுப்பை காற்றினால் நிரப்பப்பட்டு இரத்தம் சுத்தமாகும்.

ஆதலினாலேயே மருத்துவர்கள் குழந்தை பிறந்தவுடன் அழாவிடில் கெடுதி அல்லது நோய்க்குறி என்று சொல்லுவார்கள்.

குழந்தைக்கு மூச்சுப் போக்கு வரவு ஏற்பட்டு நன்றாய் அழுதபின் தொப்புள் கொடியை அறுக்கவேண்டும்

தொப்புள் கொடியைத் துணிக்கவேண்டிய வகை:—குழந்தை பிறந்தவுடன் நன்றாய் அழுதாலும், சுமார் அரைநாழிகை அல்லது

த்த ஒட்டம் நின்ற பிறகுதான் அதைத் துண்டிக்கவேண்டும். குழந்தை பிறந்தவுடனேயே கொடியை யறுத்தால் அன்னையினிடமிருந்து கொடி வழியே குழந்தைக்கு வரக்கூடிய இரத்தத்தில் சுமார் கால் ஆழாக்கு (3-அவுன்ஸ்) குறைந்து விடுகிறது. அதனால் குழந்தையின் பலம் குறையும். கொடியைக் கட்டவேண்டியதற்கு வேண்டிய நூல் கயிறுகள் இரண்டு, ஒரு சாண் நீளத்திற்குக் குறையாமல் வெந்நீரில் போட்டுக் கொதிக்க வைத்தெடுத்துச் சுத்தமான ஒரு கிண்ணத்தில் வைத்திருக்கவேண்டும். பிறகு, கையை நன்றாகச் சவர்க்காரம்(சோப்) இட்டுச் சுத்திசெய்துகொண்டு குழந்தையை மல்லாக் கிடத்திக் குழந்தையின் தொப்புள் அடியிலிருந்து மூன்று அங்குலம் அல்லது மூன்று விரற்கிடைக்குமேல் ஷை கயிறுகளில் ஒன்றைக் கொண்டு கொடியைச்சுற்றி இறுகக் கட்டி நன்றாய் முடிப்பிட்டு அதற்கு இரண்டு விரல் அளவுக்கு மேல், மற்றொரு கயிற்றினால் முன் மாதிரி கட்டிமுடிந்து, இவ்விரண்டு கட்டுகளுக்கும் நடுவில் கூர்மையானதும் தூய்மையானதுமான கத்தரியினால் குழந்தையின் உடம்பிற் படாமல் கொடியைக் கத்தரிக்க வேண்டும். கொடியைக்கட்டுங் கயிறும், கத்தரிக்கோலும் மருத்துவச்சியின் கையும் மேலே சொன்னபடி துப்புரவு செய்யாமல் அழுக்குடையதா யிருந்தால் அதனால் தீமை விளையும்.

தலைமுழுக்கு:—ஒரு வாயகன்ற தொட்டியில் இளஞ்சூடான வெந்நீரைவிட்டு அதனுள் சிசுவை வைத்துத் தலையை இடது கையால் வெந்நீருக்கு மேல் உயர்த்தித் தாங்கிக் கொண்டு கடற் பஞ்சினாலாவது, மெல்லிய துணியினாலாவது இலேசாக உடம்பைத் தேய்த்து அதன்மேல் படிந்திருக்கும் வழுவழுப்புப் போகக் கழுவி முழுக்காட்ட வேண்டும். ஆனால் வழுவழுப்புப்போகவில்லையென்று அழுத்தமாகத் தேய்த்துத் தோல் வழண்டு காயப்படும்படி செய்யக்கூடாது. அவ்வழுக்கை போகாமல் கொஞ்சம் இருந்தாலும் அது பின்னால் காய்ந்து உதிர்ந்துவிடும். அழுக்கு கண்ணிலாவது மூக்கிலாவது செல்லாமல் தலையையும் முகத்தையும் வேறே சுத்தமான இளவெந்நீரால்நன்றாய்க் கழுவவேண்டும். பின்னர், மெல்லிய துணியினால் கால், கை, சந்துகளிலும் மடிப்புகளிலும் ஈரமின்றித் துடைக்க வேண்டும். அதன் பின்னர், முகத்தை மறைக்காமல் கம்பளி அல்லது, துணியால் உடம்பைச் சுற்றிக் குளிர்ந்த காற்றுப்படாத



இடத்திலாவது ஒரு பெண்ணின் மடியிலாவது, குழந்தையைக் கிடத்த வேண்டும். உடம்பைச் சுற்றியிருக்கும் துணியில் சிறுநீர், மலம் படாமல் குழந்தையின் மலவாயிலைச்சுற்றி ஒருதுணி வைப்பது நலம்.

இவ்வாறு குழந்தையை முழுக்காட்டின பின்னர், தொப்புள் கொடியில் ஒரு சமயம் இரத்தம் கசிந்துகொண்டிருக்கலாம். கட்டு நழுவினால், அல்லது தளர்ந்துபோனால் தான், இப்படி இரத்தம் கசிந்து கொண்டிருக்கும் கொடி மிகப்பருமனாயிருந்தால் அறுத்த பின் சுருங்கிக்கட்டுத் தளர்ச்சி கொடுப்பதுண்டு இரத்தக்கசிவு கண்டால் முன்போல் ஒரு நூல்கயிறு எடுத்து முன் கட்டுக்கு ஒரு விரற்கிடைக்குக் கீழே அது போலவே பின்னும் கட்டவேண்டும். இரத்தக் கசிவு இல்லாவிடில், ஒரு சுத்தமான துணியினால் கொடியைச் சுற்றிப் பொதிந்து, சிசுவின் வயிற்றின் மேல்நோக்கி மடித்து வயிற்றுடன் சேர்த்து அரைச்சாண் அகலமும், ஒரு முழ நீளமுமுள்ள மற்றொரு மெல்லிய நல்ல வெள்ளைத் துணியால் உடம்பைச் சுற்றிக் கட்டிவைக்க வேண்டும். இஃதன்றி வேறெதையும் இதன்மேல் போடவாவது, கட்டவாவது கூடாது. மேலும் கொடி, தானாக விழுமுன் அதை அசைத்தல் பிடித்திழுத்தல் முதலான சேட்டைகள் செய்யக்கூடாது. விரைவில் விழவில்லை யென்று கொடியைப் பிடித்திழுப்பதினால் கொப்பூழ் எழும்பி இடங்கொடுத்து அதில் குடல் வந்திறங்கிப் பெரிதாக எழும்பிப்போகும். பிறந்து ஒரு வாரத்திற்குள்கொடி தானாக அழுகி உலர்ந்து விழுந்துபோம். கொடி விழுந்தபின் அந்த இடத்திலிருக்கும் புண்ணில், †புண்ணாற்றும் எண்ணெயை அல்லது களிம்பைத் துணியில் தடவிப் போட்டுவந்தால், பத்து பதினைந்து நாட்களில் புண் ஆறிப்போகும்.

கொப்பூழ்க் கொடியைப் பதனமாய்த் துடைத்துக் கட்டிவைப்பதைப்பற்றிய செய்கை முன்சொல்லப்பட்டிருக்கிறது. குழந்தை பிறந்த 24-மணி நேரத்திற்குள் கொப்பூழ்க் கொடியில் மிக மாறுதல் இராது. பிறகு, அதன் அடியில் ஓர் கோடு வரையப்பட்டதுபோன்ற குறி காணும். அக்கோட்டிற்கு மேல்பாகத்தில் கொடி மெதுவாய் உலர்ந்து நிறம்மாறிச் சுருங்கும். மூன்று முதல் ஆறு நாட்களுக்குள் அக்கொடி தானேகாய்ந்துஉதிர்ந்துபோம். பின்னர்க்கொடியிலிருந்து பிரிந்த இரத்தக் குழாய்கள் முறையாய்க் குறுகும். கொடியின்

† மருந்து அட்டவணையில் காண்க.

அடிப்பாகம் நாபிக்குள் ஒடுங்கி, வயிற்றின்மீது குடலைப் பிதுங்க வொட்டாமல் தடுக்கும். கொடியைப்பற்றிய கவனமெல்லாம் அது ஈரமில்லாமலும் புண்ணாகாமலும் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

உடை;—குழந்தைக்கு இரண்டு மாதம்வரை கட்டாயம் வயிற்றைச்சுற்றி மெல்லிய கம்பளித் துணியாவது பருத்தித் துணியாவது கட்டிவரவேண்டும். இதற்காக மெல்லிய கம்பளித் துணியில் நாலு அல்லது ஐந்து அங்குல அகலமும் இரண்டுமுழ (ஒருகஜ) நீளமுமுள்ள துண்டுகள் இரண்டு மூன்றுக்குக் குறையாமல் முன்னரே தயார்செய்து வைத்துக் கொள்வது நலம். குழந்தையின் சிறுநீர் உடுப்பில் பட்டு அழுக்காகி. அடிக்கடி அவைகளை மாற்றும்படி நேரிடாமல், ஒரு முழச் சதுரத் துண்டுகளை மூலை வடிவமாக மடித்துக் கரைகளை இணைத்துத்தைத்து மூன்று மூலைகளிலும் நாடா வைத்துத் தைத்ததுண்டுகள் பத்துப் பனிரண்டு செய்துவைத்திருக்கவேண்டும்.

குழந்தைக்குத் தலை முழுக்காட்டிக் கொப்பூழில் துணி சுற்றினவுடனே மேற்சொல்லிய துண்டுகள் ஒன்றினால், நீளமான பக்கம் அரையைச் சுற்றி வரவும், மூலைப்பக்கம் இரண்டு தொடைகளுக்கும் நடுவில் மலவாயிலை மறைத்து வரவும் சுற்றி, நாடாக்களைச் சேர்த்துக் கட்டவேண்டும். பின்னர், மேற்கண்ட கம்பளித்துணிகள் ஒன்றினால் கொடியை வயிற்றின் மேற்பாகமாக மடித்துச் சேர்த்து வயிற்றை மூன்று சுற்றுசுற்றி மெல்ல இறுக்கி நாடாக்களால் கட்டலாம்; அல்லது தைத்துவிடலாம். அப்படித் தைக்கும்போது, சிசுவின்மேல் ஊசி படாமல் பதனமாய்ச் செய்யவேண்டும். குண்டூசிகளால் குத்திச் சேர்க்கக்கூடாது. மூடூசியினால் (சேவ்ட்டி பின்) தைத்தல் வேண்டும். இல்லையேல் அபாயங்கள் நேரிடும். வயிற்றுக்கு மேல் நெஞ்சில் இந்தக் கட்டுகள் வருதல் கூடாது. அப்படிக் கட்டினால் அதனால் குழந்தை தாராளமாக மூச்சு விடத் தடையுண்டாகும். இப்படிக்கட்டும் வயிற்றுக் கட்டை ஒரு மாதத்திற்கு மேல் கொஞ்சங் கொஞ்சமாக அகலத்தில் குறைத்துவந்து கடைசியில் நிறுத்திவிடலாம். இவ்விதமாக வயிற்றிலும் இடையிலும் துணிகள் சுற்றிக் கட்டிவந்தபின், குழந்தைக்கு மெல்லிய துணியினால் தைத்த தளர்த்தியான ஓர் உடை (சட்டை) போடலாம். பாதங்களுக்கு, மெல்லிய கம்பளி நூலினால் பின்னிய காலுறையிடலாம். குழந்தைக்குக்



கனமான உடுப்புகள் போடுதல் கூடாது. கை கால்களை அதன் விருப்பப்படி நீட்ட மடக்கத் தக்கதாக உடை தளர்த்தியாயிருக்க வேண்டும். இப்படி உடை உடுத்தினபின் சிசுவைத் தாய் மார்போடணைத்துக் கிடத்தினால் இது தாயின் பாலையுண்டு தாயின் உடம்பின் சூட்டினால் செம்மையாய் உறங்கும்.

நல்ல இள வெந்நீரால், குழந்தையின் தலையையும் உடலையும் கழுவ வேண்டும். மற்றெவ்வித முழுக்கும் குழந்தைக்குச் செய்விக்கக்கூடாது. மருத்துவர் உத்தரவின்றி ஆமணக்கெண்ணெய் தவிர, வேறெவ்வித பேதி மருந்துங் கொடுக்கக்கூடாது. சர்க்கரை, தேன் இவைகளைத் தனித்தனியேயாவது, கலந்தாவது வைத்தியருடைய உத்திரவின்றிக் கொடுக்கக்கூடாது. உடுப்புகளில் குண்டூசி உபயோகப் படுத்தக்கூடாது. தலைக்குக் குல்லா போடக்கூடாது. அதனால் வியர்வை உள்ளடங்கி நீர்க்கோவையுண்டாகும். இவைகளைத் தாய்மார் அவசியம் கவனிக்கவேண்டும். நமது நாட்டில் பல ஊர்களில் பெண்கள், குழந்தை பிறந்தவுடன் அதற்குச் சேனையூட்டுதல், அல்லது செவ்வெண்ணெய் புகட்டுதல் என்று சேங்கொட்டை ஒன்றை வெட்டி விளக்கெண்ணெய் என்னும் ஆமணக்குநெய்யில் போட்டுக் காய்ச்சி அந்த நெய்யில் ஒரு துளியைத் தேனில் அல்லது சருக்கரையில் கலந்து நாவில் தடவுவார்கள். இதனால் கருங்கிரந்தி, செங்கிரந்தி, செவ்வாப்பு முதலிய சில நோய்கள் நீங்கலாம். சிலர் தேன் அல்லது சருக்கரைப்பாகு அல்லது இவ்விரண்டுங்கலந்ததைத் தங்களுக்கு அன்பான ஒருவரைக்கொண்டு சிசு பிறந்தவுடனே அதற்குப் புகட்டுகின்றார்கள். அப்படிச் செய்வதனால் செவ்வெண்ணெய் அல்லது சேனை ஊட்டினவர்களின் குணம் அக்குழந்தைக்கும் வருமென்று நம்பிச் செய்கிறார்கள். சேனை யூட்டினவர்களின் குணம் குழந்தைக்கு உண்டாகாது. குழந்தைகள் நல்லவர்களாக வேண்டுமானால், குழந்தைகளுக்கு அறிவு வளருங்காலத்தில் அதனை வளர்ப்போர் தக்கவர்களாயிருந்து அப்பாலர்கட்குத் தக்க அறிவைப் புகட்டுவதினாலும், நெடுநாள் அவர்கள் பார்வையிலிருந்து பழகுவதினாலுமே அவ்வாறு அடைய இயலும். புதல்வரைப் பெறுவது பெரிதல்ல. மக்களை நல்வழியில் வளர்ப்பதுதான் பெரிய காரியம். ஆதலால், பாலரை வளர்க்கும் முறையினை மகளிர் அனைவரும் நன்கு கற்றுக்கொளல்வேண்டும்.

# அத்தியாயம் 2

## குழந்தை உயிரற்றதுபோல் பிறத்தல்

முன் அத்தியாயத்தில் சிசு பிறந்து வாய்விட்டு அழுதலின்பின் செய்யவேண்டிய காரியங்களைக் குறித்துச் சொன்னோம். ஆனால் அப்படி அழாமல் பார்வைக்கு முற்றிலும் உயிரற்றவைகளாகவே சில குழந்தைகள் பிறப்பதுண்டு. இவைகளைச் செத்துப் பிறந்தவைகளென அனுமானித்து அனுபவமில்லாத போலிமருத்துவச்சிகள் அப்புறப்படுத்தி விடுகிறார்கள். இது பெரும்பிழை. சில காரணங்களால் சிசுக்கள் பார்வைக்கு உயிரற்றவைபோல் பிறந்தபோதிலும் உடனே தக்க பக்குவங்கள் செய்வதனால் மூச்சுண்டாகிப் பிழைப்பதுண்டு. இப்படிப் பிழைத்த குழந்தைகளில் மேல்நாட்டில் எண்பது வயது வரை இருந்த நியூட்டன் என்னும் ஆங்கிலப் பெரும்புலவர் ஒருவரென்பது அவர் வரலாற்றால் தெரிகிறது. அறிவின்மையால் இப்படி எத்தனையோ அருமையான உயிர்களுக்குச் சேதம் நேரிட்டிருக்கலாமென்பதை அறியலாம். ஆதலால் இப்படி உயிரற்றதுபோல் பிறக்கும் குழந்தைகளுக்குச் செய்யவேண்டிய முறைகளை இதனடியில் விளக்குவாம். ஒவ்வொருவரும் அவற்றை நன்றாய்ப் படித்தறியவேண்டும்,

குழந்தையின் தொப்புட் கொடியாவது, சிசுவாவது அழுகிப் போயிருந்தாலும், அது உயிருடனிருக்கக் கூடாமையான வேறு எவ்வித உறுப்புக் குறைவு ஏற்பட்டிருந்தாலும், அக்குழந்தை செத்துப் பிறந்திருப்பதாகத் தீர்மானிக்கலாம். இவைகளில்லையேல் குழந்தை உயிருடன் பிறந்திருப்பதாகவே எண்ணிக்கொள்ளவேண்டும். சிசு கருவில் இருக்கும்போது தாய்க்கு நேரிட்ட கொடுமையான நோய்களினாலாவது, ஆபத்துக்களினாலாவது, அக்குழவி பிறந்தவுடனே மூச்சுவாங்குவதற்குப் போதுமான சக்தியற்றதாயிருக்கலாம்; அல்லது இரண்டொரு மூச்சு விட்டுப் பின்னர் வலிமையில்லாததால் சுவாசிக்க இயலாமல் இருக்கலாம்.

---

பாலர்களுக்குண்டாகும் நோய்களுக்கு மருந்துகள் செய்துகொள்ளும் முறைகள் இப்புத்தகத்தின் முடிவில் காண்க.



குழந்தை உயிரற்றதாகப் பிறந்து மூச்சுமில்லாமலிருந்தால் உடனே தொப்புட் கொடியை இரண்டு விரலினால் பிடித்துப் பார்க்க வேண்டும். அதில் நாடி ஓட்டமிருந்தால் குழந்தைக்கு மூச்சு நன்றாய் நிலைபெற்று, அது வாய் திறந்து அழுமட்டும், அல்லது கொடியில் நாடித்துடிப்பு நிற்குமட்டும் கொடியை யறுக்கக்கூடாது. இப்படியிருக்கும் சமயங்களில் மெல்லிய சுத்தமான துணியை விரலில் சுற்றிக் குழந்தையின் வாயிலிட்டு, சளி, அழுக்கு முதலியவற்றை எடுத்து விடவேண்டும். விரலில் சுற்றிய துணி தொண்டைக்குள் படுவதினாலுண்டாகும் கூச்சத்தினால் மூச்சுண்டாகலாம். அன்றியும் மெல்லிய துணியினால் விரைவாக உடம்பெல்லாம் தேய்த்துச் சூடுண்டாக்கி அப்பால் ஒரு சிறு சவுக்கத்தைக் குளிர்ந்தநீரில் நனைத்துப் பிழிந்து அதனால் நெஞ்சிலும், முதுகிலும் மாறி மாறி அடிக்கவேண்டும். குளிர்ச்சி திடீரென உடம்பிற் படவே குழந்தை மூச்சுவிட்டு அழும். இதிலும் மூச்சுண்டாகாவிடில் ஒரு குச்சியில் பஞ்சையாவது, மெல்லிய துணியையாவது சுற்றிப் பாலில் நனைத்துத் தொண்டைக்குள் தடவி நவச்சார உப்பை(ஸ்மல்லிங் சால்ட்)மூக்கில் பிடிக்க வேண்டும். நாபிக்கொடியில் நாடி நின்றவுடனே முந்திய அத்தியாயத்தில் சொல்லிய முறைப்படி கொடியை யறுத்துவிட வேண்டும். அறுக்கும் சமயத்தில் குழந்தையின் முகம் வீங்கிக் கறுத்திருந்தால் கொடியை யறுத்து அதிலிருந்து ஓர் உள்ளங்கை இரத்தம் போகும்படிவிட்டு அதன்பின் இறுக்கிக் கட்டவேண்டும். அப்போது குழந்தையின் சிரசில் கட்டியிருக்கும் உதிரப்பெருக்கு குறைந்து அதனால் நலமுண்டாகும்.

மூச்சுண்டாக வெங்நீர் முழுக்கு:—மேற் சொல்லிய பக்குவங்களினால் குழந்தைக்கு மூச்சுண்டாகாவிடில் கைபொறுக்குஞ் சூடுள்ள வெங்நீருக்குள் குழந்தையின் கழுத்தளவு ஒரு நிமிஷம் வரை வைத்தெடுக்க வேண்டும். அப்படி வெங்நீருக்குள் வைத்தவுடனே உயிர்ப்பு (மூச்சு) ண்டாகாவிடின் வாயகன்ற இரண்டு பாத்திரங்கள் எடுத்து ஒன்றில் இளஞ்சூடான வெங்நீரும், ஒன்றில் நல்ல குளிர்ந்த தண்ணீரும் வைத்துக்கொண்டு குழந்தையை ஒருவர் மல்லாத்தி ஏந்திக்கொள்ள மற்றொருவர் ஒரு குவளையினால் வெங்நீரை மொண்டு அதன் நெஞ்சின் மேல் சுமார் மூன்றடி உயரத்திலிருந்து சடசட

வென்று வார்த்து உடனே குளிர்ந்த நீரை மொண்டு அதையும் படியே வார்க்க வேண்டும். இப்படி மாற்றி மாற்றி வெந்நீரும், தண்ணீரும், வார்க்க மூச்சுண்டாகும்.

மூச்சுண்டாக மற்றொரு பக்குவம்:—மேற் கூறிய முறையாலும் மூச்சுண்டாகாவிடில் அகன்ற பலகையின் மேல் கம்பளியை விரித்து அதன்மேல் குழந்தையை மல்லாக்கக்கிடத்தி ஒரு துணியை மடித்துத் தோளுக்கு நேர்கீழே முதுகில் வைத்துக் குழந்தையின் வாயைத் திறந்து நாவை நன்றாய் முன்னுக்கிழுத்து ஓர் ஆள் பிடித்துக்கொள்ள மற்றொருவர் சிசுவின் தலைப்பக்கமாக நின்று அதன் முழங்கைகளைப் பிடித்துக் கொண்டு நேரே தலைக்குமேல் உயர்த்தி ஒரு விநாடி வைத்திருந்து மறுபடியும் கைகளைக்கீழே விலாப்பக்கமாகக்கொண்டு வந்து அணைத்து இரண்டொருவினாடி விலாவுடன் அழுத்த வேண்டும். இவ்விதமாக ஒரே அளவாய் நிமிஷத்துக்கு 12-அல்லது 16-தடவை செய்ய வேண்டும். இப்படிச் செய்வதில் கையைத் தலைக்கு மேல் உயர்த்தும்போது மூச்சு நுரையீரலுக்குள் தானாகச் சென்று கைகளைக் கீழே கொண்டுவந்து விலாவோடழுத்தும் போது வெளியே போகும். இவ்விதமாகச் செய்யும் போது மூச்சுண்டாவதும் உண்டு.

மூச்சுண்டாக மற்றொரு முறை (ஊதுதல்):—முந்தின முறைப்படி குழந்தையைப் பலகையின்மேல் கிடத்தி அதன் வாயில் மெல்லிய சல்லாவையாவது, பட்டுத்துணியையாவது போட்டு ஊதவேண்டும். அப்படி ஊதுஞ் சமயத்தில் இன்னொருவர் ஒரு கையால் குழந்தையின் மூக்கை இறுகப்பிடித்துக் கொண்டு மற்றொரு கையை அதன் மார்பின் கீழ் பாகமாகிய நெஞ்சுக்குழியின் மேல் வைத்து ஊதிமுடிந்தவுடனே மார்பின்மேலிருக்கிற கையால் இலேசாய் அழுத்தவேண்டும். அப்போது உட்சென்ற மூச்சு வெளியேறும். இவ்வாறு ஒழுங்காய் முன்போல் 12 அல்லது 15-தரம்செய்யவேண்டும். இப்படிச் செய்வதனாலும் மூச்சுண்டாகும். முந்தின முறையைப் போல் இது அத்தனை மேலானதல்ல. இப்படிச் சுமார் ஒரு மணி நேரம் வரைசெய்தும் மூச்சுண்டாகாவிடின் சிசு இறந்ததாக எண்ண வேண்டும்.

# தென் இந்திய மருத்துவ சங்கத்தின் நோக்கங்கள்

1. மருத்துவ குலத்தவர்களை ஒழுங்கு சேர்த்தல்.

2. தமிழ்மருத்துவப் பள்ளிக்கூடங்கள் வைத்து ஆண் பெண்களுக்கு மருத்துவக்கலை கற்பித்தல்.

3. தமிழ் மருத்துவக் கல்லூரி (வைத்திய கலாசாலை) ஏற்படுத்துதல் பரீட்சையில் தேறியவர்களுக்கு யோக்கியதாபத்திரம், பட்டம் முதலியன அளித்தல்.

4. சுகாதார, மருத்துவ பத்திரிகை நடத்தல்.

5. மருத்துவ சாலைகள் ஏற்படுத்தி, ஏழைகளுக்கு இனாமாக வைத்தியம் செய்தல்; கல்வி அறிவுள்ள தமிழ் மருத்துவச்சிகளைக்கொண்டு பிள்ளைப்பேறு பார்த்தல்.

6. வெளிவந்துள்ள பல தமிழ் மருத்துவநூல்களிலுள்ள பிழைகளைத் திருத்தி அந்நூல்களை அச்சிடுதல்; அச்சுக்கு வாராத நூல்களை அச்சிடுதல்.

7. மருத்துவகுலச் சிறுவர் சிறுமிகளைத் தமிழ், ஆங்கிலம் கற்கச்செய்தல்; ஊக்கமுள்ள சிறுவர்களை உயர்தரக் கலாசாலையில் படிக்கவைத்தல்.

8. பல இடங்களில் சுகாதாரம், வைத்தியம் முதலியவைகளைப் பற்றிய விரிவுரைகள் நிகழ்த்துவித்தல்.

9. ஆண்டுகள்தோறும் மருத்துவர் மகாநாடுகூட்டி மருத்துவ வகுப்பினரின் முன்னேற்றத்திற்கும், தமிழ் வைத்திய வளர்ச்சிக்குமுரிய தீர்மானங்கள் செய்தல்.

சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு ஒருவருட சந்தா ரூ. 3—0—0

காரியதரிசி,

**தென் இந்திய மருத்துவர் சங்கம்,**

221, தங்கசாலைத் தெரு,

சென்னை

## சர். C. சங்கர நாயர் அவர்களின் மனைவி, (லேடி சங்கரன் நாயர்)

"பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம்பிள்ளை அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தை உபயோகித்து வருகிறேன். அது மிகவும் குளிர்ச்சியாயும் மணமுள்ளதாயும் இருக்கிறது.

### சென்னை ஐகோட்டு ஜட்ஜ்
## சர். T. சதாசிவ ஐயர் M. A. B. L. அவர்கள்

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் புகழ்பெற்ற பரம்பரை மருத்துவ குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய மருத்துவ சாலையில் செய்யப்படும் மருந்துகளில், ஜீரணிலேகியம், மகாசந்தனாதித் தைலம், கல்நார் பற்பொடி முதலியவைகளை நானும் எனது குடும்பத்தினரும் உபயோகித்து அதன் குணத்தைப் பற்றி மிக மகிழ்ச்சி அடைகின்றோம். இவர் நமது நாட்டு மருத்துவத் தொழிலுக்குரிய மருத்துவ வகுப்பினர்களை நல்ல மருத்துவர்களாக்கவும் மிகப்பாடுபட்டு வருகின்றார்,

### சென்னை ஐக்கோர்ட்டு ஜட்ஜ்
## ஆனரபில் டி. வி. சேஷகிரி ஐயர் அவர்கள்

"பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் சந்தனாதித் தைலம் கண்ணுக்குக் குளிர்ச்சியையும் தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் உண்டு பண்ணுகிறது.

## இராமநாதபுரம் அரசர் M. L. C.
### (சேதுபதி அவர்கள்)

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களை வெகுகாலமாக எமக்குத் தெரியும். அவர் வழி வழி வந்த மருத்துவ குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய அமுத சுரபி என்னும் தாது விருத்தி இலேகியம், மகா சந்தனாதித் தைலம் ஆநந்த பாம், பற்பொடி முதலிய மருந்துகளை உபயோகித்துக் குணமடைந் திருக்கின்றோம். அதைப் பலர்க்கும் மிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்."

## எட்டயபுரம் அரசர்

"பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்கள் தமிழ் வைத்திய முறையில் மிகத் திறமையும், அநுபவமு முள்ளவர் எனக்கு, சென்னையில்சேர்ந்த கொடிய பல் நோய்க்குப் பலமருந்துகள் உபயோகித்தும் பயன்படவில்லை கடைசியாகப் பண்டிதர் ஆனந்தம் பிள்ளையின் பற் பொடி, ராயல் டூத் பேஸ்ட் என்னும் பல் துலக்கும் மருந்தினை உபயோகித்து விரைவில் நலமடைந்தேன். அவருடைய அமுத சுரபி என்னும் தாது விருத்தி மருந்து, பொன் மருந்து, சந்தனாதித் தைலம் முதலியவைகள் எவ்வகையிலும் திருப்தியைத் தருகின்றன. நமது நன்மதிப்புக் குறியாகத் பொற்றோடா, பொற்பதக்கம் முதலிய வெகுமானங்களும் செய்துள்ளோம்."

# அமுத சுரபி
## சிறந்த தாது விருத்தி லேகியம்

இஃது ஆண், பெண் இருபாலருக்கும் எவ்வகைக் காரணங்களினாலாவது வித்து கெட்டு வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சி அடைந்து, இந்திரியக் கசிவு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், பொருந்த விருப்பின்மை, குறி துவளல் முதலிய துன்பங்களால் புத்திரப் பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி, அமுத மயமான உடம்பையும், வலிமையையும், நல்லறிவையும், அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட் பேற்றையும், பொன் போன்ற மேனியையும் தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

அமுத சுரபி உயர்ந்த பல்வகைப் பிசின் வகைகள், வித்து வகைகள், அரிய மூலிகைகளின் சத்துக்கள் முதலிய அரும்பொருள்களைக் கொண்டுள்ளது. இஃது அருந்துவதற்கு இனிமையாகவும், இலேகிய பாகமாகவும் செய்யப் பட்டுள்ளது.

அமுத சுரபியை அருந்தி அநேகர் துன்பங்களினின்றும் நீங்கி இன்பமடைந்திருக்கின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 40-நாள் மருந்து விலை ரூபா | 5 | 0 | 0 |
| 20-நாள் மருந்து விலை ரூபா | 2 | 12 | 0 |

# சீரணி இலேகியம்

ஆணவ மலம் நீங்காது நமது உயிரைப் பற்றி அடிக்கடி துன்பத்தில் அழுந்துவதைப் போல் நமது உடம்பிலிருந்து நாள்தோறும் கழியவேண்டிய மலம் நீங்காமல் உடம்பில் தங்கித் தீமைசெய்குவதால் நாம் அடிக்கடி நோயால் வருந்துகின்றோம். ஆதலால் மல பந்தத்தை நாள்தோறும் கழிப்பதே நோயற்ற வாழ்க்கைக்கு முதற் காரணமாகும்.

சீரணி இலேகியம் யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழித்து, மலச்சிக்கலால் வரும் நோய்கள் எல்லாவற்றையும் நீக்கும் ஓர் அருமருந்து.

சீரணி இலேகியம் உண்ட உணவை நன்றாய்ச் செறிக்கச் செய்து நாள்தோறும் மலத்தைச் செம்மையாய்க் கழிக்கும்; பசியின்மை, பித்தவாயு, புளியேப்பம், குலை எரிச்சல், வயிற்றுநோய், குன்மம், மார்புநோய், இடுப்புநோய், இருமல், மயக்கம், வாந்தி, சுவையின்மைமுதலிய நோய்களை நீக்கும். சீரணி இலேகியத்தை குழந்தை முதல் கிழவர் வரையில் ஆண் பெண் இரு பாலரும் அருந்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| பெரிய டப்பி விலை ரூபா | 3 | 0 | 0 |
| சிறிய டப்பி விலை ரூபா | 1 | 10 | 0 |

# தொழுநோய் அல்லது குஷ்ட நோய்க்கு மருந்து.

## குடிநெய் (மேகநிவாரணகிருதம்)

இது, கருப்பத்திலுண்டான மேக நோய்கள், கலவியில் தனது சேர்க்கை தவறுதல் வந்த மேக நோய்களாகிய பிரந்தி, கருமேகம், செம்மேகம், வெண்மேகம், வெடிமேகம், தோல் தடித்துத் தினவெடுத்தல், தோல் உணர்வற்று மறத்தல், குஷ்டம் முதலிய நோய்களையும், மூலம், பவுத்திரம் முதலிய நோய்களையும் போக்கும் அரு மருந்து.

| | | | |
|---|---|---|---|
| 40-நாள் மருந்து | 5 | 0 | 0 |
| 20-நாள் மருந்து | 2 | 10 | 9 |

மானேஜர்,

தமிழ் மெடிகல் ஹால்

221, தங்கசாலை வீதி சென்னை.

---

# சித்தர் களஞ்சியம்

இஃதோர் அரிய நூல். சரியை, கிரியை, யோகம், ஞானம் வைத்தியம், சோதிடராசி, அட்டமாசித்து முதலியவைகளின் சாரம் அடங்கியுள்ளது. ஆண், பெண், இருபாலரும் முடிவில் பிறப்பற்றுச் சாயுச்சிய பதவியை அடைய இந்நூல் ஒரு சிறந்த துணையாகும். 162 பக்கங் கொண்டது.

விலை ரூ. 1—8. காலிகோ பயிண்டு ரூ. 2.

வைத்திய பூபதி-பண்டிட் K. S. பொன்னம்பலம்,

பரஞ்சோதி வைத்தியசாலை,

கும்பகோணம்.

---

# முயல் இரத்த சம்பந்தமான கேச இரக்ஷணி தைலம்.

புட்டி 1-க்கு ரூ. 1 0 0 புட்டி 3-க்கு ரூ. 2 10 0

முயல் இரத்தம், ஆனைத்தந்தம், உயர்ந்த மூலிகை, பரிமள வாசனை திரவியங்களையும் சேர்த்து தயார்செய்யப்பட்ட இத்தைலத்தைத் தடவிவர மயிர் உதிர்தல், வெளுத்தல் செம்பட்டை முதலியவைகள் நிவர்த்தியாகி கூந்தலை கறுக்கச்செய்து ஆலம் விழுது போல் வளரச் செய்யும், வி. பி. சார்ஜ் வேறு.

எம். சி. நடேச வைத்தியர்,

சுதேச ஔஷதசாலை,

மேலவீதி, கும்பகோணம்.


# வியாசம் எழுதுவோர் கவனிக்க வேண்டியவை

---

வியாசம் எழுதுகிறவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். இராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை, முதலியவைகளும் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. வியாசங்களைத் திருத்தவும், நிறுத்தவும் ஆசிரியருக்கு முழு உரிமையுண்டு. பிரசுரிக்காத வியாசங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர்.

நமது ஆபீசிலிருந்து பதில் வர விரும்புவோர் ரிப்ளை கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கடிதம் எழுதும்போதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| முழுப்பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ரூ. | 8—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ரூ. | 5—0—0 |
| கால் பக்கத்திற்கு ,, | ரூ. | 3—0—0 |

மானேஜர்:—

'மருத்துவன்' ஆபீஸ்,

221, தங்கசாலைத் தெரு,

சென்னை.

# மருத்துவன் பத்திரிகை சந்தாதாரர்களுக்குள்ள பெரிய லாபம்

---

**பாலர்பரிபாலனம், அல்லது பாலர்வைத்தியம்.—**

மருத்துவனில் மாதந்தோறும் எட்டுப்பக்கம் (ஒரு பாரம்) 'பாலர்பரிபாலனம் அல்லது பாலர்வைத்தியம்' என்பதன் சம்பந்தமாகப் பல வைத்திய விஷயங்கள் வெளியாகும். இப்புத்தகம் சுமார் முப்பது பாரத்துக்குமேல் வரும். சந்தாதாரர்கள் அதனைச்சேர்த்து ஒரே புத்தகமாகப் பைண்டு செய்து கொள்ளவேண்டும். இது வீணான வேடிக்கைக் கதைகளைப்போன்றதும், நாவல்களைப்போன்றதுமன்று. இல்லறத்திலிருந்து மக்கள் பேறு அடையும் ஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் பெருநிதியைப் போன்றது. இதில் காணும் ஒவ்வொரு சொல்லும் அமிர்தம்போன்றது. வீட்டிலுள்ள பெண்பாலருக்கு இது மிக முக்கியமாதலால் பெண்கள் படித்துணரும்படியான சாதாரண எளிய நடையில் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. பாலரை நோயணுகாமல் வளர்க்கும் முறைகளும், பாலர்களுக்குவரும் நோய்களுக்குத் தாங்களே பரிகாரம் செய்துகொள்ளும் வழிகளும் இப்புத்தகத்தில் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தைப் பெண்கள் எல்லோரும் படிப்பதால், சிசு தாயின் கருப்பையினின்று வெளிப்படுங்காலத்தில் அருகிலிருந்து பரிகாரஞ்செய்ய மருத்துவச்சி வேண்டியதில்லை. வீட்டிலுள்ள பெண்பாலார் தாங்களே ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளலாம். தாய், கரு உயிர்த்தது முதல் குழந்தைக்குப் பன்னிரண்டு வயது ஆகும் வரையில் குழந்தைகளை அழகுபெறச் சுகவழியில் வளர்க்கவும், நோய்கள் வந்தால் மருத்துவர் (வைத்தியர்) இல்லாமலே தாங்களே பரிகாரஞ்செய்து கொள்ளவும் இப்புத்தகம் மிகவும் முக்கியமானது. இப்புத்தகம் மருத்துவர் மருத்துவச்சிகளுக்கும், மருத்துவ மாணவர் மாணவிகட்கும், பொது ஜனங்கட்கும் தோன்றுத்துணையாக உள்ளது.

மானேஜர்:—**மருத்துவன் காரியாலயம்,**
221, தங்கசாலை வீதி,
சென்னை.

Printed by The Kandan Press, 32, Broadway & Published by Pandit S. S. Anandam, 221, Mint St., Madras.

MARUTHUVAN

# மருத்துவன்

PHYSICIAN

மலர் க. 1928ஆம் நவம்பர்மீ இதழ் உ.

OFFICE ... MADRAS 4 JAN 1929

உள்ளுறை


| | |
|---|---|
| பத்திரிகைகளின் அபிப்பிராயம் | 25 |
| கீழ்நாட்டு மருத்துவமும், மேல்நாட்டு மருத்துவமும் | 29 |
| சுகாதாரப்பகுதி, நோயணுகாவிதி | 34 |
| அன்னபேதி அல்லது அயவுப்பு | 35 |
| செம்பு அல்லது தாம்பிரம், பித்தளை | 36 |
| மாதரும் மருத்துவமும் | 38 |
| கடுக்காய் | 40 |
| யானை உண்ட விளாங்கனி | 43 |
| சிறுத்தொண்டர் வரலாறு | 44 |
| தமிழ்மொழி | 47 |
| இணக்கவயது கமிட்டியின் கேள்வியும், பதிலும் | 49 |
| பாலர் பரிபாலனம் | |


பத்திராசிரியர்
பண்டிட். எஸ். எஸ். ஆனந்தம்

மருத்துவன் காரியாலயம்
221, தங்கசாலை வீதி
சென்னை.

# மருத்துவன்

ஓர் உயர்ந்த வைத்திய மாதப் பத்திரிகை.

இம் மருத்துவன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத வேண்டியவன். இவன் நோயணுகா விதிகளை ஆண், பெண் ஆகிய இரு பாலாருக்கும் போதிக்கக் கூடியவன். வந்த நோய்களை எளிதாகப் போக்கிக் கொள்ளும் வழிகளைக் கூறுபவன். பெண்கள் கருப்பெற்ற காலத்திலும், கரு உயிர்க்கும் காலத்திலும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும், பாலர் பரிபாலனத்தையும், குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அவற்றிற்குரிய பரிகாரங்களையும் அறிவிப்பவன். பொதுவாக மக்கள் நோயின்றித் தேகபலத்தோடும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்குரிய வழிகளை ஆராய்ச்சி முகத்தால் எடுத்து விளக்குபவன். மக்களுக்கு உயிரினும் சிறந்த பொருள் உலகில் வேறொன்றுமில்லையாதலால், ஒவ்வொருவருடைய உயிர் வாழ்க்கைக்கும் இம்மருத்துவன் உற்ற துணைவனாவான்.

## மருத்துவனின் சந்தா விவரம்.

ஆண்டு 1-க்குத் தபாற் கூலியுட்பட உள்நாடாகிய இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 3—0—0.

பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென் ஆபிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ 3—8—0.

தனிக்காப்பி அணா 0—4—0

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

பத்திரிகை ஆங்கிலமாதம் முதல் நாள் வெளிவரும்.

## சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டியவை.

சந்தா தாரர்களாகச் சேருகிறவர்கள் தங்கள் பெயரையும், முழு விலாசத்தையும் அருகிலுள்ள தபாலாபீசோடு தெளிவாக எழுத வேண்டும்.

சந்தா தொகைய முன்னரே செலுத்தியாவது அல்லது வி-பி-யில் செலுத்தியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டின் நடுவில் சேருகிறவர்களுக்கு முன் பத்திரிகைகள் வேண்டுமானால், இருக்கும் சஞ்சிகைகளை மட்டும் அனுப்பப்படும்.

## ...சம் எழுதுவோர் கவனிக்க வேண்டியவை.

வியாசம் எழுதுகிறவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். இராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை, முதலியவைகளும் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. வியாசங்களைத் தி... வும், திருத்தவும் ஆசிரியருக்கு முழு உரிமையுண்டு. பிரசுரிக்காத வியாசங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா

வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர்.

... ஆபிசிலிருந்து பதில் வர விரும்புவோர் ரிப்ளை கார்டாவது ... ல் பிலலையாவது அனுப்பிவைத்தல் வேண்டும்.

... எழுதும்போதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா ... நம்பரைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| இலை ...பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | | ரூ. 8—0—0 |
| ...ள்ள ... பக்கத்திற்கு | ,, | ரூ. 5—0—0 |
| ...கால பக்கத்திற்கு | ,, | ரூ. 3—0—0 |

மானேஜர், மருத்துவன் ஆபீஸ்

221, தங்கசாலைத்தெரு, சென்னை.

## கடிதம் எழுதுவோர் கவனிக்கவேண்டியது

நமது தமிழ் வைத்தியசாலைக்கு வழக்கமாக ஆர்டர் செய்கிறவர்கள் ஒவ்வொரு கடிதத்திலும் முழுவிலாசத்தையும் தெளிவாக எழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ஆர்டர் செய்தவர்களின் விலாசம் தெளிவாகவும் விவரமாகவும் இல்லாததினால் சில ஆர்டர்களுக்கு மருந்தனுப்பமுடியாமல் போனதற்கு மிகவும் வருந்துகிறோம்.

மானேஜர் :—

தமிழ் வைத்தியசாலை,

221 தங்கசாலைத்தெரு, சென்னை.

# மருத்துவன்

ஓர் உயர்ந்த வைத்திய மாதப் பத்திரிகை

---

இம் மருத்துவன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாது வேண்டியவன். இவன் நோயணுகா விதிகளை ஆண், பெண் ஆகிய இரு பாலாருக்கும் போதிக்கக் கூடியவன், வந்த நோய்களை எளிதாகப் போக்கிக் கொள்ளும் வழிகளைக் கூறுபவன். பெண்கள் கருப்பெற்ற காலத்திலும், கரு உயிர்க்கும் காலத்திலும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும், பாலர் பரிபாலனத்தையும், குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அவற்றிற்குரிய பரிகாரங்களையும் அறிவிப்பவன். பொதுவாக மக்கள் நோயின்றித் தேக பலத்தோடும் நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற் குரிய வழிகளை ஆராய்ச்சி முகத்தால் எடுத்து விளக்குபவன். மக்களுக்கு உயிரினும் சிறந்த பொருள் உலகில் வேறொன்று மில்லையாதலால் ஒவ்வொருவருடைய உயிர் வாழ்க்கைக்கும் இம்மருத்துவன் உற்ற துணைவனாவான்.

## மருத்துவனின் சந்தா விவரம்

ஆண்டு 1-க்குத் தபால் கூலியுட்பட உள் நாடாகிய இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 3—0—0.

பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென் ஆபிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. 3—8—0.

தனிக்காப்பி அணா 0—4—0.

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

பத்திரிகை ஆங்கிலமாதம் முதல் நாள் வெளிவரும்.

## சந்தாதாரர்கள் கவனிக்க வேண்டியவை

சந்தா தாரர்களாகச் சேருகிறவர்கள் தங்கள் பெயரையும், முழு விலாசத்தையும் அருகிலுள்ள தபாலாபீசோடு தெளிவாக எழுத வேண்டும்

சந்தா தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி.பி-யில் செலுத்தியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டின் நடுவில் சேருகிறவர்களுக்கு முன் பத்திரிகைகள் வேண்டுமானால், இருக்கும் சஞ்சிகைகளை மட்டும் அனுப்பப்படும்.

# மருத்துவன்

ஓர் மாதத் தமிழ் வைத்தியப் பத்திரிகை

மலர் க. | 1928ஆு அக்டோபர்மீ | இதழ் க.

## நமது பத்திரிகையின் நோக்கம்

— ✽ —

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கையும் அடைவதற்கு, நிலவுலகில் மக்கள் நோயின்றி நெடுநாள் உடல் வன்மையோடு வாழ வேண்டுவது இன்றியமையாததாகும். நோயின்றி வாழ்வதற்குரிய விதிவிலக்குகளையும் மருந்துகளையுங் கூறுவது மருத்துவ நூலாகும். தவத்தாற் சிறந்த சித்தர்கள் இயற்றிய நூல்களே மருத்துவ நூல்களெனப் பெயர் பெறும். இம்மருத்துவ நூல்களில், நோய்கள் வருவதற்குக் காரணங்களும், நோய்கள் வாராமல் தடுப்பதற்கு வழிகளும், வந்த நோய்களை நீக்கும் மணி, மந்திர, மருந்து முறைகளும், காய சித்திக்கு வேண்டிய கற்பங்களும், யோக முறைகளும், ஞான பாகங்களும் அடங்கியுள்ளன.

முன்னைக் காலத்தில் நமது நாட்டில் இவ்வரிய மருத்துவ வித்தையை, வழிவழியே முறையாகக் கற்ற பல மருத்துவப் புலவர்கள் சிறந்து விளங்கினார்கள். இம்மருத்துவர்கள் பொது மக்களுக்கு அவ்வறிவைப் பரப்பிப் பல வகையில் உதவிபுரிந்து வந்தார்கள். [illegible] அத்தகைய கல்வி அறிவுள்ள மருத்துவர்கள் மிகக் [illegible]. ஆதலால், இந்தியாவில் சிறு கிராமங்கள் முதல் பெரிய நகரங்கள் வரை ஆண், பெண், இருபாலா

கலியாணத்தையும் சாந்தி முகூர்த்தத்தையும் ஒரே சடங்காக்கிவிட வேண்டும்.

உலகில் மனிதர்களுக்கு வேண்டிய தானியங்களை உண்டுபண்ணுவதற்கும், செடி கொடி, பூ, காய், கனி முதலியவைகளை உண்டாக்குவதற்கும், நல்ல முதிர்ந்த விதைகளைத் தெரிந்தெடுத்து அதற்குத்தக்க நிலத்தில் பயிரிடுகின்றார்கள். புறா, கோழி, நாய், ஆடு, மாடு, குதிரை முதலிய பிராணிகளை உண்டாக்குவதற்கு அப்பிராணிகளின் உடல் நிலையையும் தக்க வயதையும் கவனிக்கின்றார்கள். மக்கள் உண்டாகி நல்ல வகையாய் வளர்வதற்கும், உடல் வன்மையோடு வாழ்வதற்கும் அடிப்படையான கலியாண விஷயத்தில் இந்தியர் நடந்துகொள்ளும் அறிவீனத்தை அரசாங்க சட்டம் தடுத்தாலன்றி கல்வி, அறிவு, பிரசாரம் முதலியவைகள் விரைவில் பயனளிக்காது. ஆதலால் காருண்ணியமுள்ள சம்மதவயது கமிட்டியாரும், அரசாங்கத்தாரும் இதற்குத் தக்க சட்டத்தை ஏற்படுத்தி இந்துஜன சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள பால்ய விவாகமென்னும் தீமையை யொழித்து நன்மை செய்யவேண்டுமெனப் பெரிதும் கோருகின்றோம்.

---

## மருத்துவனுக்கு நன்கொடை

| | |
|---|---|
| திருநெல்வேலிஜில்லா மருத்துவர் சங்கத்தார் ரூ. | 50—0—0 |
| சைதார்ப்பேட்டை M. சரவணபிள்ளை அவர்கள் ரூ. | 10—0—0 |

மருத்துவனுக்குக் கொடுத்து உதவிசெய்தார்கள், இதனை அன்புடன் பெற்றுக்கொண்டு மருத்துவன்பால் அவர்கட்குள்ள அபிமானத்திற்கு நாம் என்றும் நன்றியுள்ளவர்களாயிருக்கின்றோமென்பதை இம்மருத்துவன் மூலமாகவும் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

இதேபோல் மற்ற மருத்துவர் சங்கத்தார்களும் அன்பர்களும், தங்கள் தங்களால் இயன்ற உதவியைச் செய்து மருத்துவன் நீடித்து செம்மையாக நடைபெறும்படி ஆதரிக்க முன்வரவேண்டுமெனப் பெரிதும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நன்கொடை அளிப்பவர்களின் பெயர்களும், மருத்துவனுக்கு ஒரு வருட சந்தா ரூபா மூன்று அனுப்பினவர்களுடைய பெயர்களும் அடுத்த மாதப் பத்திரிகையில் வெளியாகும்.

பண்டிட். எஸ். எஸ். ஆனந்தம்

# அகத்தியர் இயற்றியது

## மருத்துவர் அல்லது பண்டிதர்

### இலக்கணம்

அறுசீராசிரிய விருத்தம்

பண்டிதன் முறைமை கேட்கில் பழிப்பிலான் சலிப்பி லானாய்க்
கொண்டதோர் உறுப்பில் சற்றுங் குறையிலான் பொறை யுளானாய்
வண்டணி குழலி னாளை மதித்துத்தன் அன்னை போல
மண்டல மொக்க எண்ணில் மருத்துவ னாகுந் தானே.

உத்தம குணங்க ளுள்ளோன் உயர்பெருங் கீர்த்தி யுள்ளோன்
புத்தியா லாய்ந்து சொல்வோன் பொருள்களை யாய வல்லோன்
சத்திய வார்த்தை யுள்ளோன் தருமசிந் தனையே யுள்ளோன்
குத்திர வார்த்தை பேசாக் குணன்பரி காரி யாமே.

மண்ணின்மேற் பெண்ணா ணுக்கும் மற்றுள வுயிர்கட் கெல்லாம்
கண்ணினில் இமைபோற் காக்குங் கடனுளான் கருணையுள்ளோன்
நண்ணிய பெண்ணா ணெல்லாம் நாடிய தந்தை தாயென்
றெண்ணியே மருந்து செய்யில் இடர்ப்பிணி தீரு மன்றே

ஷை வேறு

குணங்கள் குறிகள் நாடியினால் குறித்து மனத்தின் திடமதனால்
பிணங்கி வரும் பிணிபலவும் பின்முன் கண்டு தானறிந்து
வணங்கு மருந்தால் மந்திரத்தால் மணியால் தேவ கடாட்சத்தால்
இணங்கு மெனினீர் மருந்து செய்மின் என்றேமுனிவ ரியம்பினரே.

### மருத்துவர் உடுத்தும் உடை முதலியவை

காங்கு சிவப்புப் பலபுள்ளி கமழும் பட்டு மாவுரிகள்
நீங்க வேண்டுந் துகிலுடுக்க நேரே யாகா மருத்துவர்க்கே
ஓங்கும் வெள்ளைத் துகிலுடுத்தி யுண்மை நினைந்து மருந்துசெயில்
பாங்கு பெறவே பிணிதீரும் பாரிற் பாரும் பண்டிதரே.



ஷை வேறு

சந்தனம் புழுகு மற்றைச் சாந்தினை மெய்யிற் பூசி
அந்தண னாகி வைத்த ஆசிரியன் றாள் போற்றி
சிந்தையிற் செம்மை வாய்ந்து சிவபதம் நெஞ்சி லுன்னில்
வந்தபல் பிணிகள் தீரும் வைத்தியன் முறையென் றோதே.

---

## சுந்தரானந்தர்

கலிநிலைத்துறை

மூன்று கண்ணுளோ ரிருவரா மன்னவரா ரென்னின்
ஆன்ற லோகமீன் றளிப்பவ னாகிய வரனும்
தோன்று மக்கடந் துயரினைப் போக்கிடு வோனும்
என்ற மாமருத் துவனுமே யெனவியம்புவரே.

### பண்டிதரியல்பு கூறல்

பண்டி தன்பரி காரிநல் வைத்திய னெனப்பேர்
கொண்ட வன்பர னாகுமப் பெயரினைக் கொண்டோர்
மண்ட லத்தினில் மருத்துவ நூலறி மாந்தர்
எண்டி சைபுக ழெழுபிறப் பளவுமெண் கணராம்.

கலி விருத்தம்

தெய்வந் தன்னை வழிபடு சிந்தையும்
பொய்யி லாமொழி யும்நற் புலமையும்
ஐய மற்ற வறிவும் பெருமையும்
வெய்ய கோபம் வெறுப்பு மிலாமையும்.

உயிர்கண் மீது கிருபையு மோகையும்
செவியிற் கேட்டிடு சிந்தையு மீகையும்
அயர்வி லாமையு மன்புநி றைந்துளான்
உயர்வ தாகிய வொப்பின் மருத்துவன்.

கலி நிலைத்துறை

நாடி யாதியெண் குறிகளை நன்குற நோக்கல்
பாட தாகுமுன் நோய்களின் பேதத்தைப் பார்த்தல்
வீடு நோயெனின் தகுமருந் தெண்ணியே வியற்றல்
ஈடி லாமருந் தின்னிலை யீந்தபின் னீதல்.

# தென்னிந்திய மருத்துவர் மூன்றாவது மகாநாடு.

---

**அன்புமிக்க மருத்துவ சகோதரர்களே!**

தென்னிந்திய மருத்துவர் மூன்றாவது மகாநாடு நடத்துவதற்கு ஏற்பாடுசெய்து திருநெல்வேலி ஜில்லா முழுவதிலும் தலைக்கட்டு வரிகள், நன்கொடைகள் வசூலிப்பதற்கும் மகாநாடு விஷயமாய் பிரசாரம் செய்வதற்கும் திருச்செந்தூர் மடம் டிரஸ்டி மெம்பர்களையும், பாபவிநாச மடம் டிரஸ்டி மெம்பர்களையும், அவர்களுடன் ஒத்துழைக்க நச்சநல்லூர் மு. குலசேகரம் பண்டிதர் அவர்களையும், திருநெல்வேலி தி. முத்துசாமி பண்டிதரையும், சேர்மாதேவி மு. வேலு வைத்தியரையும், ஷை ஊர் வ. மு. சுவாமி பிள்ளையையும் நியமித்திருப்பதால் இச்ஜில்லா மருத்துவ சகோதரர்களும் மற்ற ஜில்லாவிலுள்ள மருத்துவ சகோதரர்களும், சிலோன், மலாய் நாடு செட்டால் முதலிய ஊர்களிலுள்ள மருத்துவ சகோதரர்களும் தங்கள் தங்களால் இயன்ற அளவு ஒத்துழைத்து இதற்குமுன் 1, 2, மகாநாடுகள் நடந்ததைவிட சிறப்பாக நடத்துவிக்க வேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுவதுடன், மகாநாடு விஷயமாய் ஆலோசனை சொல்லப்பட்டவர்கள் நேரிலும், திராவிடன், குடியரசு பத்திரிகை மூலமாகவும் தெரிவித்து கொள்ளவும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள். மகாநாட்டு விஷயமான அறிக்கைகளும் ஷை பத்திரிகைகள் மூலமாகவே வெளிவருமென்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மகாநாட்டுத் தலைவர் இடம், கால முதலியவைகள் விரைவில் அறிவிக்கப்படும். மகாநாடு சம்பந்தமாய் கடிதங்கள் மணிஆர்டர்கள் அனுப்புகிறவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்பும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

டாக்டர், எம். பி. சங்கரசுப்பு பிள்ளை,
ரிட்டையர்டு டாக்டர்,
பத்தமடை.
**சேர்மாதேவி வழி, திருநெல்வேலி ஜில்லா.**



# மருத்துவ குலத்தாருக்கு முக்கிய அறிக்கை.

---

## இந்திய மஹாவீர் இண்டஸ்டிரியல்ஸ் லிமிடெட், ஆக்ரா

அன்புள்ள சகோதரர்களே!

நமது குலத்தின் நலத்திற்காக மேற்குறித்த பெயருள்ள கைத்தொழில் கம்பெனி ஒன்று நியமிக்கப் பட்டுளது. இது துரைத்தனத்தார் சட்டப்படி ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய கம்பெனி ஒன்று நம்மவர்க்காக நியமித்துள்ள விஷயத்தைப் பற்றிப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நமது குலத்தார் இக்கம்பெனியில் சேர்ந்து இதன் விருத்தியைக் கவனித்து, விரைவில் இது உன்னத நிலையை எய்துமாறு ஊக்கம் செலுத்துவார்களென்று நம்பி அவர்கள் அன்பையும் ஆதரவையும் நாம் எதிர்ப்பார்க்கின்றோம்.

மேற்கூறிய கம்பெனியில் வெவ்வேறாக ஐந்து எந்திரசாலைகளும், தொழிற்சாலைகளும் இணைக்கப்படும். அவையாவன:—சுற்றும், மாவரைக்கும் எந்திரசாலை ஒன்று; அஃது 1000 மணங்குமாவை 24 மணிநேரத்தில் அரைக்கக் கூடியது. 1100 மணங்கு ஐஸ்ஸை 24 மணிநேரத்தில் செய்யக்கூடிய ஐஸ் தொழிற்சாலைகள் இரண்டு. இரும்புத்தொழிற்சாலை ஒன்று. வளையல்கள் முதலியவை செய்யக்கூடிய கண்ணாடி எந்திரசாலை ஒன்று ஆகமொத்தம் ஐந்தாம். இவைகளுக்கு முதற்பணம் பத்து இலட்சம் ரூபாய்வைத்து ஏறக்குறைய 100க்கு 12 ரூபா வருடத்தில் இலாபம் வருமாறு செய்தல்வேண்டும்.

இத்தகைய கம்பெனிகள் நியமிப்பதால் நமது குலத்தவருக்கு உயர்ந்த கைத்தொழில்கள் கிடைப்பதோடு, பணமும் மிகுதியாகக்கிடைக்கும். தாழ்ந்த தொழில்களைக் கைக்கொள்ளுதல் ஒழியும்; இழிவுநீங்கிப் பெருமைவளரும் துரைத்தனத்தார் நம்மைமதித்து நமது உரிமைகளைத் தடையின்றிக் நமக்குக் கொடுக்க முன்வருவார்கள். மற்றக் குலத்தவர்களும் நம்மை மேன்மையாகக் கருதி, நம்மோடு கலந்து, எல்லாவிஷயங்களிலும் ஒழுங்காக நடந்து கொள்வார்கள்.

இக்கம்பெனியில் சேர்வதற்குப் பங்கு ஒன்றுக்கு 5 ரூபா. இத்தொகையை மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாவாக ஐந்து மாதங்களில் கட்டலாம். இது எவ்வளவு எழ்மையான நிலையுள்ளவர்களுக்கும் கஷ்டம் அன்று. இதனால் அவர்களுக்குப் பின்னர் அதிக பொருள் இலாபம் உண்டு. அதுவும் அன்றி, நமது குலத்தவர்கள் கைத்தொழில்களின் மாட்சியையும், வியாபாரத்தின் நுணுக்கங்களையும் நாளடைவில் நன்குணர்ந்து நலம் அடைவார்கள்.

மேற்கூறிய கம்பெனி செழித்து ஓங்குமானால், ஒரு வருடத்திற்கு நூற்றுக் கணக்காக இஞ்சின் டிரைவர்கள், இஞ்சினுக்குக் கரிபோடுபவர்கள், பிட்..

டர்கள், மேஸ்டர்கள், மா அரைப்பவர்கள், ஜல் செய்பவர்கள், நூல் இழைப்பவர்கள், சாயம்போடுபவர்கள், இரும்புவேலை செய்பவர்கள், கண்ணாடிவேலை செய்பவர்கள், கடைச்சல்வேலை செய்பவர்கள் முதலிய பற்பல தொழில் செய்பவர்கள் நமது குலத்தில் ஏற்படுவார்கள். அவர்கள் அத்தொழில்களில் கைத்திறம் அடைவதால், அவர்களுக்கு உயர்ந்தவேலைகள் எங்கு வேண்டுமானாலும் கிடைக்கும் இதைப்பற்றி அதிகமாக விரித்துரைக்க வேண்டியதில்லை.

மேற்குறித்த நலங்களை யுத்தேசித்து நமது குலத்திலுள்ள ஏழைகளும், பணக்காரர்களும், கற்றவர்களும், கல்லாதவர்களும் இக்கம்பெனி விருத்தியாகுமாறு தாங்கள் எவ்வளவு அதிகமாக '5 ரூபா பங்குகள்' எடுத்துக்கொள்ளக் கூடுமோ அவ்வளவு மனப்பூர்த்தியாக எடுத்துக் கொள்ளுமாறு அவர்களை மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இவ்விந்தியநாடு முழுவதும் உள்ள மருத்துவ குலத்தவர்கள் ஏறக்குறைய 27 இலட்சம்பேர் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்றவரையில் '5 ரூபா பங்கு' எடுத்துக் கொள்வார்களானால் நமது எண்ணம் நிறைவேறுவதற்கு என்ன தடையுளது ?

இக்கம்பெனி தலைசிறந்து விளங்கவேண்டுமானால், நம்மவர்களுடைய ஒற்றுமை நலமும், உதவியும் அவசியம் இருத்தல் வேண்டும். ஆதலால் நம்மவர்கள் கருணையோடு இந்த மிகச்சிறப்பான கம்பெனியில் பங்குகள் அதிகமாக வாங்கித்தமது குலத்தின் மேன்மையைக்காப்பாற்றிக் குலத்தவர்களின் வாழ்க்கையைச் சுகமான நல்வாழ்க்கையாகச் செய்யுமாறு அவர்களின் கருணைத்திறத்தை நாடி, அவர்களைப் பன்முறை கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சந்தாதாரர்கள் ஆவதற்கு வேண்டிய அப்ளிகேஷன் பாரமும், சட்டப் புத்தகமும் மேற்கூறிய கம்பெனியின் ஏஜெண்டுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்:

மருத்துவ குலத்தின் நலத்தை வளர்க்கக் கடமைப்பட்டுள்ள அடிமைகள்

இராஜாசந்த் கோலியா, லாகூர்
ஜீவன்மால் லாகூர்
ஹீராலால். பாட்னா.
N. G. அமிர்தகார். B. A LL. B. அம்ரோட்
துர்காபிரசாத் B. A. LL. B.
பண்டிட். எஸ். எஸ். ஆனந்தம். சென்னை.
டாக்டர். ஹார்டையால் சிங் மொரடாபாட்
உத்தாம் சந்ராட்டன்சக். ஔரங்கபாத்.
சையாராம் B. A. L. T. பேடான்.
சுரேந்திரசிங். மீரட்.
சுஜான்சிங். ஆக்ரா.



# மகா சந்தனாதித் தைலம்

## வெண்பா

'இன்ப மணம்வீசம் இளங்கரையத் தான்தடுக்கும்
துன்பமெலாந் தூர விலக்கிவிடும்—அன்பாக
ஆனந்த சின்சந்த னாதித்தை லந்தன்னை
ஆனந்த மாயாண்டு பார்'

இம் மகா சந்தனாதித்தைலம் கண்சிவத்தல், கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், இமை தடித்தல், கண்ணிற் பூவிழுதல், படலங்கள், பார்வைக் குறைவு முதலிய கண்ரோகங்களையும், காது இரைச்சல், காதில் நீர்வடிதல், சீழ்வடிதல், நோதல், கேள்விக் குறைவு (காது மந்தம்) முதலிய செவிநோய்களையும், மூளையின் வலிவுக் குறைவு, மயக்கம், ஒற்றைத் தலைநோய், பிடரி நோய் முதலியவைகளையும், இளமையில் மயிர் நரைத்தல், மயிர் உதிர்தல், தலைவழுக்கை, புழுவெட்டு, பொடுகு முதலியவைகளையும், மூக்கைப் பற்றி வரும் பீனசநோய்களையும், பல்லின்வேரைப் பற்றிவரும் நோய்களையும், பொதுவாகக் கழுத்திற்கு மேற்பட்ட எல்லாப் பிணிகளையும் கண்டிக்கும், மிகுந்த மூளை உழைப்புள்ளவர்களுக்கும், கல்வி பயிலும் மாணவர்களுக்கும், இத் தைலம் மூளைச்சோர்வை நீக்கிக் குளிர்ச்சியைத் தரும் ; தலைமயிரைக் கறுக்கச்செய்து மிகவிரைவில் வளர்க்கும். பக்கவாதம், காசம், இருமல், நீர் வியாதி (மதுமேகம்), கரப்பான், சொறி, சிரங்கு, கைகால் எரிச்சல், தேமல், கற்றாழைநாற்றம் முதலிய நோயுள்ளவர்கட்கு இந்தச் சந்தனாதித் தைலம் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். வைசூரிநோயால் உடல் வெதும்பி, இரத்தம்சுண்டி, மயிர் உதிர்ந்து, அம்மைத்தழும்பினால் அழகற்று வலிவற்றிருப்பவர்கட்கு இது மிக விரைவில் அக்குறைகளை நீக்கி நலந்தரும். நோயில்லாத ஆண் பெண் சிறியோர் முதல் முதியோர்வரை எல்லோரும் இதனைப் பயன்படுத்தலாம். இது சூரியவெப்ப மிகுந்த கோடைக் காலத்திலும், மற்றக் காலங்களிலும் யாதொரு ஐயமுமின்றி நாள்தோறும் தலையிற்றடவி மயிர் வாரிக்கொள்ளவும், தலை முழுகவும் பயன்படும் ; இனிய மணமும் உயர்ந்த குணமுமுடையது.

இம் மகா சந்தனாதித்தைலத்தைப் பல அரசர்களும், பல ஆங்கில மருத்துவர்களும், மற்றும் பல செல்வர்களும் ஆண்டு அனுபவித்த நற்குணங்களை எழுதி இருக்கின்றார்கள். அவைகளை எமது மருந்து விலைப்பட்டியின் நன் மதிப் பிதழ்களில் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| 24-அவுன்சு ரூபா | 4 | 4 | 0 |
| 12-அவுன்சு | 2 | 4 | 0 |
| 6-அவுன்சு | 1 | 3 | 0 |

### சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜாகவிருந்த
### டாக்டர், சர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள்

"பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தை, எங்கள் குடும்பத்தில், உபயோகித்து மிக நன்மை அடைந்தோம். அது மனோகரமாக இருப்பதோடு நல்ல குணமும் செய்கிறது. நெடுநாளாக அத் தைலத்தையே உபயோகித்து வருகின்றோம். அவருடைய மற்ற மருந்துகளை, பலரும் உபயோகித்து நலமடைவதாகத் தெரிகிறது."